# மனித உரிமைக் கல்வி

பாடநூல் - 2



உயிர் வாழ...



பாதுகாக்க..



## குழந்தை உரிமைகள்

முன்னேற...

பங்கேற்க...





ஐக்கிய நாட்டவையின் மனித உரிமைக் கல்விக்கான உலகத் திட்டத்தின் கீழ் (2005-2007)

பள்ளிகளில் மனித உரிமைக் கல்விக்கான தேசியத் திட்டம்

# குழந்தை உரிமைகள்

## மாணவர் கையேடு

ஆசிரியர்

**முனைவர் இ.தேவசகாயம்**

வெளியீடு :

**மனித உரிமைக் கல்வி நிறுவனம்**

6, வல்லபாய் சாலை, சொக்கிகுளம்

மதுரை - 625 002.

தொலைபேசி : 0452-2539520, பேக்ஸ் : 2531874

மின்னஞ்சல் : henri@satyam.net.in

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | குழந்தை உரிமைகள் |
| ஆசிரியர் | : | முனைவர் இ.தேவசகாயம் |
| உள்ளோவியங்கள் | : | செந்தில், சாலை செல்வம், மு.கலைவாணன் |
| உரிமை © | : | மனித உரிமைக் கல்வி நிறுவனம், மதுரை-2. |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| வருடம் | : | ஆகஸ்ட், 2003 |
| கிடைக்குமிடம் | : | மனித உரிமைக் கல்வி நிறுவனம்<br>6, வல்லபாய் சாலை<br>சொக்கிகுளம்<br>மதுரை - 625 002.<br>தொலைபேசி : (0452) 2531874 |
| நன்கொடை | : | ரூ. 40<br>ரூ. 15 மாணவர்கட்கு மட்டும் |
| அச்சிட்டோர் | : | ஆண்டோ ஆர்ட் கிராப்ட்ஸ், சிவகாசி. |



இரா. கிருத்துதாசு காந்தி, இ.ஆ.ப.,
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்
நாள் : 29.8.2003

# அணிந்துரை

இரக்கம் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ள முடியும். இரக்கம் காட்ட மனமில்லாதவரும் இரக்கம் காட்டுவது எப்படி என்பதைத் தெரிந்திருப்பர்.

அதேபோல கடமை ஆற்றுவது எப்படி என்பதைக் கடமையில் தவறுபவரும் கூட அறிந்திருப்பார்.

ஆனால் 'உரிமை' என்பதை விளங்கிக் கொள்வதிலும், அதை விளக்கினாலும் ஒப்புக் கொள்வதிலும் பலருக்கு முரண்பாடுகள் இருக்கும், மனத்தடை இருக்கும். உயிர் இரக்கம், பணிக்கடமை, மனித உரிமை இவை மூன்றும் மனித சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்கு இன்றியமையாதன. ஆனாலும் இரக்கத்தினாலும், கடமையினாலும் நிறைவான 'சமத்துவத்தை' உருவாக்க முடியாது. உரிமைதான் இறுதியாகச் சமத்துவத்தைக் கோலும்.

ஒரு செல்வந்தன் ஏழைக்கு இரக்கங் காட்டி நிதி உதவலாம், உணவுச் சாலை அமைக்கலாம். ஆனால் செல்வர், வறியர் என்ற பாகுபாட்டை இந்த இரக்கத்தால் அச்செல்வனால் களைய முடியாது. தான் உயர்ந்தவன் என்ற கர்வத்தைப், பகட்டைப் பாராட்டும் புறக்காட்சிகளாகவே பலர் தர்மஞ் செய்கின்றனர்.

ஆசிரியர் மாணவர்க்குப் பாடஞ் சொல்லுவதைத் தம் கடமையாக வரித்துக் கொள்கிறார், பீடும், பெருமையும் கொள்கிறார். ஆனால் தானே அறிவுக் கருவூலம்; மாணவர் மூளை வெற்றிடம் என்ற அடிப்படையிலேயே தான் ஊதுவதை எல்லாம் ஏற்க வேண்டியது அந்த மாணவப் பலூனின் கடமை என்பதாகவும் அந்த ஆசிரியக் கடமை வரித்துக் கொள்கிறது, இந்த வகுப்பறைக் கடமையிலும் சமத்துவம் நிகழுவதில்லை, கல்வியறிவு என்பது மட்டுமின்றி அதிகாரமும் பிரம்புவழி பளீரிடுகிறது. பிரம்பு என்னும் அதிகார வன்மம் கடமையாகச் செங்கோலோச்சுகிறது.

ஆசிரியருக்குக் கற்பிப்பதற்கு உரிமை உள்ளதேபோல் மாணவர்க்கும் கற்றுக் கொள்வதற்கும் உரிமை உள்ளது என்பதை விளங்கிக் கொள்வதே உரிமைக் கல்வி. 'ஆப்பிள்' என்பதற்கு வட்ட வடிவமான பழ உணவு என்று சொல்-த் தருவது ஆசிரியர் கடமை என்றும், அவ்வாறே மனப்பாடமாக உள்வாங்குவதே மாணவர் கடமை என்றும் சொல்லும் வகுப்பறை வன்மம், அதிகாரப் பாகுபாடு மாற வேண்டும். 'ஆப்பிள்' என்பது, தான் கண்டறியா ஒரு பண்டம் என்றும், தன் உணவுக்குத் தூரமாகிப்போன ஒரு விலக்கு என்றும், ஆப்பிளுக்கு வக்கில்லாமல் போனவன் என்று தன்னை இன்னொருவனிடமிருந்து உறவு பிரிக்கும் சமுதாய ஆப்பு என்றும் பல மாணவப் பார்வைகள் இருப்பதையும் ஆசிரியர் மாணவரிடமிருந்து கற்றுக் கொள்ளும் இடமும் வகுப்பறைதான் என்பதைப் புரிய வைப்பதுதான் மனித உரிமைக் கல்வி.

இந்தியாவிலேயே முதன்முறையாக இந்த மனித உரிமைக் கல்வியைப் பள்ளிகளுக்குப் பெரிய அளவில் எடுத்துச் சென்றுள்ள மனித உரிமைக் கல்வி நிறுவனத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

முனைவர். இ.தேவசகாயம் வடித்துள்ள 'குழந்தை உரிமைகள்' என்ற இந்த மனித உரிமைக் கல்வி ஏடு, புதிய சமத்துவப் பாடங்களை மாணவர்க்கு மட்டுமல்லாமல் ஆசிரியர்க்கும் ஊட்டும் என்பது திண்ணம்.

**சென்னை** **இரா. கிருத்துதாசு காந்தி**, இ.ஆ.ப.
29.08.2003

# வாழ்த்துரை!

அய்க்கிய நாட்டவையின் மனித உரிமைக் கல்விக்கான பத்தாண்டுகள் 2004ல் நிறைவுறுகிறது. இப்பத்தாண்டுகளில் இது ஒன்பதாவது ஆண்டு. மனித உரிமைக் கல்விக்கான பத்தாண்டுத் திட்டத்தை அய்க்கிய நாட்டவையின் உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொண்டன. ஆனால் ஒருசில நாடுகளே நடைமுறைப்படுத்தின என்பதுதான் உண்மை. இந்நிலையில், இந்தியாவில் தமிழகத்தில் மட்டுமே கடந்த எட்டாண்டுகளாகத் தமிழகப் பள்ளிகளில் மனித உரிமைக் கல்வி அறிமுகப்படுத்தி வருகிறதென்பதை எண்ணும் போது பெருமகிழ்வடைகிறேன். அதுவும், தமிழக அரசின் ஆதி திராவிடர் நலத்துறைப் பள்ளிகளில் இத்திட்டம் கொண்டு செல்லப்படுவது தமிழகக் கல்வி வரலாற்றில் பெரும் புரட்சியாகும்.

கடந்த ஆண்டு, ஆறாம் வகுப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட 'மனித உரிமைக் கல்வி ஓர் அறிமுகம்' என்ற நூல் மாணாக்கரிடையேயும் கற்பிக்கும் ஆசிரியரிடையேயும் பெரும் வரவேற்பைப் பெற்றது. இவ்வாண்டு, குழந்தை உரிமைகள் பாடமாகின்றது. இளமையிலேயே உரிமைகள் பற்றிய கண்ணோட்டம் வளர்க்கப் பெறுகின்ற குழந்தைகள், நாளைய நல்ல குடிமக்களாய் வளர்வர் என்பது உண்மை. அதைப் போலவே பிஞ்சுகளாம் குழந்தைகளுக்குக் குழந்தைப் பருவத்திலேயே அவர் தம் உரிமைகளை உணர்த்தும் போது, உரிமைகளைப் புரிந்து கொள்ளும் குழந்தை முழுமை பெற்ற குழந்தைகளாய் மாறுவர் என்பதால் குழந்தைகளை மையப்படுத்தி இப்பாடம் அமைகிறது. குழந்தைகள் மட்டுமல்லர், குழந்தைகள் மூலம் அவர்களின் குடும்பத்தினர்க்கும், குடும்பத்தார் மூலம் சமூகத்திலும் உரிமைகள் ஊடுருவி மனித உரிமை எனும் கலாச்சாரம் உருவாக வேண்டும் என்பதே எம் நோக்கம்.

பள்ளிகளில் குழந்தை உரிமைகள் பொதுவாக மதிக்கப் பெறவில்லை என்ற குற்றச்சாட்டுகள் நிறையவே எழுந்துள்ள இன்றைய சூழ-ல், குழந்தைகள் மகிழ்ச்சியோடு கூடிய நிறைவான குழந்தைகள் உருவாக வேண்டும் என்பதே எங்கள் அவா. மனித உரிமைக் கல்விக்கான நூல்களும், குழந்தை உரிமைகள் பற்றிய நூல்களும், வெளியீடுகளும் நிறைய வெளி வருகின்றன. குழந்தைகளுக்கான மனித உரிமைப் பாட நூல்கள் தமிழில் இல்லை. இந்நூல் எங்கள் புது முயற்சி. குறைகள் இருக்கலாம், இனி வருங்காலங்களில் இக்குறை உறுதியாகச் சரி செய்யப்படும்.

இந்நூல் உருவாகத் துணை நின்ற அனைவர்க்கும் பாராட்டுக்கள்!

**ஹென்றி டிபேன்**
நிர்வாக இயக்குநர்
மக்கள் கண்காணிப்பகம்-தமிழ்நாடு

*மதுரை,*
29.08.2003

# நன்றியுடன்,,,

குழந்தை உரிமைகளுக்கான சாசனங்களும் பிரகடனங்களும் உடன்படிக்கைகளும் நிறையவே உள்ளன. ஆனால் குழந்தை உரிமைகள் குழந்தைகளுக்குப் புரியும் வண்ணம் இன்னும் தமிழில் பாடநூலாக உருவாகவில்லையென்பது தான் உண்மை. மக்கள் கண்காணிப்பகம் 1999-ல் குழந்தை உரிமைகளைப் பாடநூலாகத் தயாரித்தது. மக்கள் கண்காணிப்பகத்தின் 'மனித உரிமைக் கல்வி நிறுவனம்' முற்றிலும் புதிய வடிவில் குழந்தை உரிமைகளை ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கு இவ்வாண்டு தருவதில் பெருமகிழ்வடைகிறது.

மனித உரிமைக் கல்வி நிறுவனத்தின் கருவாகவும், உருவாகவும் இருப்பவர் மக்கள் கண்காணிப்பக இயக்குநர் திரு.ஹென்றி டிபேன் அவர்கள். அவர் தொடர்ந்து அளித்துவந்த ஊக்கத்தினால்தான் குழந்தை உரிமைகள் நூலாக வடிவெடுத்துள்ளது என்பது மிகையல்ல, உண்மை.

இந்நூ-ன் முதற்பதிப்பில் துணைநின்ற தந்தை. அலோசியஸ் இருதயம் அவர்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன். இந்நூல் உருவாக்கத்தில் அவ்வப்போது யோசனைகள் வழங்கிய அன்னாருக்கு நன்றி.

எழுத்து வடிவில் நூலை வாசித்துத் திருத்தங்களையும், பரிந்துரைகளையும் வழங்கிய மனித உரிமைக் கல்வி நிறுவன சிறப்பு ஆலோசகர் குழு உறுப்பினர்களுக்கு என் நன்றியை உரித்தாக்கு கின்றேன். குறிப்பாக, திரு.ஏ.கே.வெங்கட சுப்பிரமணியன் இ.ஆ.ப. (ஓய்வு) மற்றும் திரு. கிறிஸ்துதாஸ் காந்தி இ.ஆ.ப. ஆகிய இருவரின் ஆலோசனைகளுக்கும் நான் கடமைப்பட்டவன்.

மனித உரிமைக் கல்வி ஆசிரியர்களுக்கான, பாடநூல் பயிலரங்கில் இந்நூல் அச்சேறுமுன் ஆசிரியர்களிடம் வைக்கப்பட்டது. ஆசிரியப் பெருமக்களின் முழுமையான பங்கேற்பிலும், புரித-லும்தான் இந்நூ-ன் வெற்றியிருக்கிறது என்பதனால், ஆசிரியர்களிடம் கருத்துக்கள் பெறப்பட்டன. இவர்களின் கருத்துக்கள் தாராளமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அன்னாருக்கும் எம் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இது ஒரு கூட்டு முயற்சி. இக்கூட்டு முயற்சிக்குத் துணை நின்றோர் பலர். ஒரு சிலரையாவது நான் குறிப்பிட்டாக வேண்டும். பேராசிரியர். சேவியர் ஆரோக்கியசாமி, திட்டச் செயலாளர் அண்ணாதுரை, எங்கள் மண்டல ஒருங்கிணைப்பாளர்களாகிய திரு.வனராசன், திரு.தேவநேயன், திரு.பால்தேவநேசன், திரு.சுந்தர்ராஜன், அலுவலகச் செயலர் செல்வி. சித்ராதேவி, ஆவணக் காப்பகத்தின் திரு.பன்னீர்செல்வம் அனைவருக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். எழுதி, எழுதிக் கொடுத்த போதெல்லாம் முணுமுணுப்பின்றி உதவிய கணிப்பொறிப் பிரிவின் திரு.சோதிபாசுவுக்கும், திரு.ஜெயராமனுக்கும் தனியே நன்றி சொல்ல வேண்டும். ஓவியங்களால் நூலுக்கு அழகு செய்த திரு.செந்தில், சாலை செல்வத்திற்கும் அச்சேற்றிய தோழர் அந்தோணிராசு அவர்களுக்கும் நன்றி.

குழந்தை உரிமைகள் பற்றிய ஆவணத் தொகுப்பிற்கு உதவிய காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக மாணவியர் செல்வி. வித்யா பிரியா, செல்வி. வீரமணி இருவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

இறுதியாக இந்நூலை எழுதுகின்ற போது, எனக்கொரு கரம் தேவைப்பட்ட சூழல். இச்சூழ-ல் எனது கரமாகச் செயற்பட்ட செல்வி குழந்தை தெரசாவிற்கு எப்படி என் நன்றியைத் தெரிவிப்பேன்?

இறுதியாக, மனித உரிமைக் கல்வி ஓர் அறிமுகம் என்ற நூ-ன் முன்னுரையில் எழுதியதையே இங்கு எழுதுகிறேன். பள்ளியில் பயிலும் சிறுவர், சிறுமியரை முன்வைத்து எழுதப்பட்ட நூல் இது. குறைகள் நிறையவே இருக்கலாம்; இருக்கும். இனி வருங்காலங்களில் இக்குறைகள் நீக்கப்பெறும். இக்குறை நீக்கலுக்கு உங்கள் விமர்சனங்கள் துணை நிற்கும் என்ற நம்பிக்கையுடன்....

*மதுரை*
29.08.2003

**இ. தேவசகாயம்**
இணை இயக்குநர்
மனித உரிமைக் கல்வி

# முன்னுரை

அன்புள்ள மனித உரிமைக் கல்வி ஆசிரியர்களே!

ஆறாம் வகுப்பில் மனித உரிமைகளை ஓர் அறிமுகப் பாடமாகக் கற்பித்த நீங்கள் இப்போது மனித உரிமைகள் பற்றிய பல்வேறு பரிமாணங்களை அறிந்திருப்பீர்கள் என நம்புகிறோம். மனிதம் மையமாக்கப்பட்டு மனிதம் காக்கப்பெற, மனிதத்தின் பொதுப் பண்பாம் மாண்பு மதிக்கப்பெற மனித உரிமைகள் தேவை என்பதில் உங்களுக்குத் தெளிவு ஏற்பட்டிருக்கும் என்று நம்புகிறோம்.

மனிதத்தைத் தேடுவது மனிதர்களின் இயல்பான பண்பு என்பதை "**மனிதத்தைத் தேடி**" என்ற தலைப்பிலும்

இம்மனிதம் எப்படியெல்லாம் சிதைக்கப்படுகிறது என்பதை "**மனிதச் சிதைவுகள்**" என்ற தலைப்பிலும்

இச்சிதைவுகளி-ருந்து மனிதத்தை வளர்ப்பது எப்படி என்பதை "**மனிதம் வளர**" என்ற தலைப்பிலும்

வளர்க்கப்பட்ட மனிதத்தை எப்படி காப்பது என்பதை "**மனிதம் மலர**" என்ற தலைப்பிலும் பார்த்தோம்.

மனித உரிமைகள் இயல்பானவை; மனிதர்க்கு உரியவை; எனவே பிரிக்க முடியாதவை. இவ்விளக்கம் மனித உரிமையின் பொதுவான இலக்கணம். மானுடத்தின் பிரிக்க இயலா இவ்வுரிமைகள் ஒரு சிலருக்கு மட்டும் எட்டாக் கனிகளாய் இருப்பதோடு உரிமைகள் இவர்கள் மட்டில் மீறவும் படுகின்றன. இவர்களைத் தாம் சமூகத்தில் நாம் ந-ந்த பிரிவினர் என்கிறோம். பெண்கள், குழந்தைகள், அகதிகள், தாழ்த்தப்பட்ட மக்கள், சிறுபான்மையினர் போன்றோரை இப்பிரிவில் அடக்கலாம்.

எல்லோர்க்குமுரிய மனித உரிமைகள் இப்பிரிவினர்க்கு மட்டும் அதிகமாக மீறப்படுவதால் இவர்தம் உரிமைகளைப் பாதுகாக்க தேசஅளவிலும் அகில உலக அளவிலும் சட்டங்கள், பிரகடனங்கள், சாசனங்கள், உடன்படிக்கைகள் ஏராளம் உருவாக்கப்பட்டுள்ளன.

மனித உரிமைக் கல்வி ஓர் அறிமுகம் என்ற நூல் மனித உரிமை பற்றிய ஒரு சிறிய அளவிலான புரிதலையாவது குழந்தைகளிடம் உருவாக்கியிருக்கும் என நம்புகிறோம். இப்பாடத்தைக் கற்கவிருக்கின்ற குழந்தைகளுக்குக் குழந்தை உரிமை பற்றிய புரிதல் சரியான திசைக்கு இட்டுச் செல்லும் என்பதால் இவ்வாண்டு குழந்தைகள் உரிமைகளைப் பாடமாக்குகிறோம்.

## அடிப்படை நோக்கம்

குழந்தைகள் மானுடத்தின் அரியப் பெரிய செல்வங்கள். விலை மதிக்கப் பெறா இச்செல்வங்களை, நாம் போற்றுகின்ற முறையில்தான் நாளைய சமூகத்தின் முழுமையான வளர்ச்சி இருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால்

- ✪ கிடைத்தற்கரிய செல்வமென்று போற்றப் பெறும் இம்மழலைகளை இச்சமூகம் மழலைகளாக நடத்துகிறதா?

- ✪ குடும்பமென்னும் சிறகில் அணைத்துப் பாதுகாக்கப்பட வேண்டிய இக்குழந்தை இக்குடும்பத்துள்ளே முழுமையான பாதுகாப்பைப் பெறுகிறதா?
- ✪ நம் குழந்தையின் முழுமைக்கு வழிகோல வேண்டிய கல்விமுறை குழந்தைக்கு எதைத் தருகிறது?
- ✪ சமையலறை வரை புகுந்துவிட்ட தொடர்புச் சாதனங்கள் யாரைக் குறிவைத்து நடத்தப்படுகின்றன?

இலாபம் எனும் ஒரே சொல்லை மட்டுமே வேத மந்திரமாகக் கொண்டு இயங்கி வரும் நம்முடைய சமூக நிறுவனங்கள் வணிகமயமாக்கப்படும் குழந்தைகளுக்கு என்ன செய்கின்றன?

*பெறற்கரிய பெரும்பேறாம் குழந்தைகளை*
*கருவில் கலைக்கிறோம்*
*உருவில் அழிக்கிறோம்*
*அவளாயிருந்தால் பாகுபடுத்துகிறோம்*
*இக்குழந்தைகளை*
*கொத்தடிமைகளாக*
*தெருவோரக் குழந்தைகளாக*
*குற்றவாளியாக்கப்பட்ட குழந்தைகளாக*
*கல்வியும் மருத்துவமும் மறுக்கப்பட்டவராக*
*விற்கப்படுபவராக*
*கடத்தப்படுபவராகச் சிதைக்கிறோம்.*

இங்கே சிதைக்கப்படுவது
குழந்தைகள் இல்லை!
நாளைய சமூகம்
நாளைய ஆரோக்கியமான சமூகம்
இன்றைய குழந்தையின் நலவாழ்வில்
உரிமை வாழ்வில்
இருக்கிறது என்பதாலேயே
குழந்தை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.
அதற்காகவே குழந்தை உரிமைகள் பாடநூலாகிறது.

## பாட அமைப்பு

குழந்தை உரிமைகள் என்ற இப்பாடநூல் கீழ்க்கண்ட 3 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. **மலரும் அரும்புகள்**
2. **கருகிய மொட்டுக்கள்**
3. **அரும்புகள் மலர**

# பிரிவு 1
# மலரும் அரும்புகள்

இத்தலைப்பில் 4 பாடங்கள் அமைந்துள்ளன.

## 1). குழந்தைகள் ஓர் அறிமுகம்

மண வாழ்வின் முழுமை மக்கள் பேறு என்கிறோம். இம்மக்கட்பேற்றைச் செல்வத்துள் செல்வம் என்கிறோம். மக்கள்பேறு வெறும் உடல் சார்ந்த நிகழ்வல்ல. கொண்டாடப்பட வேண்டிய ஒன்று. வாழ்வின் ஊற்றும் மையமும் மணவாழ்வில் கிடைக்கும் மக்கள்பேற்றில்தான் இருக்கிறது. மக்கள்பேறு தருகின்ற மகிழ்ச்சி இயற்கையானது, இயல்பானது, பிரிக்க முடியாதது. எனவேதான் பெற்றோர் குழந்தைப்பேற்றில் பெருமிதமடைகின்றனர். இயற்கையை விரும்பும் கவிஞர்கள் கலைஞர்கள் அனைவருமே குழந்தையைக் கொண்டாடுகின்றனர். மனதுள் ஒன்றிப்போன இவ்வியல்பான உணர்வை, அனுபவத்தை மீண்டும் நினைவுபடுத்தும் வகையில் அமைந்ததே முதல் பாடம்.

## 2). மகிழ்ச்சியான குழந்தை

மகிழ்ச்சி குழந்தைகளின் உள்ளார்ந்த இயற்கையான இயல்பு. குழந்தையின் மகிழ்ச்சியை மறுக்கின்ற சமூகம் உயிரற்ற சமூகம். குழந்தைகளின் மகிழ்ச்சியை மதிக்கின்ற குடும்பம் உண்மையான இன்பத்தின் இலக்கணம் வகுக்கும் அழகிய சோலை. குழந்தைகள் வெளிப்படுத்தும் மகிழ்ச்சியின் அடையாளங்கள் அனைத்தும் குழந்தைகளின் மகிழ்ச்சிக்கான தேவைகளே.

குழந்தைகளின் மகிழ்ச்சி மறுக்கப்படுகின்ற போது குழந்தைகளின் தேவைகளும் மறுக்கப்படுகின்றன. தேவைகள் மறுக்கப்படுகின்றபோது உரிமைகளும் மறுக்கப்படுகின்றன.

குழந்தைகளின் மகிழ்ச்சி வேறு தேவை வேறு அல்ல. குழந்தைகளின் மகிழ்ச்சிக்கான தேவைகள் தாம், அவர்களின் அடிப்படை உரிமைகளாகின்றன என்பதைக் காட்டுவதே இப்பாடத்தின் நோக்கம்.

## 3). வாண்டுகள் உலகம்

குழந்தைகள் வெறும் பொம்மைகள் அல்லர்; அறிவற்ற ஜடங்களும் அல்லர். குழந்தைகள் முதியோர் எதிர்பார்க்கின்ற முதிர்ச்சி பெறாதவர்களாக இருக்கலாம். அவர்கள் உலக அனுபவங்களை மிகக் கூர்மையாகக் கூர்ந்து நோக்குகின்ற ஆற்றல் இல்லாதவராகவு மிருக்கலாம். ஆனால் அவர்கள் எதுவுமே தெரியாதவர்கள் அல்லர். குழந்தைகள் ஒவ்வொரு நாளும் வளர்கின்றனர். அவ்வளர்ச்சியினை ஒவ்வொரு தருணமும் வெளிக் காட்டுகின்றனர். குழந்தைகள் தவறு செய்வதில்லை. அக்குழந்தைகளைப் புரிந்து கொள்வதில் நாம் தாம் தவறு செய்கிறோம். இப்புரித-ல் ஏற்படுகின்ற சிக்கல்தான் குழந்தைகளை ந-ந்தவர்களாக்கி விடுகின்றன.

குழந்தைகளிடம் இயல்பாகவே இருக்கின்ற படைப்பாற்றலை ஒளிவுமறைவின்மையை, சமத்துவ உணர்வைப் புரிந்து கொள்ள மறுக்கின்ற சமூகம் தன் கொச்சையான மதிப்பீடுகளுக்கு ஏற்ப குழந்தைகளை வளைக்க ஒடித்து விடுகிறது.

குழந்தைகளின் இயல்பான மேற்கண்ட ஆளுமையோடு கூடிய இயல்புகளை அறிந்து புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலும் உண்மையிலேயே புரிதல் ஏற்பட்டால் குழந்தைகளைக் குழந்தைகளாக நடத்தாப் போக்கி-ருந்து குழந்தைகளைக் காப்பாற்ற முடியும் என்ற நோக்கிலும் இப்பாடம் அமைகிறது.

## 4). நிறைவான குழந்தை

மகிழ்ச்சியான குழந்தை என்ற பாடத்தில் குழந்தைகளின் மகிழ்ச்சிக்கான தேவைகளை குழந்தைகளின் உரிமைகள் என்று கண்டோம். குழந்தைகள் இவ்வுரிமைகளை அனுபவிக்கின்ற வாய்ப்பு பெறும் போது தான் குழந்தைகள் முழுமையான வாழ்வைப் பெறுகின்றனர்.

வாழ்வின் நிறைவு உரிமைகளின் நிறைவில்தான் என்பதை எடுத்துக் காட்டுவதே இப்பாடத்தின் நோக்கம். வாழ்வின் நிறைவு என்பது வெறும் உடல் சார்ந்த தேவைகளின் நிறைவல்ல. மாறாக உடல், உள்ளம், சமூகம், விளையாட்டு, ஓய்வு, கல்வி, மருத்துவம், முத-ய அனைத்துத் தேவைகளும் இணைந்தது என்பதைக் காட்டுவதே இப்பாடத்தின் நோக்கம்.

# பிரிவு 2
# கருகிய மொட்டுக்கள்

நம்பிக்கையோடு அரும்பிய மலர்களாம் குழந்தைகள், செல்வத்துள் செல்வம் என பாராட்டப்பட்ட அரும்புகள் கருகும் மொட்டுகளாய் மாற்றப்படும் அவல நிலையை இப்பிரிவு காட்ட முயல்கிறது.

மானுடத்தின் நோக்கம் மனித நேயத்தோடு கூடிய சமுதாயம் ஒன்றாகத் தான் இருக்க முடியும். ஏற்றத் தாழ்வு, பெண்ணடிமைத்தனம், சுரண்டல், சமனற்ற பகிர்வு, வறுமை, குடும்ப உறவுகளில் காணப் பெறும் சிதைவு, அணு ஆயுதக் குவிப்பு, சாதி, சமய, இன, மொழி பெயரால் நடக்கும் போராட்டங்கள், கலவரங்கள், பாகுபாடுகள் மக்களின் மாண்பை அர்த்தப்படுத்தும் கல்வியை மறுத்தல் போன்றனவெல்லாம் சமூக நல்-ணக்கத்தை மட்டுமல்ல, வாழும் மனுக்குலத்தின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கி விடுகின்றன.

சமத்துவம், நீதி, சுதந்திரம், சமாதானம், உண்மை, மனித நேயம் எனும் மானுட உயர் மதிப்பீடுகளெல்லாம் ஏட்டளவில், சொல்லளவில் நின்றுவிடுகின்ற அவலம். மறுக்கப்பெறும் இம்மதிப்பீடுகளைக் கொண்ட இச்சமூகத்தைச் சந்திக்கும் குழந்தைகள். பிரிவு 2-இல் அடங்கியுள்ள ஆறு பாடங்களும் இச்சூழலைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

## 5. பெண் குழந்தையும் வாழ்வுரிமையும்

குழந்தைகள் பாகுபடுத்தப்படுகின்றனர். இக்குழந்தைகளுள் பெண்குழந்தையோ, கருவறையி-ருந்து கல்லறைவரை ஒரு ஆணாதிக்க சூழ-ல் பாகுபடுத்தப்படுதலால் பெண் குழந்தையின் வாழ்வுரிமையே மறுக்கப்படுதலை இப்பாடம் விளக்குகிறது.

### 6,7. குழந்தைத் தொழிலாளர்கள், கொத்தடிமைக் குழந்தைகள்

குழந்தைகளின் குழந்தைத் தன்மை மறுக்கப்பட்டுக் குழந்தைத் தொழிலாளியாய் கொத்தடிமைக் குழந்தையாய் மாற்றப்பெறும் அவலச்சூழல் இப்பாடங்களில் விளக்கப்படுகிறது.

### 8. தெருவோரச் சிறுவர்கள்

வறுமையும் குடும்பச் சிதைவும் உருவாக்கும் அவலத்தில் உருவாகின்ற குழந்தைகளே தெருவோரக் குழந்தைகள். வாழ்வின் நிச்சயமற்றச் சூழ-ல் அனைத்து அடிப்படை உரிமைகளையும் இழந்து நிற்கும் குழந்தைகளை உலகிற்கு அறிமுகப்படுத்துகிறது இப்பாடம்.

### 9. ஊனமுற்ற குழந்தைகள்

இரக்கமற்ற ஆதரவற்றச் சூழ-ல் வாழ்வுரிமை மறுக்கப்பட்ட இன்னொரு வகை பிரிவினர் தாம் ஊனமுற்றக் குழந்தைகள். உடலால் ஊனமுற்றோரை உள்ளத்தாலும் ஊனமாக்கிச் சிதைக்கும் இச்சமூகத்தில் இவர்களுக்கும் வாழ்வுரிமையுண்டு என்பதை உணர்த்துவதே இப்பாடம்.

### 10. கடத்தப்படும் குழந்தைகள்

வறுமையும் ஏற்றத்தாழ்வும் நியாயப்படுத்தப்பட்ட இச்சமூக அமைப்பில், குழந்தை உரிமைகள் கேவலமாக மறுக்கப்பட்ட இச்சமூக அமைப்பில் குழந்தைகள் பாகுபடுத்தப்படுவதோடு குழந்தைகளை ஒரு பொருளாகவே கருதி விற்கப்படுவதும் இன்றைய நடைமுறை. குழந்தைகள் மீது நடத்தப்பெறும் இந்த வன்முறை குழந்தைகளின் மாண்பினை எவ்வாறெல்லாம் பாதிக்கிறது என்பதை எடுத்துரைப்பதே இப்பாடம்.

## பிரிவு 3
## அரும்புகள் மலர

இப்பிரிவில் மூன்று பாடங்கள் அடங்கியுள்ளன. அவற்றுள் குறிப்பானவை இரண்டு. ஒன்று பொதுவானது. கருகிய மொட்டுக்களை மலர வைக்க என்ன செய்யலாம் என்பதற்கான விடைகளாக இப்பாடங்கள் அமைகின்றன.

### 11. கல்வியுரிமை

குடும்பத்தில் பிறக்கும் குழந்தை குடும்பச் சூழ்நிலையி-ருந்து அடுத்துக் காலெடுத்து வைக்கும் இடம் பள்ளிதான். சமூக மயமாக்கலுக்கான முதல் முயற்சி குடும்பத்தில் தோன்றினாலும், கல்வியின் மூலம்தான் இது கூர்மையடைகின்றது. இக்கல்விதான் தனிமனிதரின் சுய அடையாளத்தை, குழந்தைப் பருவத்தின் அர்த்தத்தை குழந்தையின் மாண்பு என்னும் குணங்களைக் கண்டறியும் ஆற்றலை வளர்க்க உதவுகிறது. இவ்வாற்றலை,

தனி மனிதனின் சமூக பங்கேற்பை, வளர்க்க உதவும் கல்வி எல்லோர்க்கும் உரியது என்பதால் இது குழந்தைகளின் அடிப்படை உரிமை. ஆகவே இக்கல்வியுரிமை இங்கு பாடமாகிறது.

## 12. குழந்தை நல உரிமை

நாளைய வலுவான சமூகத்தை உருவாக்கவிருக்கும் இன்றைய குழந்தைகள் சத்துணவுக் குறைவினால், பட்டினியால் வாடுவர் எனில் நாளைய வலுவான சமூகம் எப்படி சாத்தியமாகும்? சத்துணவு இன்மை வெறும் உடல் சார்ந்த பிரச்சனை அல்ல. உளம் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த பிரச்சனை; சுருக்கமாகக் குழந்தையின் வளர்ச்சி சார்ந்த பிரச்சனை, நலம் பாதுகாக்கப் பெற வேண்டும் என்ற உரிமைக் கண்ணோட்டம் குழந்தையின் நலவுரிமை என்ற பாடத்தில் முதன்மை பெறுகிறது.

## 13. குழந்தைப் பாதுகாப்பு உரிமை

குழந்தைகளும் மனிதர்களே என்ற நிலையில், அவர்கள் உரிமைகள் காக்கப் பெற வேண்டும். இவர்கள் உரிமையும் மனித உரிமையே என்ற அடிப்படையில் குழந்தை பாதுகாப்புரிமை என்ற பொதுவான தலைப்பில் அமைகிறது.

## 14. சாதனைக் குழந்தைகள்

குழந்தைகள் இயல்பாகவே சாதிக்கும் பண்புகளைப் பெற்றவர்கள். இப்பண்புகளை வளர்க்கும் வகையில், இக்குழந்தைகள் வளர்க்கப்பட்டால் இப்பண்புகள் வியக்கத்தகு வகையில் வெளிப்படுவது உண்மை.

குழந்தைகள் உரிமை மறுக்கப்பட்டு பாகுபடுத்தப்பட்ட சூழ-லும் உள்ளார்ந்த திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். இச்சாதனைகளைப் புரிந்த இக்குழந்தைகளைக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திக் குழந்தைகளிடம் சாதிக்க முடியும் என்ற உணர்வை உருவாக்குவதே இப்பாடம்.

***இறுதியாக...***

- இந்நூல் பாடநூல் (Text book) அல்ல, ஒரு வழிகாட்டியே (Guide) நம்முன் புதைந்து கிடக்கும் அனுபவங்கள் பாடங்களாகட்டும்.
- பாடங்கள் தனித்தனித் தலைப்புகளைக் கொண்டிருந்தாலும், தனித்தனிப் பாடங்கள் அல்ல. பாடங்கள் அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையன.
- ஆசிரியரின் முழுமையான வழிகாட்ட-ல், மாணாக்கர் தம் பங்கேற்பில் தான் பாடத்தின் நோக்கம் நிறைவுறும் என்பதனை மறக்க வேண்டாம்.
- இது தேர்வு சார்ந்த, வகுப்பறை சார்ந்த, பாடநூல் சார்ந்த பாடமல்ல. இது வாழ்வு சார்ந்த பாடம். எனவே, நூ-ல் கொடுக்கப்பட்டுள்ள வகுப்புப் பயிற்சிகள், வீட்டுப்பயிற்சிகளை குழந்தைகள் செய்யுமளவிற்கு ஆசிரியர்கள் ஊக்குவித்தல் வேண்டும்.

*

# உள்ளடக்கம்

## பிரிவு - 1 மலரும் அரும்புகள்


1). குழந்தைகள் ஓர் அறிமுகம் - 1
2). மகிழ்ச்சியான குழந்தை - 7
3). வாண்டுகள் உலகம் - 10
4). நிறைவான குழந்தை - 16


## பிரிவு - 2 கருகிய மொட்டுக்கள்


5). பெண் குழந்தையும், வாழ்வுரிமையும் - 26
6). குழந்தைத் தொழிலாளர்கள் - 37
7). கொத்தடிமைக் குழந்தைகள் - 49
8). தெருவோரக் குழந்தைகள் - 56
9). ஊனமுற்றக் குழந்தைகள் - 61
10). கடத்தப்படும் குழந்தைகள் - 67


## பிரிவு - 3 அரும்புகள் மலர


11). குழந்தையின் கல்வியுரிமை - 75
12). குழந்தை நலவுரிமை - 85
13). குழந்தைப் பாதுகாப்பு உரிமை - 92
14). சாதனைக் குழந்தைகள் - 97


பிரிவு - 1
மலரும்
அரும்புகள்

பாடம் 1



# குழந்தைகள் ஓர் அறிமுகம்

**அன்புக் குழந்தையே! உன்னையே உனக்கு அறிமுகம் செய்கிறோம்!**



என்னைப் பற்றி எனக்கே அறிமுகமா! என்று நீ ஆச்சரியப்படுவதை எங்களால் உணர முடிகிறது.

இந்த அறிமுகம் உனக்கு மட்டுமல்ல.

உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்று அரவணைத்து வளர்த்த உன் தாய்க்கும்,

உன்னைப் பாராட்டிப் போற்றி வளர்த்த தந்தைக்கும்

உன் உடன்பிறந்தோர்க்கும்,

உன் உறவினர்களுக்கும் தான் இந்த அறிமுகம்....

அது சரி! இவர்களுக்கு மட்டுந்தானா?



உன்னுடைய ஊர் மக்களுக்கும், ஏன் இந்த உலகத்துக்கும்தான்.

உனக்குத் தெரியுமா? நீ உன் தாயின் கருவில் வளர்ந்த போது அவள் உன்னை எப்படியெல்லாம் பாதுகாத்தாள் தெரியுமா?


உன் அன்னையின் அன்னை (பாட்டி) நீ பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக உன் அன்னையை எப்படியெல்லாம் கவனித்தாள் தெரியுமா?

நீ உலகில் பிறந்த போது உன் அப்பாவும் அம்மாவும், பாட்டியும் தாத்தாவும் உள்ளம் குளிர்ந்து போகவில்லையா?

உன் பெற்றோர் தம் திருமணத்தின்பின் நீ உன்தாயின்

வயிற்றில் முதல் குழந்தையாகக் கருவாவதற்குக் கொஞ்சம் பிந்தி விட்டபோது

எவ்வளவு கவலைப்பட்டிருப்பார்கள் தெரியுமா?



காத்திருந்து காத்திருந்து
உன்னை ஈன்ற போது
உன் பெற்றோர் அடைந்த இன்பத்திற்கு
எல்லை உண்டா?
தம்பதியர் சிலர்
குழந்தைப்பேறு
இனியில்லை என்ற நிலையில்
குழந்தையைத் தத்தெடுத்து
தம் சொந்த குழந்தையாய் வளர்ப்பதை
நீ அறிவாயா?



***உலகம் நீதான் நாளை என்கிறது.***
***நீயின்றி நாளைய உலகம் இல்லை.***
***உன்னைப் போற்றிப் புகழாத நூல்கள் இல்லை***
***புகழ்ந்து பாடாத புலவருமில்லை***
***உன்னைக் கண்டு கசிந்துருகாத உள்ளமுமில்லை.***

திருவள்ளுவர் குழந்தைகளைப் பற்றி என்ன சொல்கிறார், தெரியுமா?
"ஒருவன் உலகத்தில் பெறுகின்ற செல்வத்தில்
மிகப் பெரிய செல்வம் நீ தான்" என்பார்.

- **"குழந்தைகளைத் தொடுகிறபோது உடலுக்கும் உள்ளத்துக்கும் இன்பம் கிடைக்கிறதாம்."**
- **"அவர்கள் பேசும் போது செவிக்கு இன்பம் கிடைக்கிறதாம்."**
- **"துள்ளிக்குதித்து ஓடி விளையாடும் அழகில் கண்களுக்கு இன்பம் கிடைக்கிறதாம்."**

"குழந்தைகளின் பேச்சே இனிமையான இசையாம்."

இந்த இசையை இரசிக்கத் தெரியாத பெற்றோர்தாம் புல்லாங்குழ-ன் இசையை இனிமையானதென்று கூறுவார்களாம்.

இன்னொரு புலவன் **புறநானூறில்** பாடுவதைக் கேளுங்கள் :
*ஒருவருக்கு நிறைய செல்வம் இருக்கிறதாம். எப்போதும்*
*விருந்தினர்களோடு உணவு உண்ணுகிற அளவுக்கு*



*பணக்காரர் அவர். இந்தப் பணக்காரருக்குக் கூட*
**தத்தித் தத்தி நடந்து சின்னச் சின்ன கைகளை நீட்டி அவர் உண்ணும் உணவை அளைந்து, தன்னுடைய உடம்பு பூராவும் சோற்றைச் சிதறும் குழந்தைகள்** இல்லையென்றால் அவரிடம் இருக்கிற செல்வமெல்லாம் **வீண்தானாம்!**

*தாமரை மலர் போன்ற கைகளும்*
*பூவின் மணத்தையுடைய சிவந்த வாயுமுடைய*
*குழந்தைகள் தாம் உண்மையான செல்வம்*

என்கிறார் **புகழேந்தி** எனும் புலவர்.

பிள்ளைக் கனியமுது
பேசும் சித்திரம்
ஆடிவரும் தேன்
**என்றெல்லாம் குழந்தையைப் பற்றிப் பாடி மகிழ்கிறார் மகாகவி பாரதி!**

*கட-ன் முத்து, முழு நிலவு, ஓவியம், சோலை மலர்,*
*செந்தமிழ் என்றெல்லாம் தாலாட்டுகிறார்* **பாவேந்தர் பாரதிதாசன்.**

அமுதமே! என் அருமைக் கனியே! ஆசை பொங்கும்
கண்ணே! அன்புத் தவழும் பொன்னே!
என்றெல்லாம் சீராட்டுகிறார் கவிஞர் **பட்டுக்கோட்டையார்.**

கவிஞர் **கண்ணதாசன்** பாடும் போது;
"நான் கடவுளைக் கண்டேன்
குழந்தை வடிவிலே - அவன்
கருணையைக் கண்டேன்
கொஞ்சும் மழலை மொழியிலே
பால் வடியும் உன் பூமுகத்தில்
ஆயிரம் கனவு கண்டேன்"
என்பார்.



**மகாகவி தாகூர்** என்ன கூறுகிறார் தெரியுமா?

" இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும்
கடவுள், மனிதன் மீதான நம்பிக்கையை இன்னும் இழக்கவில்லை' என்கிறார்.



அன்புக் குழந்தையே! உன்னைப் பற்றிய அறிமுகத்தைப் படித்தாயா?

நீ மிகவும் மகிழ்ச்சிகரமாக இருந்தது எப்போது?

நீ சின்னக் குழந்தையாக இருந்தபோது நடந்ததெல்லாம் நினைவிருக்கிறதா?

## வகுப்புப்பயிற்சி

1. உன் அம்மா நீ சின்னக் குழந்தையாக இருந்த போது உன்னை என்ன பெயரெல்லாம் சொல்-க் கொஞ்சினார்னு நினைவிருக்கா?

   **எ.கா.** கண்ணே மணியே,

   ------------------------------------------------------------------------

   ------------------------------------------------------------------------

   ------------------------------------------------------------------------



2. நீ தூங்காமல் சேட்டை செய்த போது என்னென்ன வார்த்தைகளால் தாலாட்டுப் பாடி உன்னைத் தூங்க வைத்தார்னு ஞாபகம் இருக்கா?

   ------------------------------------------------------------------------

   ------------------------------------------------------------------------

   ------------------------------------------------------------------------

3. நீ சாப்பிடாமல் அடம் பிடித்தபோது எப்படியெல்லாம் கெஞ்சியும், கொஞ்சியும் உன்னை சாப்பிட வைத்தார்னு தெரியுமா?

   ------------------------------------------------------------------------

   ------------------------------------------------------------------------

   ------------------------------------------------------------------------



4. உனக்குச் செல்லப்பெயர் வைத்து அழைத்து மகிழ்ந்திருப்பார்களே, அந்தப் பெயர்கள் ஞாபகத்தில் இருக்கிறதா?

----------------------------------------------------------------

----------------------------------------------------------------

5. உன்னை மடியில் போட்டுக் கொண்டு காக்கா, நரியின் கதையும், ராஜா ராணி கதையும், தாத்தா பாட்டிக் கதைகளையும் சொல்- சிரிக்க வைத்திருப்பார்களே அவற்றுள் உனக்கு ரொம்பவும் பிடித்த கதை நினைவிருக்கிறதா? அக்கதையை வகுப்பில் உன் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?

----------------------------------------------------------------

----------------------------------------------------------------

6. நீ சமுதாயத்தில் உயர வேண்டும் என எப்படியெல்லாம் உன் பெற்றோர் கனவு காண்கின்றனர்.

எ.கா. - டாக்டராக வேண்டும்

----------------------------------------------------------------

----------------------------------------------------------------

7. உன் மூத்த சகோதர, சகோதரிகள் எவ்வாறெல்லாம் உன்னிடம் அன்பு காட்டுகின்றனர்?

----------------------------------------------------------------

----------------------------------------------------------------

8. நீ நோய்வாய்ப்படும் போது உன் அம்மாவும் அப்பாவும் எப்படியெல்லாம் கவனித்துக் கொள்கிறார்கள்.

----------------------------------------------------------------

----------------------------------------------------------------

9. உன் தாத்தா பாட்டி உன்னிடம் தங்கள் அன்பை எப்படியெல்லாம் காட்டுகின்றனர்?

---------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------

10. நீ பள்ளியி-ருந்து வீட்டுக்கு வந்தவுடன் உன் அம்மா எப்படியெல்லாம் மகிழ்ச்சியடைகிறார்?

---------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------

11. நீ பள்ளியி-ருந்து வரத் தாமதித்தால் உன் அம்மா எப்படியெல்லாம் கவலைப்படுவார்?

---------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------

## வீட்டுப்பயிற்சி

12. வீட்டில் உன் அம்மாவிடம் நீ குழந்தையாக இருந்தபோது உன்னைத் தாலாட்டுவதற்குப் பாடிய பாடலைக் கேட்டு எழுதி வகுப்பில் படித்துக் காட்டவும்.

13. உன்னுடைய முதல் பிறந்த நாளை உன் பெற்றோர் எப்படி கொண்டாடினர் என பெற்றோரிடம் கேட்டறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள்க.

14. உன் குறு குறு நடையிலும், மழலை மொழியிலும் உன் தாயும், தந்தையும் எப்படியெல்லாம் மகிழ்ந்து கொண்டாடினர் என்பதை உன் பெற்றோரிடம் கேட்டறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.

❖

TôPm 2



# மகிழ்ச்சியான குழந்தை

**இடம்** - வகுப்பறை

**ஆசிரியரின் செயல்முறை**

*ஆசிரியர் மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாகப் பிரித்து அவர்களிடம் கீழ்க்கண்ட கேள்விகளைக் கொடுத்துக் குழுக்களில் விவாதித்து வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளச் சொல்கிறார்.*



**குழுப்பயிற்சி:**

1. நீ எப்போதெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறாய்?

   **எ.கா. -** ***விளையாடும் போது,***
   ***பாராட்டும் போது***

(அ)------------------ (இ) ------------------ (உ)------------------

(ஆ------------------ (ஈ) ------------------ (ஊ)------------------



2. நீ மகிழ்ச்சியாக இருக்க உனக்கு என்னவெல்லாம் தேவைப்படுகிறது?

   **எ.கா. -** ***உணவு, பொம்மை, அழகான சட்டை***

(அ)------------------ (உ)------------------

(ஆ)------------------ (ஊ)------------------

(இ)------------------ (எ)------------------

(ஈ)------------------ (ஏ)------------------

3. கீழ்க்கண்டோர் உன்னை எப்படி நடத்தினால் மகிழ்ச்சியாக இருப்பாய்?

| பெற்றோர் | உறவினர் | நண்பர்கள் | ஊர்மக்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|---|---|
| எ.கா. **கொஞ்சும் போது** | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

**ஆசிரியர் நடவடிக்கை**

குழந்தைகள் தம் குழுக்களில் மகிழ்ச்சியாக இருப்பதற்குத் தேவையானவற்றை விவாதித்து, குழு குழுவாக ஆசிரியர்முன் வாசித்துக் காண்பிக்கின்றனர். ஆசிரியர் மாணவர் அறிக்கையைக் தொகுத்துக் கரும்பலகையில் எழுதுகிறார். கரும்பலகையில் எழுதியவற்றைக் குழந்தைகள் தங்கள் ஏடுகளில் எழுதிக் கொள்கின்றனர்.

## வகுப்புப் பயிற்சி

1). கீழ்க்கண்டவர்களைச் சந்திக்கும் போது உன்னிடம் உருவாகும் உணர்வை ✓செய்க?

| | மகிழ்வடைகிறேன் | பயப்படுகின்றேன் |
|---|---|---|
| **எ.கா.** 1. நண்பர்கள் | | |
| 2. ஆசிரியர்கள் | | |
| 3. அப்பா | | |
| 4. அம்மா | | |
| 5. தாத்தா | | |
| 6. பாட்டி | | |
| 7. ஊர்த்தலைவர் | | |
| 8. போலீஸ் | | |
| **9. மருத்துவர்** | | |
| **10. கடைக்காரர்** | | |

2). கீழ்க்கண்ட இடங்களுக்கு நீ செல்வதற்கு விரும்புகிறாயா இல்லையா என தெரிவிக்கவும்.


| | விரும்புகிறேன் | விரும்பவில்லை |
|---|---|---|
| 1. பள்ளியி-ருந்து வீட்டிற்கு | | |
| 2. வீட்டி-ருந்து பள்ளிக்கு | | |
| 3. கோவிலுக்கு | | |
| 4. ஊர் உள்ளே | | |
| 5. விளையாட்டு மைதானம் | | |
| 6. நண்பர்கள் வீடு | | |
| 7. உறவினர் வீடு | | |

## வீட்டுப்பயிற்சி

(3). கீழ்க்கண்ட குழந்தைகளைச் சந்தித்து அவர்கள் மகிழ்ச்சியாகவும், மகிழ்ச்சியின்றியும் இருப்பதற்கான காரணங்களைக் கேட்டு வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.



அ). ஊனமுற்ற குழந்தை
ஆ). பெண் குழந்தை
இ). நோய் வாய்ப்பட்ட குழந்தை
ஈ). ஆடு மேய்க்கும் குழந்தை
(வேலை செய்யும் குழந்தை)
உ). செல்வந்தர் வீட்டுக் குழந்தை



(4). நீ விரும்பும் ஏதாவது ஒன்று பற்றி, ஒரு சிறிய கட்டுரை ஒன்று எழுதி வகுப்பில் படித்துக் காட்டுக.

**எடுத்துக்காட்டாக**

நீ படிக்கும் பள்ளிக்கூடம்
உன் வீடு
உன் ஊர் முத-யன.

பாடம் 3



# வாண்டுகள் உலகம்

**நிகழ்ச்சி : 1**

ஆறு வயது சிறுவன் குமார் தன் பெற்றோரோடு பேருந்தில் பயணம் செய்கிறான். குமாருக்குப் பயணச்சீட்டு வாங்காததால் நடத்துனர் குமாரின் வயதை கேட்கிறார். 'பையனுக்கு மூணு வயசுதான் ஆகுது. அவனுக்கு எதுக்குப் பயணச்சீட்டு' என குமாரின் அம்மா பதிலளிக்கிறார். இதைக் கேட்டு கொண்டிருந்த குமார் படக்கென எழுந்திருந்து "**இல்லை, இல்லை, கண்டக்டர் மாமா! நான் ஒன்னாம் வகுப்பு படிக்கிறேன். எனக்கு ஆறு வயசு ஆகுது**'' என பதிலளிக்கிறான்.



சிந்தனைக்கு:

**குமார் மூலம் இங்கு வெளிப்படும் குழந்தையின் பண்பு எது?**

**நிகழ்ச்சி : 2**

அது ஒரு குழந்தைகள் காப்பகம். அலுவலகத்தில் வேலைக்குச் செல்லும் பெற்றோர் பிறந்து மூன்றே மாதங்களான குழந்தையைக் காலையில் காப்பகத்தில் சேர்த்துவிட்டு அலுவலகம் செல்கின்றனர். காப்பகத்தின் ஆயா குழந்தையைப் பஞ்சு மெத்தை விரிக்கப்பட்ட சொகுசான கட்டி-ல் கிடத்துகிறார். அக்குழந்தையோ உறங்காமல் அழுது கொண்டேயிருக்கிறது. ஆயா குழந்தையின் அழுகையை நிறுத்த என்னவெல்லாமோ செய்து பார்க்கிறார். கையிலெடுத்துக் கொஞ்சுகிறார், கிலுகிலுப்பு காட்டுகிறார். குழந்தை அழுகையை நிறுத்தவேயில்லை. குழந்தை ஏன் அழுகிறது என்ற காரணமும் புரியவில்லை. வேறு வழியின்றி குழந்தையைத் தொட்டி-ல் கிடத்தி, மெதுவாக ஆட்டுகிறார். குழந்தை மெல்லமெல்ல அழுகையை நிறுத்தி உறங்கிப் போகிறது.



**சிந்தனைக்கு**

குழந்தை ஏன் கட்டி-ல் உறங்க மறுத்தது?

குழந்தை ஏன் தொட்டி-ல் தூங்கியது?

தொட்டில் கொடுத்த இறுக்கம் குழந்தைக்கு எந்தவகையான பாதுகாப்பை நினைவுபடுத்தியது?

## *நிகழ்ச்சி -3*



அந்தக் குழந்தைகளின் தந்தை அலுவலகத்திற்குச் சென்று மாலை வீட்டிற்கு வரும்போதெல்லாம் தன் குழந்தைகளுக்கு ஏதாவது தின்பண்டம் வாங்கி வருவது வழக்கம்.

அன்றும் வழக்கம்போல பிஸ்கட் பாக்கெட்டை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வருகிறார். வீட்டிற்கு வந்த அப்பாவின் கைகளைக் குழந்தைகள் ஆவலோடு பார்க்கின்றனர். அப்பாவும் பிஸ்கட் பாக்கெட்டைப் பிரித்து ஒரு குழந்தைக்குப் பிஸ்கட் கொடுக்க, அடுத்தவன் "அப்பா எனக்கு?" என்று கேட்கிறான்!

**சிந்தனைக்கு**

எனக்கு? எனக் கேட்ட குழந்தையிடம் வெளிப்பட்ட பண்பு எது?

தனக்கு என்கிற பண்பா, சமத்துவம் என்கிற பண்பா?

## *நிகழ்ச்சி - 4*



வயதோ மூன்று! பரிசோ 5 லட்சம்!

மூன்றே வயதான அக்ஷயா, அப்பா விவசாயக் கூ-, அம்மா பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்திவிட்டவர். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த இப்பெற்றோரின் குழந்தை அக்ஷயா தமிழக முதல்வரிடம் 5 லட்ச ரூபாய் பரிசைப் பெறுகிறார். இக்குழந்தை 5 இலட்ச ரூபாய் பரிசு பெறுமளவிற்கு என்ன சாதித்து விட்டாள்? திருக்குறளில் ஒரு குறளின் முதல் வார்த்தையைச் சொன்னால் போதும் அவள் உடனே அதை முழுவதுமாகச் சொல்- முடித்து விடுகிறாள்.

அவளது 3 வயதில் 400 திருக்குறளைக் கடகடவென ஒப்பிக்கிறார். வியக்கத்தகும் நினைவாற்றலைப் பெற்றிருக்கும் இக்குழந்தை கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 400 திருக்குறளை மனப்பாடம் செய்திருக்கிறாள்.

*- இந்து, 5.6.2003.*

**சிந்தனைக்கு**

3 வயது குழந்தையின் சாதனை உனக்குத் தரும் செய்தி என்ன?

**நிகழ்ச்சி - 5**



அது ஒரு குழந்தைப்பள்ளி. சிறுவன் ஒருவன் அம்மாவை உடனே பார்க்க வேண்டும் என்று அழுதுகொண்டே இருந்தான். எப்போதும் சிரிச்சுக்கிட்டே இருக்கும் இக்குழந்தை ஏன் இன்று அழுகிறான் என்று ஆச்சரியப்பட்டேன். ஏன்? உடனே அம்மாவைப் பார்க்கணும்னு கேட்டேன். அக்குழந்தை மெதுவாகப் பேச ஆரம்பித்தான். அப்பா அடிச்சதனால அம்மா ராத்திரி பூரா அழுதுகிட்டே இருந்தாங்க. எங்கம்மாவுக்கு ஏதாவது நடந்திருக்குமோன்னு பயமாயிருக்கு. அதனால அம்மாவை உடனே பார்க்கணும் என்றான். கவலைப்படாதே! ஒண்ணும் ஆயிருக்காது. அம்மாவை சாமி காப்பாத்துவாருன்னு மீண்டும் மீண்டும் சொன்ன பிறகுதான் ஓரளவு அமைதியானான்.

**சிந்தனைக்கு**

இந்தக் குழந்தை, தன் அம்மா பற்றிக் கவலைப்படுவதற்கு என்ன காரணம்?

**நிகழ்ச்சி - 6**



மாலை 4 மணி. வகுப்பறை உள்ளிருக்கும் குழந்தைகள் எப்போது மணியடிக்கும் என காத்திருக்கின்றனர். இறுதி வகுப்பு முடிந்து மணி அடித்தவுடன், ஓவென சத்தமிட்டபடி ஒருவரை யொருவர் நெருக்கியடித்துக் கொண்டு, வகுப்பு வாயிலையும் பள்ளி வளாகத்தையும் தாண்டி, வெளியே வேகமாக ஓடிச் செல்கின்றனர்.

**சிந்தனைக்கு**

இக்குழந்தைகள் மகிழ்ச்சியோடு பள்ளி வளாகத்தை விரைவாகத் தாண்டி வெளியே ஓடிச் செல்லுதல் தரும் செய்தி என்ன?

## வகுப்புப்பயிற்சி

ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் அழைத்து மேற்கண்ட பண்புகளை வகுப்பில் வாசிக்கச் சொல்கிறார்.

1. ஒவ்வொரு நிகழ்விலும் வெளிப்படும் பண்புகளை மாணவர்களையே சொல்ல வைக்கிறார். சொல்லவைத்த பிறகு, ஆசிரியர் இந்நிகழ்வுகள் மூலம் வெளிப்படும் பண்புகளை விளக்குகிறார்.

**வெளிப்படும் பண்பு**

நிகழ்வு - 1 ----------------------------------

நிகழ்வு - 2 ----------------------------------

நிகழ்வு - 3 ----------------------------------

நிகழ்வு - 4 ----------------------------------

நிகழ்வு - 5 ----------------------------------

2). குழந்தைகளின் இயல்பான இப்பண்புகள் கீழ்க்கண்டோரால் வளர்க்கப்படுகிறதா? அல்லது தடுக்கப்படுகிறதா? என்பதை ✓செய்க.

| | வளர்க்கப்படுகிறதா? | தடுக்கப்படுகிறதா? |
|---|---|---|
| குடும்பத்தில் பெற்றோரால் | | |
| பள்ளி ஆசிரியர்களால் | | |
| உறவினர்களால் | | |
| நண்பர்களால் | | |
| கோயில் குருக்களால் | | |

## வீட்டுப்பயிற்சி

3). குழந்தைகளின் இயல்பான பண்புகள் சில மேலே காட்டப்பட்டன. இவை தவிர மேலும் சில நல்ல பண்புகள் குழந்தைகளிடம் மறைந்து கிடக்கலாம். இப்பண்புகளை வரிசைப்படுத்துக

அ) ..............................................................................................

ஆ) ..............................................................................................

இ) ..............................................................................................

ஈ) ..............................................................................................

4). திறமை வெளிப்பாடு



அ). உனக்குத் தெரிந்த உன்னுடைய திறமைகள் யாவை?


..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

ஆ). உனக்குத் தெரியாமல் அடுத்தவருக்குத் தெரிந்துள்ள உன் திறமைகள் யாவை? (கேட்டுத் தெரிந்து கொளல்)




..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................



இ). உனக்கும் அடுத்தவர்களுக்கும் வெளிப்படையாகத் தெரிந்த திறமைகள் யாவை?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

5). உன்னுடைய திறமைகளை வளர்க்க ஊக்குவித்தவர்கள்/ தடையாக இருந்தவர்கள்

| நபர்கள் | ஊக்கப்படுத்தியவர் | தடையாக இருந்தவர் |
|---|---|---|
| **பெற்றோர்** | | |
| **ஆசிரியர்** | | |
| **உறவினர்** | | |
| **நண்பர்** | | |
| **கோயில் குருக்கள்** | | |

**6).உன்னிடமிருக்கும் தனித் திறமைகளை வெளிப்படுத்த நீ முயலும்போது தடுக்கப்பட்ட அனுபவத்தையும் - அவற்றி-ருந்து நீ மீள எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் வகுப்பில் பகிர்ந்து கொள்.**

## குழந்தைகள் இல்லாத தேசத்தை நினைத்துப் பார்க்க முடியுமா?

**குழந்தைகள் சமூகத்தை ஒழுங்குபடுத்தக் கூடியவர்கள். சகலவிதமான உரிமைகளுக்கும் சொந்தக்காரார்கள். வாழ்க்கைப் பாதுகாப்பு, சரிவிகித உணவு, உடல் மன ஒழுக்கம் சார்ந்த புரிதல் பகிர்வு, கட்டாய இலவச தரமான கல்வி, சமூக அரவணைப்பு, பெற்றோர்களின் ஆதரவு போன்ற எல்லாவிதமான மகிழ்ச்சிக்குரிய அம்சங்களையும் பரிபூர்ணத்துடன் சுவாசிக்கக் கூடியவர்கள்.**

**குழந்தைகள் தேசத்தினுடைய வேர்கள், இவர்களை நம்பித்தான் தேசம் திட்டம் தீட்ட வேண்டும், இவர்களுடைய வளர்ச்சியில் முழுமையான அக்கறையை அர்ப்பணிக்க வேண்டும்.**

**இவர்கள் இல்லாத தேசத்தை நினைத்துப் பார்க்க முடியுமா?**


**தங்களுக்கெதிராக நடைபெறுகிற உழைப்புச் சுமைகளையும் சுரண்டல்களையும் மனதில் நினைத்துக் கொண்டு இந்த பூமி வேண்டாம் என்று அவர்கள் மறுத-த்து விட்டால் மனித சமூகம் என்ன ஆவது?**

***- 'நாளை', ஜனவரி - மார்ச் 1999***

## பாடம் 4



# நிறைவான குழந்தை



**இடம் - வகுப்பறை**

**ஆசிரியர் நடவடிக்கை :**


ஆசிரியர் முந்தைய பாடத்தில் `குழந்தைகளின் மகிழ்ச்சிக்கான தேவைகள்' என்ற தலைப்பில் பகிரப்பட்ட கருத்துக்களை மாணவர்களுக்கு மீண்டும் நினைவுப் படுத்துகிறார். குழந்தைகள் மகிழ்ச்சியாயிருக்க எவையெல்லாம் தேவை என்று மாணவர்கள் அறிக்கைகளாகக் கொடுத்த கருத்துகளையும், மாணவர்கள் எப்போதெல்லாம் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்று அவர்கள் குழுக்கள் மூலம் வகுப்பில் பகிரப்பட்ட கருத்துக்களையும் கரும்பலகையில் வரிசையாக எழுதுகிறார்.

பிறகு, கீழ்க்காணும் குழந்தைகளுக்கான உரிமைகளோடு அவற்றை ஒப்பிடுகிறார்.

**1. உயிர்வாழ உரிமை**




**2. நோயில்லாமல் வாழ்வதற்கான உரிமை**



**3. சத்தான உணவை உண்ண உரிமை**

4. தூய்மையான குடிநீரைப் பெறும் உரிமை






5. பெற்றோரோடு சேர்ந்து வாழவும் அவர்களால் பாதுகாக்கப்படுவதற்குமான உரிமை

6. ஒருவர் தாம் விரும்பும் பெயரை வைத்துக் கொள்ளும் உரிமை

7. ஒரு நாட்டைத் தாய் நாடாகக் கொள்ளும் உரிமை.



8. கட்டாய இலவச, தரமான கல்வி பெறும் உரிமை







9. குழந்தைப் பருவத்தில் போதிய பராமரிப்புப் பெறும் உரிமை



10. சமூகத்தில் பாதுகாப்பிற்கான உரிமை



11. ஓய்வு பெறுவதற்கான உரிமை



12. விளையாட உரிமை



13. பொழுதுபோக்கு வசதிகள் பெறும் உரிமை




14. கலை, கலாச்சார நடவடிக்கைகளில் பங்கு பெறும் உரிமை



15. பொருளாதார சுரண்டலுக்கு உட்படுத்தப்படாம-ருக்க உரிமை



16. கேவலப்படுத்தப்படாமலிருக்க உரிமை




17. மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படாமலிருக்க உரிமை

18. தரக்குறைவாக நடத்தப்படாமலிருக்க உரிமை




19. புறக்கணிக்கப்படாமலிருக்க உரிமை



20. குழந்தைகள் மீது நடத்தப்படும் வன்முறையிலிருந்து விடுதலை பெற உரிமை

21. போர்க்காலங்களில் பாதுகாக்கப் பெறும் உரிமை




22. குழந்தை தமக்கென்று ஒரு கருத்தைக் கொள்ளும் உரிமை



23. கருத்தை வெளிப்படுத்தும் உரிமை




24. தகவல் பெறும் உரிமை



25. சிந்திப்பதற்கான உரிமை

**26. மனசாட்சிப்படி நடக்க உரிமை**



**27. விரும்பிய மதத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை**



**28. அன்பு செய்யவும் பழகவும் உரிமை**

## வகுப்புப் பயிற்சி

1). ஆசிரியர் ஒவ்வொரு குழந்தையையும் ஒவ்வொரு உரிமையாக உரக்க வாசிக்க சொல்கிறார்.

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து கீழ்க்கண்ட கேள்விகளை விவாதிக்கச் செய்து குழு அறிக்கை தயாரிக்கச் சொல்கிறார்.

| எண் | குழுவினர் | அனுபவிக்கும் உரிமைகள் | அனுபவிக்காத உரிமைகள் | புரியாத உரிமைகள் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

2). இந்த உரிமைகளில் உனக்கு ஏற்கெனவே மகிழ்ச்சிக்கான காரணங்களாக அமைந்த உரிமைகள் யாவை?

**எ.கா.** - விளையாட உரிமை

1. ................................................ 5. ................................................

2. ................................................ 6. ................................................

3. ................................................ 7. ................................................

4. ................................................ 8. ................................................

3). ஒவ்வொரு குழுவும் 'குழந்தைகளின் மகிழ்ச்சி குழந்தை உரிமையே' என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்து வகுப்பில் வாசித்துக் காட்டவும்.

4). குழந்தைகளின் மகிழ்ச்சிக்கான இவ்வுரிமைகள் இவர்களால் மதிக்கப் பெறுகின்றனவா? மீறப்படுகின்றனவா?

| | மதிக்கப்படுகின்றன | மீறப்படுகின்றன |
|---|---|---|
| 1. பள்ளியாசிரியர் | | |
| 2. பெற்றோர் | | |
| 3. உறவினர் | | |
| 4. நண்பர்கள் | | |
| 5. மத குருமார்கள் | | |
| 6. அரசு | | |

## வீட்டுப்பயிற்சி

5. உன் ஊரில் பள்ளிக்குச் செல்லாமல் வேலைக்குச் செல்லும் ஒரு குழந்தையை சந்தித்து அக்குழந்தை அனுபவிக்கும் உரிமைகள் மற்றும் அனுபவியாத உரிமைகள் எவை என்பதைக் கேட்டறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள்க.

| அனுபவிக்கும் உரிமைகள் | அனுபவிக்காத உரிமைகள் |
|---|---|
| 1. ........................................................................ | 1. ........................................................................ |
| 2. ........................................................................ | 2. ........................................................................ |
| 3. ........................................................................ | 3. ........................................................................ |

6. உன் பெற்றோர் நீ விரும்புகிறவர்களோடெல்லாம் பழகவும் நட்பு கொள்ளவும் அனுமதிக்கிறார்களா?


இல்லையென்றால் யாரோடு, ஏன் என்ற காரணங்களைப் பெற்றோரிடம் கேட்டு வகுப்பில் பகிர்ந்து கொள்.

7. அ). குழந்தைப் பருவம் நிறைவு பெற குழந்தை உரிமைகள் தேவை என்ற கருத்தைச் சித்தரிக்கும் ஓவியம் ஒன்றை வரைந்து அதன் பொருளை வகுப்பில் விளக்கவும்.

ஆ). ஓவியங்களைப் பள்ளி தகவல் பலகையில் ஒட்டி வைக்கவும்.

இ). ஆசிரியர் பங்கேற்ற அனைத்து மாணவரையும் பாராட்டி ஓவியங்களைப் பற்றிய தமது கருத்துக்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.




பிரிவு - 2
கருகிய
மொட்டுக்கள்



## பாடம் 5

# பெண் குழந்தையும் வாழ்வுரிமையும்

### ஒரு கரு பேசுகிறது



அக்டோபர் 5 - இன்று என் வாழ்க்கை துவங்கி விட்டது. என் அம்மா, அப்பாவுக்கு இது இன்னும் தெரியாது. நான் ரொம்பச் சின்னதாக இருக்கிறேன். ஆனாலும் எனக்கு உயிரும், வடிவமும் இருக்கிறது. நான் ஒரு பெண் கரு. எனக்கு அழகான கண்கள் இருக்கின்றன. நான் பிற்காலத்தில் எப்படியெல்லாம் இருப்பேன் என்பதெல்லாம் இப்போதே முடிவாயிடுச்சு.

அக்டோபர் 19 - நான் இன்னும் கொஞ்சம் வளர்ந்துட்டேன். ஆனால் என்னால எதுவுமே செய்ய முடியலை. என் அம்மாதான் எனக்கு எல்லாமே செய்யுறாங்க. அவங்க வயித்துக்குள்ள நான் இருக்கிறேன் என்பதோ அவங்க இரத்தம் தான் எனக்கு உணவு என்பதோ அவங்களுக்குத் தெரியாது. என் அம்மா ரொம்ப நல்லவங்க.

அக்டோபர் 23 - என் வாய் மெல்லத் திறக்க ஆரம்பிக்கிறது. அச்சோ! இன்னும் ஒரு வருஷம் கழித்து நான் அழகா சிரிப்பேன். பிறகு அழகா பேசுவேன். நான் முதன்முதல்ல அம்மான்னுதான் கூப்பிடுவேன்.

அக்டோபர் 26- என் இதயத்துடிப்பு துடிக்க ஆரம்பிச்சிடுச்சு. இப்போதிருந்து ஓய்வேயில்லாமல் என் வாழ்நாள் முழுதும் இது துடிச்சிக்கிட்டேயிருக்கும். ரொம்ப வருஷம் கழித்து அது களைத்துப் போய்ப் பிறகு நின்னுடும். அப்புறம் நான் செத்துப் போயிடுவேன்.

நவம்பர் 2 - இன்னிக்கு என் அம்மாவைப் பரிசோதிக்க வந்த அந்த டாக்டர் நான் அவங்க வயித்துல இருக்கிறத சொன்னாங்க. அம்மா! உங்களுக்குச் சந்தோஷமா?

நவம்பர் 23 - என் அம்மா, அப்பா எனக்கு என்ன பெயர் வைக்கலாம்னு யோசிச்சிட்டு இருக்காங்கன்னு நினைக்கிறேன். எனக்குச் சாந்தின்னு பேர் வைச்சுக்கணும்னு ஆசை.

நவம்பர் 28 - என் ஆசையெல்லாம் வெறும் கனவாப்போச்சு, என் அம்மா அப்பா என்னைக் கொல்லப் போறாங்க.

*பிறக்காத ஒரு பெண் குழந்தையின் நாட்குறிப்பு*
*- 'The Girl Child in Crisis' - பக்கம் -18.*

## வகுப்புப் பயிற்சி

**ஆசிரியர், மேற்கண்ட 'ஒரு கரு பேசுகிறது' என்ற பகுதியை மாணவ - மாணவியர்களைக் கொண்டு வாசிக்கச் செய்கிறார். வாசித்த பின்பு கீழ்க்கண்ட கேள்விகளை மாணவர்களிடம் எழுப்புகிறார்.**

மாணவர்களே!

பெண்! கருவிலேயே கலைக்கப்படுவதைப் பற்றிப் படித்தீர்கள்


பெண் குழந்தை கருவில் மட்டுமல்ல

பிறந்த பின்னும் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகிறாள் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். பெண் குழந்தைகள் வேறு என்னென்ன முறைகளிலெல்லாம் பாகுபடுத்தப்படுகின்றனர்? வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்? என்பதனை நீங்களே உங்களுக்குத் தெரிந்த வகையில் சொல்லுங்கள் பார்க்கலாம்.



**முதல் மாணவன் :**

**எங்க ஊர்ல பெண் குழந்தை பிறந்தா கொன்னுடுறாங்கய்யா!**




**இரண்டாம் மாணவன் :**

**நான் கேள்விப்பட்டிருக்கேன். எங்க ஊர் ஆஸ்பத்திரியில பிறந்த பெண் குழந்தைய அங்கேயே விட்டுட்டுப் போய்ட்டாங்க. அதுமட்டுமில்லாம குப்பைத் தொட்டியிலேயுங்கூட சில குழந்தைகள வீசிட்டுப் போயிருக்காங்க.**

**மூன்றாம் மாணவன்** :




எங்க வீட்டில, என்ன மட்டும் படிக்க வைக்கிறாங்க. ஆனா என் தங்கச்சிய படிக்க வேண்டாங்கறாங்க! காரணம் கேட்டா பொம்பளைப் புள்ளைக்குப் படிப்பு எதுக்குங்கறாங்க



**நான்காம் மாணவி** :

ஆமா டீச்சர், எங்க வீட்ல கூட ஆம்பளைங்க எல்லாம் சாப்பிட்ட பிறகு தான் நானும் எங்கம்மாவும் சாப்பிட ணும்னு பாட்டி சொல்லுவாங்க.




**ஐந்தாம் மாணவி** :

டீச்சர்! எங்கவீட்ல என் அண்ணனை வெளியில விளையாட விடுவாங்க. ஆனால் என்ன மட்டும் விடமாட்டாங்க. என்னைச் சரியாகத் தூங்கக்கூட விடமாட்டேங்கறாங்க

**ஆறாம் மாணவன்** :



டீச்சர்! நம்ம கிளாஸ்ல படிச்ச கீதா ஏன் ஸ்கூலுக்கு வர்றதில்ல தெரியுமா? அவளுக்குக் கல்யாணம் பண்ணி வச்சுட்டாங்க. ஆனா அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டவரு ரொம்ப மூத்தவரு! 40 வயசு இருக்கும்.



**ஏழாம் மாணவன்** :

டீச்சர்! எங்கவீட்ல காலைல எழுந்தவுடனே என்னைப் பாத்திரம் கழுவச் சொல்வாங்க! என் அண்ணன மட்டும் படிக்கச் சொல்வாங்க.

மேற்கண்ட விவாதத்தைக் கேட்ட ஆசிரியர் பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைக் கரும்பலகையில் வரிசைப்படுத்துகிறார்.

1. கருக் கொலை
2. சிசுக் கொலை
3. கல்வி மறுப்பு
4. ஊட்டச் சத்தின்மை
5. ஆரோக்கிய மறுப்பு
6. பொருந்தாத் திருமணம்
7. விளையாட்டு மறுப்பு


**மேற்கண்ட வன்முறைகளில் பெண் குழந்தைகள் இழக்கும் உரிமைகள் யாவை?**


**1. கருக்கொலை**

இழக்கும் உரிமைகள்

-------------------------------------------------

-------------------------------------------------





**2. சிசுக்கொலை**

இழக்கும் உரிமைகள்

-------------------------------------------------


-------------------------------------------------


**3. கல்வி மறுப்பு**

இழக்கும் உரிமைகள்

-------------------------------------------------

-------------------------------------------------






**4. ஊட்டச்சத்தின்மை**

இழக்கும் உரிமைகள்

-------------------------------------------------

-------------------------------------------------



**5. ஆரோக்கிய மறுப்பு**

இழக்கும் உரிமைகள்

--------------------------------

--------------------------------



**6. பொருந்தாத் திருமணம்**

இழக்கும் உரிமைகள்

--------------------------------

--------------------------------



**7. விளையாட்டு மறுப்பு**

இழக்கும் உரிமைகள்

--------------------------------------

--------------------------------------

என்னைப் பீடத்தில் ஏற்றி வைத்து வழிபட வேண்டாம்.
கா-ன் கீழிட்டு மிதிக்கவும் வேண்டாம்.
உன் பக்கத்தில் நான் அமர அனுமதித்து
இவ்வுலகைச் சந்திக்கும் தைரியத்தை மட்டும் கொடுத்தால் போதும்.

*- தாகூரின் 'சித்ரா'*

இ. i). நீ பெண் குழந்தையாக இருந்தால் உங்கள் வீட்டில் உன் சகோதரனைப் போல் சமமாக நடத்தப்படுகிறாயா?

**ஆம்/ இல்லை**

ii). நடத்தப்படவில்லையென்றால் எப்படியெல்லாம் வித்தியாசமாக நடத்தப்படுகிறாய் என்பதை வரிசைப்படுத்து

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

ஈ i). நீ ஆண் குழந்தை என்ற காரணத்திற்காக உன் பெற்றோர் உன் சகோதரியை விட உனக்கு அதிக முக்கியத்துவம் தருகின்றனரா? குறிப்பாக

**உணவில்** - ஆம்/இல்லை

**உடையில்** - ஆம்/இல்லை

**விளையாட்டில்** - ஆம்/இல்லை

**கல்வியில்** - ஆம்/இல்லை

ii). எப்படியெல்லாம் தனிக்கவனம் செலுத்துகின்றனர்?

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

## பெண் குழந்தையும் வாழ்வுரிமையும்

*1992 முதல் மே 2001 வரை 150 தொட்டில் குழந்தைகள் பெறப்பட்டுள்ளனர். பின்னர் 51 கைவிடப்பட்ட குழந்தைகளின்றி, 528 தொட்டில் குழந்தைகள் பெறப்பட்டு உள்ளனர். மொத்தம் பெறப்பட்ட 729 குழந்தைகளில் 542 குழந்தைகளைக் குடும்ப சூழலை ஏற்படுத்தித் தரும் வகையில் தத்து நிறுவனங்கள் வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இதில் 43 ஆண் குழந்தைகளும், 499 பெண் குழந்தைகளும் அடங்கும். இத்திட்டத்தின் மீது அரசு மிகுந்த அக்கறையினையும் ஆர்வத்தையும் செலுத்தி வருகிறது.*

*தமிழரசு மே - 2003*

## வீட்டுப்பயிற்சி

8. அ). நீ பெண் குழந்தையாக இருந்தால் நீ பிறந்த போது உன் பெற்றோர் உன் பிறப்பை எப்படி வரவேற்றனர் என்பதை உன் பெற்றோரிடம் கேட்டறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள்.

ஆ). நீ ஆண் குழந்தையாக இருந்தால் நீ பிறந்த போது உன் பெற்றோர் உன் பிறப்பை எப்படி வரவேற்றனர் என்பதை உன் பெற்றோரிடம் கேட்டறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள்.

9. அ). சமூகத்தில் ஏன் ஆண் குழந்தைகளை மட்டும் விரும்புகின்றனர் என்பதற்கான காரணங்களை உன் பெற்றோரிடமும் மற்றவர்களிடமும் கேட்டறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள்.

ஆ). சமூகத்தில் ஏன் பெண் குழந்தைகளை விரும்புவதில்லை என்பதற்கான காரணங்களை உன் பெற்றோரிடமும் மற்றவர்களிடமும் கேட்டறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள்.

10. அ). நீ பெண் குழந்தை என்றால் உன் குடும்பத்திலும் சுற்றுப்புறத்திலும் பாகுபடுத்தப்படுகிறாயா?

**ஆம்/ இல்லை**

*கருவில் வன்முறை*

*வளர்ப்பில் வன்முறை*

*வீட்டில் வன்முறை*

*வெளியில் வன்முறை*

*பா-யல் வன்முறை*

*பண்பாட்டு வன்முறை*

*உளவியல் வன்முறை*

*பணியிட வன்முறை*

**மேற்கண்ட பெண்கள் மீதான அனைத்து வன்முறைகளையும் தடுத்திடுவோம்.**

ஆ). **ஆம் எனில்**

| i). **எப்படியெல்லாம்?** | ii).**எதிலெல்லாம்?** | iii).**காரணம் என்ன?** |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

இ). நீ ஆண் குழந்தை என்றால், உன் குடும்பத்திலும் சுற்றுப்புறத்திலும் பெண் குழந்தைகள் பாரபட்சமாக நடத்தப்படுவதைப் பார்த்திருக்கிறாயா?

**ஆம்/ இல்லை**

ஈ). **ஆம் எனில்**

| i). **எப்படியெல்லாம்?** | ii).**எதிலெல்லாம்?** | iii).**காரணம் என்ன?** |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

*தர்மபுரி மாவட்டத்தில் சராசரியாக ஒரு மாதத்திற்கு 105 பெண் குழந்தைகள் கொல்லப்படுவதாக அண்மையில் வெளிவந்த அறிக்கை கூறுகிறது.*

***பெண்ணாகரம் வட்டத்தில் 261 பெண் குழந்தைகள்***

***நல்லம்பள்ளி வட்டத்தில் 226 பெண் குழந்தைகள்***

***காரிமங்கலம் வட்டத்தில் 130 பெண் குழந்தைகள்***

***பாலக்கோடு வட்டத்தில் 125 பெண் குழந்தைகள்***

***மொரப்பூர் வட்டத்தில் 110 பெண் குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர்.***

***- மனித உரிமைக் கங்காணி, செப். 1998***

11. உங்கள் வீட்டில் இவர்கள் செய்யும் வேலைகளைப் பட்டிய-டுக

| | ஆண் | பெண் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

மேற்கண்ட பயிற்சியில் நீங்கள் காணும் பாகுபாட்டை விவாதித்து அறிக்கை ஒன்றைத் தயார் செய்க.

**பள்ளி நடவடிக்கை**

12. அ). பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து கருக்கொலை, சிசுக் கொலைக்கு எதிராக சில வாசகங்களைத் தயாரிக்கவும்.

ஆ). ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து கருக்கொலைக்கும், சிசுக் கொலைக்கும் எதிரான நாடகங்களைத் தயாரித்து பள்ளியிலும், ஊரிலும் நடத்திக் காண்பிக்கவும்.

இ). குழந்தைகள் தினத்தன்று பெண் குழந்தை பாகுபாடு, கருக் கொலை, சிசுக் கொலை இவைகளுக்கெதிரான ஊர்வலம் ஒன்றை நடத்துக

ஈ). உங்கள் பள்ளி இருக்கும் ஊரில் எத்தனைப் பெண் குழந்தைகள் பள்ளிப் படிப்பை இடைநிறுத்தியுள்ளனர் என்பதைக் கண்டறிந்து அந்தக் குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்ப்பதற்கான முயற்சிகளை மனித உரிமைக் கல்வி மாணவ, மாணவியர் மேற்கொள்ள வேண்டும்.

*நமது கிராமங்களில் 70 விழுக்காடு மாணவர்க்கு ஆரம்பக் கல்வியே போய்ச் சேர்வதில்லை. நமது நாட்டில் 70 விழுக்காடு குழந்தைகளின் திறன் எல்லாம் பள்ளிகளுக்கே செல்லாமல் வீணாவதை தடுப்பது எப்படி?*

*முதல் வகுப்பில் சேரும் குழந்தைகள் தொடர்ந்து படிப்பதில்லை. படித்தாலும் திறன்களைப் பெறுவதில்லை. இதற்கு பெற்றோர் காரணமாக முடியுமோ? ஐந்தாவது படித்து முடித்த குழந்தை தாய் மொழியில் சரியாக எழுதப் படிக்கக் கூட தெரியாத பொழுது, சிறிய கூட்டல், கழித்தல் கணக்குக் கூட போட முடியாத பொழுது அத்தகைய கல்விச் சாலையின் மீது எப்படி பெற்றோருக்கு நம்பிக்கை பிறக்கும்? உண்மையான கல்வி இங்கு நடைபெறாததால் வெளியே தள்ளப்படுகின்றனர்?*

**'தமிழரசு'** - ஜூலை 1997.

## ஒரு பெண் குழந்தையின் கடிதம்



அன்பு நெஞ்சங்களே,

ஸ்கேனுக்கும், கள்ளிப்பாலுக்கும், கடும் வெயிலுக்கும் ப–யாக்காமல் விட்டதால் இன்று துடிப்புள்ள பெண் குழந்தையாக இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறேன். அதேசமயம் எனக்குள்ள ஆசையல்லாம் என்னைப் போலவே ஒவ்வொரு பெண் குழந்தையும் கொல்லப்படாமல் மகிழ்ச்சியாகப் பல பிறந்த நாள்களைக் கொண்டாட வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதே.



இந்திரா காந்தி

எனக்கு மிகவும் வருத்தமாக உள்ளது. பெண் குழந்தைகளைப் பொறுத்தவரை வெறுக்கப்படுகிறார்கள், கருவிலேயே கொல்லப் படுகிறார்கள், சத்தான உணவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை, ஆண், பெண் வளர்ப்பில் பாகுபாடு காட்டுகிறார்கள், நீ – பலவீனமானவள் என கூறியே வளர்க்கிறார்கள், ஆணுக்கும், குடும்பத்தினருக்கும் அடிமை வேலை செய்ய பயிற்றுவிக்கிறார்கள்.

விளையாட்டிலும் ஆண், பெண் பாகுபாடு, போதிய கல்வியோ கொடுக்கப்படுவதில்லை! பா–யல் கொடுமைகள் விளையாட்டுத்தனங்கள் சுட்டித்தனங்கள் மறுப்பு, என பலப்பல சோகச் செய்திகள்.



கிரண் பேடி

அம்மாவிடம் கேட்டேன்? ''ஏனம்மா ஆம்புளப்புள்ளையைத் தலைக்கு மேலே தூக்கி வைச்சி ஆடுறாங்க? பொம்பளப்புள்ளயன்னா ஆட்டை மாட்டைப் போல நடத்தறாங்களே'' அம்மா சொன்னாங்க! ''நம்ம சமூகம் ஆணாதிக்க சமூகம், மதங்களில் (கடவுளே சொன்னதாகச் சொல்–) இப்படியெல்லாம் வெறுக்கச் சொல்–யிருக்காங்க'' எனக்கு கொஞ்சமாகத்தான் புரிந்தது. ''நானும் பொம்பளப்புள்ள தானேம்மா. அப்ப ஏன் என்னை மட்டும் நீங்க வெறுக்கல?'' அம்மா சொன்னாங்க! ''உன்னையும் நிறைய பேர் வெறுத்தாங்க. நீ பிறக்கறதுக்கு முன்னாடி என்னை ஆசீர்வதிச்சவங்க எல்லாம் நல்ல அழகான ஆம்பிளப்புள்ளையா பெற்றுக் கொடு'' என்று சொன்னாங்க. ஆனால் நாங்க பொம்பளப்புள்ள தான் வேணும்னு ஆசைப்பட்டோம், ஏனம்மா எனக் கேட்டேன். காரணம் மனித நேயம் காத்த பெரியார் தாத்தாதானாம். அவர் ஆணும் பெண்ணும் சமமே. பெண்களும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டால் வ–மை மிக்கவர்களாக, அறிவில் சிறந்தவர்களாக, சாதனை புரிபவர்களாக, தலைமைப் பண்பு



பி.டி. உஷா

மிக்கவர்களாக வருவார்கள் என்றாராம். அம்மாவிடம் கேட்டேன், நான் சுதந்திரமாக சுற்றித்திரிகிறேன். வேறுபாடில்லாமல் அன்பா பழகறேன். அம்மா நீங்க என்னை தைரியமா வளர்க்கிறீர்களே, அதேபோல தைரியமா வளர்க்கப்பட்ட பெண்கள் யாருன்னு கேட்டேன். அப்ப, அம்மா கூறினார்.

- போர்க்களத்தில் போரிட்ட ஜான்சிராணி லட்சுமிபாய்
- பிரதம மந்திரியான இந்திரா காந்தி, பெனாசிர் பூட்டோ
- சமூக சேவகியாய் புகழ் பெற்ற அன்னை தெரசா
- காவல்துறை அதிகாரி கிரண் பேடி
- சுற்றுச் சூழல் போராளியாய் மேதா பட்கர்
- இசுலாமிய சமூக பெண்ணடிமைத்தனத்தை ஏற்காது உயிருக்கும் அஞ்சாமல் கருத்து வெளியிட்ட தஸ்-மா நஸ்ரீன்
- நாத்திக இயக்கத்தை தலைமையேற்று வழிநடத்திய முதல் பெண் அன்னை மணியம்மையார்
- பெண்களை இழிவுபடுத்தும் பொட்டுக்கட்டிவிடும் பழக்கத்தை எதிர்த்த முத்துலட்சுமி
- விளையாட்டு வீராங்கனை பி.டி. உஷா

உங்களுக்கெல்லாம் என் அன்பான வேண்டுகோள்!

உங்கள் பெண் குழந்தைகளை அலங்கரிக்கும் பொம்மையாக்காமல், அடக்கி ஒடுக்காமல், அறிவு சார்ந்த நல்ல கல்வி கொடுத்துச் சுதந்திரமாக வளர்த்து ஆளாக்குங்கள் என்பதே. பின் பெண் கொடுமைகளுக்கும், பா–யல் சீண்டல், வன்முறைகளுக்கும் வரதட்சணைக்கும் வழியிருக்காதே.

இப்படிக்கு...

*அழகி*

*— 'நாளை', சனவரி . மார்ச்*




பாடம் 6



# குழந்தைத் தொழிலாளர்கள்



## குழந்தைத் தொழிலாளி 1



### நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று!

’அந்தச் சிறுவனுக்குப் பத்து வயதிருக்கலாம். கணக்குப்பாடம் என்றால் அவனுக்குக் கொள்ளைப் பிரியம். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என எல்லா வகைக் கணக்கும் அவனுக்கு அத்துப்படி. ஆனால் குடும்பத்தின் வறுமைக் கணக்கு அவனை திசைமாற்றியது. புத்தகப் பையைத் தூக்கிய கைகளில் பழைய சோத்துப் போணியைத் தூக்கினான். படிப்பு அவனைவிட்டு விலகிப் போனது! பள்ளிக்கூடம் தவறிப் போனதிலும் கணக்கு வகுப்பு கிடைக்காமல் போனதிலும் அவன் துயரம் கொண்டான். என்றாலும், தீப்பெட்டித் தொழிற்சாலையில் ***குச்சிகளை எண்ணிப்*** பெட்டிகளில் அடைக்கின்ற வேலைக்கு, தான் அனுப்பப்படுகிறோம் என்ற செய்தி அறிந்து தொலைந்த மகிழ்ச்சியை மீட்டுக் கொண்டான்.

முதல் நாள் மேஸ்திரி வந்து வேலை சொல்-க் கொடுத்தார். ஆர்வமாக குச்சிகளை எண்ண ஆரம்பித்தான். மேஸ்திரி ஐம்பது வந்தவுடன் நிறுத்தச் சொன்னார். ஐம்பதுக்கு மேல் எண்ண வேண்டும் என்பது அந்தச் சிறுவனின் ஆசை, ஆனால் அது ஒரு முறை கூட நிறைவேறாமலே போயிற்று!

*- ’புதியகாற்று’, ஜனவரி 2003*

**சிந்தனைக்கு**

சிறுவனின் நிறைவேறா ஆசை எது?

## குழந்தைத் தொழிலாளி 2



### நிறைவேறாக் கனவு

கங்கா - 12 வயது, இவள் வீட்டில் மொத்தம் 6 குழந்தைகள். கங்கா மூன்றாவது குழந்தை. அவள் பள்ளிக்குப் போனதில்லை. கடந்த 6 வருடங்களாகப் பீடி சுற்றுகிறாள். ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வேலை செய்கிறாள். எஞ்சிய நேரங்களில் வீட்டு வேலை செய்கிறாள். இவள் பெற்றோர் கல்லாதவர்கள். இவள் அம்மா, விவசாயத் தொழிலோடு பீடியும் சுற்றுகிறாள். அப்பாவும் விவசாயத் தொழிலாளியே. கங்காவுக்குக் கடுமையான முதுகு வ-, முதுகில் வெள்ளைத் தழும்புகள் வேறு, எனினும் ஓய்வின்றி வேலை செய்ய வேண்டிய கட்டாயம். பள்ளிக்குப் போக ஆசைப்பட்டாள். எனினும், அவளால் போக இயலவில்லை. இப்போதும் எழுத்தறிவு பெற ஆசைதான். ஆனால் குடும்பச்சூழல் அனுமதிக்கவில்லை.

- *'விமென்ஸ் -ங்க்', ஏப்ரல் 2001*

**சிந்தனைக்கு**

அ. கங்கா எதற்கு ஆசைப்பட்டாள்?

ஆ. நிறைவேறா கனவு எது?



## குழந்தைத் தொழிலாளி 3

### இழந்தவை விரல்கள் அல்ல வாழ்வு!

பதினொரு வயது குல்திப் - இவன் உழைப்பின் வருமானத்தில் தான் இவன் குடும்பம் வாழ்கிறது. டில்-யில் கரண்டிகள் செய்யும் தொழிற்சாலையில் வேலை செய்கிறான். ஒருநாள் இயந்திரத்தில் வேலை செய்கின்ற போது, விரல்கள் இயந்திரத்தில் அகப்பட்டு மூன்று விரல்களும் அறுந்து போய் விட்டன. வாழ்வின் அனைத்து மகிழ்ச்சியும் பறிபோய்விட்டது.

- *'பிரண்ட்லைன்', ஜனவரி 24, 1997*

**சிந்தனைக்கு**


விரல்கள் போய்விட்டதால் எதை இழந்தான்?

## குழந்தைத் தொழிலாளி 4

### பிஞ்சில் பழுத்தது

நான் கணவனை இழந்த விதவை. எனக்கு 4 மாதக் கைக்குழந்தை ஒன்று உள்ளது. ஆதரவற்ற என் குடும்பத்தை 13 வயதுள்ள என் மகன் கடந்த 3


ஆண்டுகளாக ஒரு தொழிற்பட்டறையில் வேலை செய்து காப்பாற்றி வருகிறான். 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளே தொழி லாளர்களாக வேலை செய்யக் கூடாது என்ற சட்டம் என் மகனை வேலை செய்வதி -ருந்து தடுத்து விட்டது. ஆகவே 13 வயது டைய என் மகன் 14 வயதிற்கு மேற்பட்டவன் என பொய்யாக நிரூபிக்க சான்றிதழ் பெற முயன்று வருகிறேன்.



– *'பிரண்டலைன்', ஜனவரி 24, 1997*

**சிந்தனைக்கு**

பழுத்த பிஞ்சு இழந்தது எதை?



## குழந்தைத் தொழிலாளி 5

### குடும்பத் தலைவனான குழந்தை


என் பெயர் ராமன். நான் ஒரு ஹோட்ட-ல் வேலை பார்க்கிறேன். பரோட்டா, சப்பாத்தியெல்லாம் நன்றாகச் செய்வேன். என் குடும்பத்தின் வறுமை தான் என் சொந்த மாநிலமான பீகாரி-ருந்து டில்-க்கு வரச் செய்தது. நான் இங்கு வரும் போது ஒன்பது வயது. என் சின்ன தவறுகளுக்கும் என் முதலாளி என்னை அடிப்பார். காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை வேலை செய்கிறேன். எனக்கு இப்போது வயது 13. எனக்கு மாதம் 500 ரூபாய் சம்பளம். ஆண்டிற்கு ஒரு முறை அல்லது இருமுறை ஊருக்குச் செல்வேன். எனக்கு இரு சகோதரர்களும் சகோதரிகளும் உண்டு. என் பெற்றோர் விவசாயக் கூ-கள். நான் சம்பாதிப்பதை என் குடும்பத்திற்குத்தான் செலவிடுகிறேன். எனக்கு எழுதவோ, படிக்கவோ தெரியாது. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளைப் பார்த்திருக்கிறேன். பள்ளி வாழ்க்கையைப் பற்றி எனக்குத் தெரியாது. வேலை செய்யாமல் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்று சொல்வோரைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. நான் பள்ளிக்கூடம் போனால், என் குடும்பத்தைக் கவனிப்பது யார்?

**சிந்தனைக்கு**

இராமனுக்கு ஏன் பள்ளிச் செல்ல விருப்பமில்லை?

## குழந்தைத் தொழிலாளி 6

### வன்முறையில் வன்முறை



பதினொரு வயசு ஆயிஷா நான்காம் வகுப்போடு வறுமை காரணமாகப் படிப்பை நிறுத்திக் கொண்டாள். வீதியில் துள்ளிக் குதித்து விளையாடிக் கொணடிருந்தவளுக்கு 'வீட்டு வேலை' ரூபத்தில் துன்பம் வந்தது. இரண்டு மஞ்சள் பையோடு சென்னைக்கு அழைத்து வரப்பட்டாள்.

இங்கே வேலைக்கு வந்து ஆறுமாசம் தான் ஆச்சுது. வீட்டில் ரொம்ப கஷ்டம். ரொம்ப நல்லா வச்சு சோறு போடுவாங்க, ஐந்நூறு ரூபா தருவாங்கன்னு சொன்னாங்க. ஆனா அப்படி செய்யல. ரொம்ப அடிச்சாங்க. ரப்பர் பைப்பால விளாசுவாங்க. அப்படியே வீங்கி விடும். ரத்தமா வரும். மருந்துகூட கிடையாது. துணியிலயே துடைச்சிடுவேன் வ-யோட படுத்துத் தூங்குவேன். அப்படித்தான் போன வாரம் புதன்கிழமை (20.11.2002) ரப்பர் பைப்பால் அடிச்சாங்க. கண்ணுமேலேயே அடிச்சதால ரெண்டு கண்ணும் தெரியல. வெளியில ஒடவும் முடியல. ஆசிடை எடுத்தாந்து கையில ஊத்தினாங்க. நெருப்பால சுட்டாங்க. அங்கே இருந்தா செத்துப் போயிடுவேன்னு பயந்து வெளியிலே ஒடிவந்துட்டேன். திரும்பவும் அழைச்சிட்டுப் போய் ரூம்ல அடைச்சிட்டாங்க.

*குமுதம் ரிப்போர்ட்டர் - 01.12.2002.*

**சிந்தனைக்கு**

வீட்டு வன்முறையால் ஆயிஷா என்னவெல்லாம் இழந்தாள்?

## வகுப்புப் பயிற்சி

1. ஆசிரியர் மாணவர்களை 6 குழுக்களாகப் பிரிக்கவும். (இருபாலர் பள்ளியாய் இருந்தால் மூன்று குழுக்கள் மாணவர்களை மட்டும் கொண்டதாகவும் மற்ற மூன்று குழுக்கள் மாணவிகளை மட்டும் கொண்டதாகவும் இருக்கட்டும்). ஆண் குழந்தை சம்பந்தப்பட்ட மேற்கண்ட உண்மை நிகழ்வுகளை ஆண் குழந்தைகளிடமும், பெண் குழந்தைகள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளைப் பெண் குழந்தைகளிடம் கொடுத்து வாசிக்கச் சொல்லவும். ஆசிரியர்களின் துணையோடு அந்தந்தக் குழுக்கள் உண்மை நிகழ்வுகளின் அடிப்படையில் ஓரங்க நாடகம் ஒன்று தயாரிக்கவும்.

2. ஒவ்வொரு குழுவிடமும் கீழ்க்கண்ட கேள்விகளுக்கான பதிலைத் தயாரித்து வரச்சொல்லவும்.

## அ). குழந்தைத் தொழிலாளி 1

1). இக்குழந்தைத் தொழிலாளி செய்த வேலை என்ன?

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

2). இக்குழந்தை தொழிலாளியானமைக்குரிய காரணம் என்ன?

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

3). இக்குழந்தை எதை விரும்பி வேலையில் சேர்ந்தான்?

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

4). இக்குழந்தைத் தொழிலாளி இழந்த உரிமைகள் யாவை?

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

## ஆ). குழந்தைத் தொழிலாளி 2

1). இக்குழந்தைத் தொழிலாளி செய்த வேலை என்ன?

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

2). இக்குழந்தை தொழிலாளியானமைக்குரிய காரணம் என்ன?

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

3). இக்குழந்தை எதை விரும்புகிறாள்?

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

4). இக்குழந்தை இழந்த உரிமைகள் யாவை?

## இ). குழந்தைத் தொழிலாளி 3

1). இக்குழந்தைத் தொழிலாளி செய்த வேலை என்ன?

2). இக்குழந்தைத் தொழிலாளியானமைக்குரிய காரணம் என்ன?

3). இக்குழந்தை இழந்தது விரல்கள் மட்டுந்தானா?

4). இக்குழந்தைத் தொழிலாளி இழந்த உரிமைகள் யாவை?

## ஈ). குழந்தைத் தொழிலாளி 4

1). இக்குழந்தைத் தொழிலாளி செய்த வேலை என்ன?

2). இக்குழந்தைத் தொழிலாளியானமைக்குரிய காரணம் என்ன?

3). தன் மகனுக்குப் பொய்யான வயதுச் சான்றிதழ் பெற தாய் முயன்றதற்கான காரணம் என்ன?

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

4). இக்குழந்தைத் தொழிலாளி இழந்த உரிமைகள் யாவை?

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

## உ). குழந்தைத் தொழிலாளி 5

1). இக்குழந்தைத் தொழிலாளி செய்த வேலை என்ன?

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

2). இக்குழந்தைத் தொழிலாளியானமைக்குரிய காரணம் என்ன?

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

### நாங்களே

எண்ணிலடங்கா தீக்குச்சிகளைத் தயாரிப்பதும் நாங்களே
எங்கள் நோய் நொடிகள் படைக்கும் வளையல்களால்
புதிய மணப்பெண்களின்
அழகிய சிவந்த மணிக்கட்டினை அலங்கரிப்பதும் நாங்களே!
சிடக்கான் துகள்களை எங்கள் நுரையீரல் முழுதும் நிரப்பி
பொறுக்க முடியா வேதனை மரணங்களுக்கு ஆளாக்கும்
உங்கள் சுரங்கங்களில் வேலை செய்யும் குழந்தைகளும் நாங்களே!
ஒய்யார வீடுகளில் குடியிருக்கும்
மென்மை, அழகு, தூய்மை படைத்த உங்கள் பாதங்கள் பதியும்
கம்பளங்களையெல்லாம்
எங்கள் குழந்தைப்பருவ இழைகளால் நெய்தவர்கள் நாங்களே

*- வர்தனாசிங், கால் தடங்கல்*

3). இக்குழந்தை ஏன் பள்ளிக்குச் செல்ல விரும்பவில்லை?

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

4). இக்குழந்தைத் தொழிலாளி இழந்த உரிமைகள் யாவை?

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

**ஊ). குழந்தைத் தொழிலாளி 6**

1). இக்குழந்தைத் தொழிலாளி செய்த வேலை என்ன?

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

2). இக்குழந்தை படிப்பை நிறுத்துவதற்குரிய காரணம் என்ன?

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

3). இக்குழந்தைத் தொழிலாளியானமைக்குரிய காரணம் என்ன?

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

4). இக்குழந்தைத் தொழிலாளி இழந்த உரிமைகள் யாவை?

----------------------------------------------------------------------

----------------------------------------------------------------------

3. ஏற்கெனவே நீங்கள் படித்த முதல் மூன்று பாடங்களை நினைத்துப் பாருங்கள்?

**போற்றிப், பாராட்டி வளர்க்கப்பட்ட குழந்தை எப்படியெல்லாம் சிதைக்கப்படுகிறது என்பதை நினைத்துப் பார்த்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் தருக.**

ஒரு குழந்தை, தொழிலாளியாக மாறுகிறபோது

அ). இழக்கும் மகிழ்ச்சிகள் யாவை?

1..........................................................................................................................

2..........................................................................................................................

3..........................................................................................................................


ஆ). இழக்கும் உரிமைகள் யாவை?

1..........................................................................................................................

2..........................................................................................................................

3..........................................................................................................................

## ஜோசப்பின் கதை




**ஒ**ன்பது வயது ஜோசப் செருப்புத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்காக 3 மாதங்களுக்கு முன் திரு.சேவியர் எனும் முதலாளியிடம் கொண்டு வந்து விடப்பட்டான். அன்று கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முந்தைய இரவு. அவன் தூங்கவே இல்லை. எஜமானனும், எஜமானியும் கோயிலுக்குப் புறப்பட்டுச் செல்லும் வரை காத்திருந்தான். பிறகு அலமாரியி-ருந்து பேனாவை எடுத்து வந்து கசங்கிப் போன காகிதத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு எழுதத் தயாராகி விட்டான். முதலாவது எழுத்தை எழுதும் முன் நெஞ்சு படபடத்தது. இரண்டொரு தரம் வாயிற் கதவையும், சன்னலையும் பார்த்துக் கொண்டான். பெஞ்சின் பக்கத்தில் தரையில் மண்டியிட்டு அமர்ந்து கொண்டு எழுதத் தொடங்கினான் ஜோசப்.

அன்புக்குரிய தாத்தா என்று எழுதினான். 'கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் அனுப்புகிறேன், ஆண்டவன் உங்களுக்கு அருள் புரிய வேண்டுகிறேன். எனக்கு அப்பாவும், அம்மாவும் இல்லை. உங்களைத் தவிர வேறு யாரும் இல்லை எனக்கு.'

நான் இங்கு சந்தோஷமாகவே இல்லை. என்னை இங்கு யாருக்கும் பிடிக்கவே இல்லை. நேற்று கூட என்னை அடித்து நொறுக்கி விட்டார்கள். எஜமான் என் கையைப் பிடித்து இழுத்துச் சென்று நையப் புடைத்தார். ஏன் தெரியுமா? அவர்களுடைய குழந்தையை ஆட்டிக் கொண்டிருக்கும் போது என்னையும் அறியாமல் நான் தூங்கிப் போய் விட்டதால்தான். அதேபோல் சென்ற வாரம் என் எஜமானி என்னை மீனைச் சுத்தம் செய்யச் சொன்னார். நான் வால் பக்கத்தி-ருந்து ஆரம்பித்தேன். உடனே எஜமானி அந்த மீனைப் பிடுங்கி அதன் தலையை என் முகத்தில் வைத்துத் தேய்த்தாள்.

ஏனைய வேலையாட்கள் கே- செய்கிறார்கள். அவர்கள் என்னை மதுக்கடைக்குப் போய் மது வாங்கி வரச் சொல்கிறார்கள். அடுத்த தோட்டத்திலுள்ள வெள்ளரிக்காய்களைத்



திருடி வரச் சொல்கிறார்கள். எஜமான் கைக்குக் கிடைப்பதை எடுத்து என்னை அடிக்கிறார். சாப்பிட இங்கே எனக்கு எதுவும் கிடைப்பதேயில்லை. காலையிலும், இரவிலும் ரொட்டியையும் மத்தியானத்துக்கு கஞ்சியும் கொடுக்கிறார்கள். என்னை வாசற்படியில் படுக்கச் சொல்கிறார்கள். அவர்கள் குழந்தை அழுதால் நான்தான் எழுந்து தொட்டில் ஆட்ட வேண்டும்.

தாத்தா! தயவு செய்து என்னை இங்கிருந்து கூட்டிக் கொண்டு போய் விடுங்கள். உங்களை மன்றாடிக் கேட்கிறேன். இல்லையேல் நான் செத்துத்தான் போவேன். அங்க வந்து எந்த வேலையும் பார்க்க நான் தயாராக இருக்கிறேன். நான் ஏதாவது குறும்பு செய்தால் என்னை எப்படி வேண்டுமானாலும் அடியுங்கள். ஆனால் தயவு செய்து என்னை இங்கு விட்டு வைக்காதீர்கள். என்னால் எதையும் இனிமேல் சகிக்க முடியாது. எனக்கு உயிர் போகிறது. இங்கிருந்து கிராமத்திற்கு நடந்தே வந்து விடலாம் என நினைத்தேன். ஆனால் என்னால் அது முடியாது.

நான் பெரியவன் ஆனதும் உங்களைக் கருத்துடன் பார்த்துக் கொள்வேன். தாத்தா! உடனே புறப்பட்டு வாருங்கள். எந்நேரமும் கொடுமையாலும், பசியாலும், வ-யாலும், கவலையாலும் அழுது கொண்டேயிருக்கும் அனாதைச் சிறுவனான எனக்கு நீங்கள் கருணை காட்ட வேண்டும். நாயினும் கேவலமாக நடத்தப்படும் நான் இனிமேல் இங்கிருக்கவே முடியாது.

தாத்தா தயவு செய்து உடனே வாருங்கள்

*துயரில் வாடும் உங்கள் பேரன் ஜோசப்*

*(ரஷ்ய சிறுகதை, பூக்களுக்கும் சுமைகள் உண்டு, ஆண்டன் செகோவ் - தழுவல்)*

## வீட்டுப்பயிற்சி

**1). மேலே உள்ள கதையை நிறுத்தி நிதானமாக வாசிக்கவும். ஒருமுறை மட்டுமல்ல, பலமுறை வாசிக்கவும்.**

**2). நீ வாசிக்கும் போது உன் உள்ளத்தைத் தொட்ட வார்த்தை அல்லது சொற்றொடரைக் கோடிட்டுக் காட்டவும்.**

**3). குழந்தை உழைப்பு சரி அல்லது சரியில்லை?**

**இக்கருத்தையொட்டி வகுப்பு மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து பட்டிமன்றம் நடத்தவும்.**

4). குழந்தைத் தொழிலாளர்கள் சிலரைக் கண்டறிந்து பேட்டி காணவும்.



கீழ்க்கண்ட தகவல்களை அவர்களிடமிருந்து சேகரிக்கவும்.

அ). பெயர், கல்வி நிலை, குடும்பத்தில் பொருளாதார நிலை, குழந்தைத் தொழிலாளியாவதற்கான காரணங்கள், செய்யும் தொழில், தொழில் செய்யுமிடத்தில் இவர்கள் நடத்தப்படும் முறை, இவர்களின் எதிர்காலக் கனவுகள், பிற

ஆ). இத்தகவல்களைக் கொண்டு அறிக்கை ஒன்றைத் தயாரிக்கவும்.

இ). தயாரித்த அறிக்கையினை வகுப்பில் வாசித்துக் காட்டவும்.

ஈ). அறிக்கையின் அடிப்படையில் ஆசிரியர் தன் கருத்துக்களைக் கூறுவார்.

5). அ). மாணவர்களை வீட்டி-ருந்து தீப்பெட்டி ஒன்றைஎடுத்து வர கூறவும்.

ஆ). அவைகளில் தீப்பெட்டி தயாரிக்கப்பட்ட கம்பெனி எதுவென்றும், மாணவர்கள் கொண்டு வந்த தீப்பெட்டிகளில் ஒட்டுமொத்தமாக எத்தனை கம்பெனிகளி-ருந்து செய்யப்படுகின்றன என்பதைக் கவனிக்கக் கூறவும்.



இ). பிறகு ஒவ்வொரு மாணவரும் கொண்டு வந்த தீப்பெட்டிகள் குழந்தைத் தொழிலாளர் நிலை பற்றி என்ன உணர்த்துகிறது என்று கற்பனை செய்து பார்த்து மூன்று வரிகளில் எழுதக்கூறவும்.

6). பெரிய கிராமங்களில் அல்லது சாலைகளில் ஓட்டல்களைப் பார்த்திருப்பாய் அல்லவா? அந்த ஓட்டல்களில் வேலை செய்யும் சிறுவர்களைப் பார்த்திருப்பாய். இந்தப் பாடத்தைப் படிக்கும் முன் ஓட்ட-ல் நீ சாப்பிடப் போகும் உணவுதான் உனக்கு நினைவிருக்கும். இனிமேல் ஓட்டலுக்குச் செல்லும் போது பாத்திரம் கழுவும் சிறுவர்களை மேஜை துடைக்கும் சிறுவர்களைக் காண நேர்ந்தால் அவர்கள் ஏன் தொழிலாளி ஆனார்கள் என்று கேட்டறிக.

அ). நீ ஓட்ட-ல் சந்திக்கும் இந்தச் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது

சட்டப்படி தவறு என்பதை ஓட்டல் முதலாளிக்கு அறிவிப்பாயா?

ஆ). குழந்தைகளைத் தொழிலாளியாக வைத்திருக்கும் ஓட்டல்களில் இனி சாப்பிட மாட்டோம் என்று உன் வகுப்பு மாணவர் அனைவரும் முடிவெடுப்பீர்களா?

இ). மளிகைக் கடையில் தன் சிறிய கைகளால் பொட்டலம் போடும் குழந்தைகளைப் பார்த்திருக்கிறீர்களா?

கடை முதலாளியிடம் இது தவறு என்று சொல்வீர்களா?

சட்டத்திற்குப் புறம்பான இச்செயலை அதிகாரிகளுக்குத் தெரிவிப்பீர்களா?

7). பட்டாசுத் தொழிற்சாலைகள், மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் இடங்கள் லேத் பட்டறைகள், தெருவோரக் கடைகள், டீக்கடைகள், மிட்டாய்க்கடைகள், தோட்டங்கள், சுற்றுலாத்தலங்கள் மற்றும் கடற்கரைகள் போன்ற இடங்களில் தொழிலாளர்களாய் வேலை செய்யும் குழந்தைகளைப் பார்த்திருப்பீர்கள். இவர்களில் யாராவது ஒருவரைச் சந்தித்து அவர்கள் குழந்தைத் தொழிலாளியாக மாறியமைக்கான காரணத்தைக் கேட்டறிந்து வகுப்பிற்கு வரும்போது தொகுத்து வரச் செய்யவும்.

## குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புக்கு நீங்கள் என்ன செய்யலாம்?

- 18 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவச தரமான கட்டாயக் கல்வியைக் கோரிக்கையாக்குங்கள்.
- உங்கள் பள்ளியில், பகுதிகளில் குழந்தைத் தொழிலாளர் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கல்.
- குழந்தைத் தொழிலாளர்களை குழந்தை அவமதிப்புப் பற்றிய விபரம் கிடைத்தால் உடனடியாக உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கவும்.
- நீங்களோ, உங்கள் குடும்பங்களிலோ குழந்தைகளைத் தொழிலாளர் களாக வைக்காதீர்கள்.
- மூத்த தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் வழங்கி, அவர்தம் குழந்தைகள், குழந்தைத் தொழிலாளியாக போகாமல் பார்த்துக் கொள்ளவும்.
- அரசியல் கட்சிகளையும் மக்கள் பிரதிநிதிகளையும் குழந்தைத் தொழி லாளர் முறை ஒழிப்புக்கான முயற்சிகளை மேற்கொள்ளச் சொல்லுவோம்.

***- வெளியீடு, குழந்தை உழைப்பு ஒழிப்புப் பிரச்சாரம், தமிழ்நாடு***

பாடம் 7


# கொத்தடிமைக் குழந்தைகள்

**நிகழ்வு 1**


## சிலந்தியும் ஈயும்

முடிகள் நிறைந்த பிசுபிசுப்பான உடலை உடைய சிலந்திப் பூச்சி. இருட்டில் பதுங்கியிருக்கிறது. அப்பூச்சி கொலைகார வலையைப் பின்னி வைத்துள்ளது. கவனக் குறைவாக, பரிதாபத்துக்குரிய ஈ இந்த வலையில் விழுந்தால், அந்த ஈயை கெட்டியாய்ப் பற்றிக் கொண்டு கொன்று நெரிப்பதற்கான முன் கைகளைக் கொண்டது.

அந்தச் சிலந்தி ஒரு மூலையில் ஆடாமல் அசையாமல் அமர்ந்து கொண்டு எப்போது ஈ தன் பிடியில் வந்து சிக்குமென்று காத்திருக்கிறது. வலையில் மாட்டும் ஈயானது தப்புவதற்குச் சிறிதும் வழியின்றி கடைசி இழை வரை யாவற்றையும் சிறப்பாக அமைத்து தனது வலையைக் குறையற்றதாய் நெய்கிறது. இவ்வலையில் சிக்கும் இரை எவ்வளவுதான் துடியாய்த் துடித்தாலுங்கூட வலை பிய்ந்து போகாதபடி கெட்டியாய்ப் பின்னியுள்ளது. வலை தயாராகி விட்டது. கண்ணி வைக்கப் பட்டு விட்டது. இனி தப்ப வழி எதுவுமில்லை.



பசியால் வாடும் ஈ உணவு தேடிக் கொண்டு எப்போது வருமென்று சிலந்தி காத்திருக்கிறது. ஈ வந்து சேர்கிறது. வலையில் சிக்குண்டு துடிக்கிறது. ஈ அகப்பட்டுக் கொண்டதைக் கண்ட சிலந்தி, பசி வெறி கொண்ட கண்களுடன் கரங்களை அசைத்துக் கொண்டு இரையை நோக்கி முன்னேறுகிறது. ஈ தன்னை நெருங்கி வரும் பயங்கர அபாயத்தைக் கண்டு நடுங்குகிறது. பிசுபிசுப்



பான அந்த வலையி-ருந்து தன்னைத் தப்பிக்க அரும்பாடுபடுகிறது. ஆனால் முயற்சிகள் பயனளிக்க வில்லை.

சிலந்தி, முடிகள் நிறைந்த தனது கொடூரக் கரங்களை நீட்டி ஈயைப் பிடித்து தனது கொலைகார அரவணைப்பில் கெட்டியாய் அழுத்துகிறது; பல முறை பிடுங்குகிறது; இரத்தத்தை உறிஞ்சுகிறது. திரும்பி திரும்பி வந்து ஈயின் உட-லுள்ள இரத்தம், சத்து அனைத்தையும் உறிஞ்சுகிறது. பாவம் அந்த ஈ! எளிதில் அது உயிரை இழப்பதில்லை, குத்துயிரும் கொலை உயிருமாய் நெடு நேரம் திணறுகிறது. இரத்த வெறி கொண்ட அந்தச் சிலந்தி, ஈயின் உயிர் போகும் வரை, அதை விடுவதில்லை.

ஈயின் உயிரை உள்ளுக்கு இழுக்கிறது; அதன் பலத்தை அழிக்கிறது. இரத்தத்தையும் குடிக்கிறது. ஈயிடமிருந்து பருக எதுவுமே இல்லாமற் போன பிறகுதான் அதை விடுகிறது.

*'வில்ஹெல்ம்', லீப்னெஹட் முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ*

**சிந்தனைக்கு**

அ. ஈ - சிலந்தி இந்த இரண்டின் செயல்பாட்டை என்னும் போது எழும் உங்கள் உணர்வு என்ன? ☑ அடிக்கவும்.

| i). சிலந்தி மீது | | ii). ஈ மீது | |
|---|---|---|---|
| கோபம் | ☐ | கோபம் | ☐ |
| வருத்தம் | ☐ | வருத்தம் | ☐ |
| எரிச்சல் | ☐ | எரிச்சல் | ☐ |
| பரிதாபம் | ☐ | பரிதாபம் | ☐ |

ஆ. உங்களின் இந்த உணர்விற்கான காரணங்கள் என்ன?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

கொத்தடிமைகளை, விடுதலை செய்வதைக் காட்டிலும் மிக முக்கியமானது அவர்களுடைய மறுவாழ்வு. வேலை வாய்ப்பின்மையை இழந்த இத்தொழிலாளர்கள் தம் வாழ்வுக்கான அடிப்படை ஆதாரத்தையும் இழந்து விடுவார்கள். இந்த மறுவாழ்வு பெறாத தொழிலாளர்களின் நிலை, கொத்தடிமை முறையைக் காட்டிலும் கொடுமையானது.

(கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டம் 1976)

இ. சிலந்தி போன்ற மனிதர்கள் உண்டா? இல்லையா? ☑அடிக்கவும்.

உண்டு ☐ இல்லை ☐

ஈ. "உண்டு" எனில் எப்படி? அவர்கள் யார் என அடையாளப்படுத்த முடியுமா?

--------------------------------------------------------------------

--------------------------------------------------------------------

--------------------------------------------------------------------

உ. ஈயை போன்ற மனிதர்கள் உண்டா? இல்லையா?

உண்டு ☐ இல்லை ☐


ஊ. உண்டு எனில் எப்படி? அவர்களை அடையாளப்படுத்த முடியுமா?

--------------------------------------------------------------------

--------------------------------------------------------------------

--------------------------------------------------------------------

**நிகழ்வு 2**



அ). "நான் வேலை பார்த்த இடத்தில் ஒரு நாள் இருபது ரூபாய் காணாமப் போச்சு. நான்தான் எடுத்தேன்னு சொல்- அடிச் சாங்க. நான் பணத்தை எடுக்கலேன்னு சத்தியம் செஞ்சேன். அவங்க அதை நம்பல. ஒரு கட்டி சூடத்தைக் கொளுத்திக் கையில எரிய விட்டாங்க. அது எரிஞ்சு முடியறவரை அசையக் கூடாதுன்னு சொல்- இரண்டு பேர் பிடிச்சுக்கிட்டாங்க. கடைசியில எங்க முதலாளியின் பொண்ணே அந்தப் பணத்தை எடுத்தது தெரிய வந்தது".

*எட்டு மாதங்களுக்கு முன்பு ரூபாய்*
*ஐந்தாயிரத்திற்கு விற்கப்பட்ட*
*ஈஸ்வரன் சொன்னது.*

ஆ). "எண்ணெய்ச் சட்டி முன்னாடி உக்காந்து வேலை பார்த்திட்டு இருப்பேன். திடீர்னு எங்க முதலாளிக வந்து எண்ணெய்க் கரண்டியால் கொதிக்கிற

எண்ணெயில சப்பென அடிப்பாங்க. எண்ணெய் தெறிச்சு எதிர்த்தாப்புல இருக்கிற என் உடம்பில் படும். பிறகு சத்தமா சிரிச்சிட்டுப் போயிடுவாங்க. இது அவங்களுக்கு விளையாட்டு"

**ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இருநூறு ரூபாய்க்கு விற்கப்பட்ட கண்ணன்.**

***- 'குமுதம் ரிப்போர்ட்டர்', 5.1.01***

## நிகழ்வு 3

காளி, வயது ஒன்பது, தந்தையை மூன்றாண்டுகளுக்கு முன்பு இழந்தவள். இன்று பட்டு தயாரிக்கும் ஆலையில் வேலை செய்கிறாள். தந்தை இறந்த போது ஈமச்சடங்கு நிறைவேற்ற மற்றும் உணவுக்காகக் காளியின் முதலாளியிடம் இவள் தாய் ரூபாய் 4000 கடனாகப் பெற்றிருந்தாள். இவர்களுக்கு நிலம் கிடையாது. தாய் கல்வெட்டும் தொழிலாளி.

காளியின் வேலை காலை 7.00 மணிக்கே தொடங்கிவிடும். இவள் வேலை செய்யும் இடத்திற்குச் செல்ல இரண்டு கிலோ மீட்டர் நடந்தே செல்ல வேண்டும். ஓய்வற்ற வேலை. அதுவும் 14 மணி நேரமும் நின்று கொண்டே வேலை செய்ய வேண்டும். சம்பளம் எவ்வளவு தெரியுமா? ஒரு மணி நேரத்திற்கு 1.50 ரூபாய், மாதத்திற்கு 200 ரூபாய்

வேலைக்குப் பிந்தி வந்தால் முதலாளி வசைபாடுவார், சில வேளை உதைக்கவும் செய்வார். 4000 ரூபாய் திருப்பித் தராதவரை வேலையை விட்டு நிற்கவும் முடியாத அவலம். தாயும் மகளும் வாங்கும் சம்பளம் இருவேளை உணவுக்கே போதாத போது கடனை எப்படித் திருப்பி அடைப்பது?

காளிக்குப் பள்ளிக்கூட நிழல்கூட தெரியாது.

***- இந்தியாவில் கொத்தடிமைக் குழந்தைத் தொழிலாளர்கள்,***
*'Human RIghts Watch - Asia', 1996, பக். 80,*

## நிகழ்வு 4




இராமசாமி என்பவர் சென்னையில நல்ல சம்பளத்துக்கு வேலை வாங்கித் தர்றதா சொல்- எங்களை கூப்பிட்டார். அதை நம்பித்தான், நானும் என் நண்பர்கள் அஞ்சு பேரும் கிளம்பிப் போனோம்.

சென்னையில எங்க அஞ்சு பேரையும் குடோன் மாதிரி இருக்கிற ஓர் அறைக்குள்ள தள்ளிட்டாங்க. காலையிலேர்ந்து ராத்திரி வரைக்கும் பொரி வறுக்கச் சொல்- கொடுமை பண்ணினாங்க. நாங்க ஒருத்தரோட ஒருத்தர் பேசிக்கக்கூட கூடாதுனு கண்டிஷன் போட்டாங்க. மீறிப் பேசினா பொரி வறுக்கிற கம்பியாலயே முதுகுல சூடு போடுவாங்க.

''சென்னையி-ருந்து ஆந்திராவுக்கு அழைச்சுக்கிட்டுப் போனார் வெங்கடேஷ். அங்கே அவர் பெரிய பொரிக் கடை வைத்திருக்கிறார். அவரும் அவர் தம்பியான பழனியும் காலையில் மூணு மணியிலேர்ந்து நைட் ஏழு மணி வரைக்கும் வேலை பார்க்கச் சொல்- எங்களைக் கொடுமைப்படுத்துவாங்க. பொரி வறுக்கிற அனலை எங்களால தாங்கவே முடியாது. அவங்களை எதிர்த்து ஒரு வார்த்தை பேசினா கூட சைக்கிள் டியூப்பால அடி வெளுத்துடுவாங்க. பக்கத்துல உள்ளவன்கூட பேசின துனால பொரி வறுக்கிற கம்பிய வெச்சு என் முதுகுல சூடு போட்டுட்டார் வெங்கடேஷ்.

எங்கூட வந்திருந்த பெஞ்சமின் ஒரு நாள் ராத்திரி கனவு கண்டு அலறினான். உடனே வெங்கடேஷும் பழனியும் ஓடிவந்து, 'ஏண்டா கத்துறே?'னு கேட்டு கன்னத்திலேயே மாறி மாறி அறைஞ்சாங்க. 'எங்க அம்மா செத்துப் போற மாதிரி கனவு கண்டேன். என்னைய ஊருக்கு அனுப்பிடுங்க'னு கெஞ்சினவனை தூக்கிப் போட்டு நெஞ்சில் மிதிச்சாங்க. பெஞ்சமின் வாயில இருந்தும் மூக்குல இருந்தும் ரத்தம் கொட்டுச்சு. உடனே அவனைத் தூக்கிப் பார்த்து, 'அண்ணே, சாகப் போறாண்ணே... சீக்கிரம் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிட்டுப் போகணும்னே'னு கத்தினேன். அதெல்லாம் நடிப்புடான்னு சொல்- அவங்க ரெண்டு பேரும் சும்மா இருந்துட்டாங்க.



அப்புறம் பெஞ்சமின் மூக்குல இருந்து ரத்தம் அதிகமா கொட்டினதைப் பார்த்துட்டு ஆட்டோவுல தூக்கிட்டுப் போனாங்க. கூடவே நானும் போனேன். ஆனா, ஆஸ்பத்திரியில பெஞ்சமின் செத்துட்டதா சொல்-க் கைய விரிச்சிட்டாங்க.

*- 'ஜூனியர் விகடன்', 25.5.03*

## வகுப்புப் பயிற்சி

1. இந்நிகழ்வுகளில் வரும் கொத்தடிமைக் குழந்தைகள்

   அ). எப்படியெல்லாம் துன்புறுத்தப்பட்டார்கள்

   ------------------------------------------------------------

   ------------------------------------------------------------

> ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படையிலேயே உள்ளார்ந்த உயிர் வாழும் உரிமையுண்டு. குழந்தையினுடைய உயிர்வாழ்வு மற்றும் வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் உறுதி செய்யப்பட வேண்டும்.
>
> ***- ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை விதி 6***

ஆ). அவர்கள் என்னென்ன வேலைகளையெல்லாம் செய்ய கட்டாயப்படுத்தப்பட்டார்கள்?

------------------------------------------------------------------

------------------------------------------------------------------

இ). ஏன் இப்படி நடத்தப்பட்டார்கள்?

------------------------------------------------------------------

------------------------------------------------------------------

ஈ). இப்படி நடத்தப்பட்டது கண்டு உன் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வுகள் யாவை?

------------------------------------------------------------------

------------------------------------------------------------------

2. கொத்தடிமைக் குழந்தைகள் இழக்கும் அடிப்படை மனித உரிமைகள் யாவை எனப் பட்டிய-டு.

| | |
|---|---|
| 1. | 7. |
| 2. | 8. |
| 3. | 9. |
| 4. | 10. |
| 5. | 11. |
| 6. | 12. |

கல்லுடைக்கும் தொழி-ல் ஈடுபடுத்தப்பட்ட கொத்தடிமைகள் பற்றிய 1980ம் ஆண்டின் வழக்கு ஒன்றில் உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு ஒன்றை வழங்கியது.

”அரசியல் சாசன விதிகள் 21, 23ன் படி கொத்தடிமைகளை அடையாளங் கண்டு விடுதலை செய்யப் பெற வேண்டும். அது மட்டுமல்ல உரிய முறையில் அவர்களின் மறுவாழ்வுக்கு அரசு உத்தரவாதம் தர வேண்டும். அரசு அரசியல் சாசன விதிகளுக்கேற்ப உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லையெனில் அரசியல் சட்டத்தையே மீறுவதாகும்.

*ஆதாரம் - இந்தியாவில் கொத்தடிமைக் குழந்தைத் தொழிலாளர்கள்,*
*`Human RIghts Watch - Asia', 1996, பக். 29,*

3. சமூகத்தில் கொத்தடிமைக் குழந்தை நிலைமையை அடியோடு ஒழித்துக் கட்ட உன் பரிந்துரைகள் யாவை?

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

4. கொத்தடிமைக் குழந்தைகளுக்கும், குழந்தைத் தொழிலாளர்களுக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதவும்.

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

## வீட்டுப் பயிற்சி

5. உன் குடும்பத்தினரிடம் அல்லது உனக்குத் தெரிந்தவர்களிடம் பேசி கொத்தடிமைக் குழந்தைகளைப் பற்றிய விபரங்களையோ அல்லது அனுபவங்களையோ சேகரித்து வரவும். இவர்களுக்கு என்னென்ன உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பதை அனுபவத்தை ஒட்டிய உதாரணங்களுடன் கேட்டுத் தெரிந்து கொள்ளவும். பிறகு அறிக்கை ஒன்றைத் தயாரித்து வகுப்பில் வாசிக்கவும்.

6. உன் வீட்டுக்கு அருகில் உன் ஊரில் கொத்தடிமைகளாகக் கூ- வேலை செய்யும் குழந்தைகள் இருந்தால் ஓரிரண்டு குழந்தைகளைச் சந்தித்து உரையாடல்கள் நடத்தி எந்தெந்த உரிமைகள் இவர்களுக்கு மறுக்கப் படுகின்றன என்பதைப் பட்டிய-டு.

7. உன்னைப் போன்ற சிறார்கள் இவர்களுக்கு எப்படி உதவலாம் என்பதையும் எழுதி வகுப்பில் பகிர்ந்து கொள்.

> பதினான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகளைத் தொழிற்சாலைகள், சுரங்கங்கள், ஆபத்து விளைவிக்கும் தொழில் - இவைகளில் ஈடுபடுத்தக் கூடாது.
>
> *- இந்திய அரசியல் சாசனம் பிரிவு 24*

பாடம் 8



# தெருவோரக் குழந்தைகள்



## அஸ்லமின் கதை

மும்பையின் மத்திய ரயில் சந்திப்பில் சுமை தூக்குவோர் சிறு சிறு குழுக்களாக நின்று பேசிக் கொண்டிருக்கின்றனர். அங்கே சில சிறுவர்களும் நிற்கின்றனர். அச்சிறுவர்களில் ஒரு சிறுவன்தான் அஸ்லம். அவன் வயது 9. அவன் முகவரி - பிளாட்பாரம்? இவன் கர்நாடக மாநிலத்தி-ருந்து மும்பையில் பிழைக்க **வந்தவன் வறுமையாலும், பெற்றோர் கவனிப்பின்மையாலும்** வீட்டை விட்டு ஓடி வந்தவன். ரயில் வரும் நேரம், ரயில்வே போலீசார், அஸ்லமை தடியால் தட்டுகின்றனர்; காலரைப் பிடித்து இழுக்கின்றனர். அஸ்லம் மட்டுமல்ல அவன் நண்பர்களும் இவ்வாறே கவனிக்கப்படுகின்றனர். இவர்களைத் திட்டவும் அடிக்கவும் எந்தக் காரணமும் சொல்லப்படவில்லை. காவல்நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்ட அஸ்லமும் அவனது நண்பர்களும் எப்போதோ நடந்த திருட்டிற்கு இவர்கள் உடந்தையென காரணம் காட்டி உதைக்கப்படுகின்றனர். பெல்ட்டாலும், கம்பாலும் அடிக்கின்றனர். இவன் பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த இவனது நண்பனை, இவனைக் கொண்டே அடிக்கச் சொல்கின்றனர். மறுக்கும் அஸ்லமை மீண்டும் தாக்குகின்றனர். இரண்டு மணி நேரமாகத் தொடர்ந்த இவ்வன்முறை முடிவுக்கு வருகிறது. இங்கு நடந்த நிகழ்ச்சியை வெளியே யாருக்கும் சொல்லக் கூடாது என்ற எச்சரிக்கையோடு, அஸ்லம் விடுவிக்கப்படுகிறான்.



அடுத்த நாள் அஸ்லத்தால் நடக்க இயலவில்லை. கால்கள் வ-யால் துவண்டு போயின. அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. ரெயில் நிலையத்தில் தூக்கி எறியப்படும் பாட்டில்களை விற்றுத் தினமும் சம்பாதிக்கும் 50 ரூபாயில் 10 ரூபாயை போலீசாருக்கும், வேறு இடைத்தரகருக்கும் கொடுத்த பிறகும் போலீசார் இவனை ஏன் அடித்தனர்?

*- 'செமினார்', 1996*

**சிந்திக்க:**

அ. அஸ்லம் ஏன் பிளாட்பாரத்தில் குடியிருந்தான்?

ஆ. மும்பைக்குப் பிழைக்க வந்த காரணம் என்ன?

இ. போலீசார் அஸ்லத்தையும் நண்பர்களையும் ஏன் அடித்தனர்?

ஈ. அஸ்லத்திற்கு எப்போது விடுதலை கிடைக்கும்?

உ. அஸ்லத்தைப் போன்ற சிறுவர்களை நீ பார்த்திருக்கிறாயா?

ஊ. அவர்கள் மறுவாழ்விற்கு என்ன செய்யலாம்?



**இடம் : வகுப்பறை**

மாணவர்கள் வானொ-ச் செய்தி கேட்கின்றனர். வானொ-ச் செய்தியின் ஒரு பகுதியாக கீழ்க்காணும் செய்தியும் வாசிக்கப்படுகிறது.

"இந்திய நகரங்களில் 18 மில்-யன் குழந்தைகள் சுமை தூக்குபவராக வாழ்கின்றனர்

ஆட்டோ தொழிற்சாலைகளில் மெக்கானிக்குகளாக

உணவு, டீ விற்பவராக

தாள் பொறுக்குபவர்களாக வேலை செய்கிறார்கள்.

இந்தியாவில் சென்னை, மும்பை, டில்- போன்ற பெரு நகரங்களில் 2 இலட்சத்து 95 ஆயிரம் தெருவோரக் குழந்தைகள் உள்ளனர்.

இந்தத் தெருவோரக் குழந்தைகளில் பலர் சமூக விரோதிகளால் போதை மருந்து கடத்தவும் திருடவும் பயன்படுத்தப்படுவதைக் கண்டு அரசு கவலையுறுகிறது" என **குழந்தைகள் நலத்துறையின் அமைச்சர் கூறினார்.**

*ஆசிரியர், வானொ- செய்திக்குப்பின் கீழ்க்கண்ட கேள்விகளை மாணவர்களை நோக்கி கேட்டுப் பதில்களைக் கரும்பலகையில் எழுதுகிறார்.*



அ). தெருவில் வாழும் அனாதைக் குழந்தைகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

ஆம்/இல்லை

ஆ). இந்தக் குழந்தைகள் என்னென்ன வேலைகள் எல்லாம் செய்வதைப் பார்த்திருக்கிறீர்கள்?

இ). இவர்கள் இரவில் எங்கே தங்குகின்றனர்?

ஈ). நீங்களெல்லாம் பள்ளிக்கூடத்தில் இருக்கின்றீர்கள். இக்குழந்தைகளோ தெருவில் இருக்கின்றனர். இப்படிப்பட்ட குழந்தைகளைப் பார்க்கும் போது உங்கள் உள்ளத்தில் எழுந்த உணர்வுகள் யாவை?




இவர்கள் ஏன் எப்படி உருவாகிறார்கள். இந்தக் கேள்விகளோடு மேலே கூறப்பட்ட அஸ்லத்தின் வாழ்க்கையைப் படித்து ஒப்பிட்டுப் பாருங்கள்.

## காரணங்கள் சில

1. தாய் தந்தை சேர்ந்து வாழாமல் குடும்பப் பிரச்சனைகளால் தனித்தனியாகப் பிரிந்து வாழ்கின்ற போது இக்குழந்தைகள் கவனிப்பாரற்றுத் தெருவுக்கு வருகிறார்கள்.
2. தாய் தந்தையோடு வாழ்கின்ற குழந்தைக்கு தாய், தந்தையர் முழுமையான அன்பு காட்டாமை.
3. குடும்ப வறுமை காரணங்களால் வருமானம் தேடி தெருவுக்கு வந்து விடுதல்.
4. கல்வி வாய்ப்பின்மை
5. பள்ளியி-ருந்து இடை நின்று விடுதல்

## குற்றவாளிகளாய் மாறும் தெருவோரக் குழந்தைகள்

1. *போதைப் பொருள்களுக்கு அடிமையாகின்றனர்.*
2. *போதைப் பொருள்களை விற்பனை செய்யப் பயன்படுத்தப்படுகின்றனர்.*
3. *சமூக விரோதிகளால் திருடராக்கப்படுகின்றனர்.*
4. *வன்முறைச் செயல்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.*
5. *சீட்டாட்டம், சூதாட்டம் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர்.*
6. *தரக்குறைவான வார்த்தைகளை உபயோகிக்கின்றனர்.*



## வகுப்புப் பயிற்சி

1) உனக்கு வீடு, பெற்றோர், உறவினர்கள் சொந்தக்காரர்கள் இல்லையென்று வைத்துக் கொள்வோம். இவர்கள் எல்லாம் இல்லாமையால் நீ தெருவோரங்களில் அனாதையாக வாழ்வதாக வைத்துக் கொள்வோம். இக்கற்பனையில் உன் உணர்வுகள் எப்படி இருக்கும் என்பதை 3 வரிகளில் எழுதுக.

------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------

2) தெருவில் வாழும் இக்குழந்தைகள் எந்த அடிப்படை உரிமைகளையெல்லாம் இழக்கிறார்கள் என்பதைப் பட்டிய-டுங்கள்.

| |
|---|
| அ. |
| ஆ. |
| இ. |

3) தெருவோரக் குழந்தைகளில் ஒருவனாகிய இராமு எனும் சிறுவனுக்கு ஆறுதல் சொல்- கற்பனை கடிதம் ஒன்று எழுதுக. இதனை வகுப்பில் வாசித்துக் காட்டவும்.

4) தெருவோரக் குழந்தைகள் எல்லா உரிமைகளையும் பெற்ற குழந்தைகளாக மாற என்ன செய்ய வேண்டும் என்று எண்ணுகிறாய்? உன்னுடைய ஆலோசனைகளை எழுதி வகுப்பில் வாசித்துக் காட்டவும்.

------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------

5) இந்தத் தெருவோரக் குழந்தைகள் என்னனென்ன குற்றமெல்லாம் செய்வதாக மக்கள் நினைக்கிறார்கள்?

------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------

6) உங்கள் ஊரில் நடக்கும் திருட்டு, போதைப்பொருள், கடத்தல் சீட்டாட்டம் போன்ற செயல்களில் தெருவோரக் குழந்தைகள் ஈடுபட்டதாகக் கூறி தண்டனை கொடுத்துள்ள செய்தி இருந்தால் இச்செய்திகளைப் பகிர்ந்து கொள்ளவும்.

## வீட்டுப்பயிற்சி

7) உன் வீட்டிற்கு அருகில் தெருவில், பொது இடங்களில் வாழும் தெருவோரச் சிறுவர்களை நீ பார்த்திருக்கலாம் அச்சிறுவர்களைப் பேட்டிகண்டு வகுப்பில் பகிர்ந்து கொள்ளுக.

8) இப்படிப்பட்ட சிறுவன் மறுவாழ்வு பெற

அ. என்ன செய்ய வேண்டும் என்று உன் பெற்றோரிடம் அல்லது உனக்கு நன்கு தெரிந்த பெரியோர்களிடம் கேட்டு எழுதிக் கொண்டு வரவும்.

ஆ. நீ தனிப்பட்ட முறையில் என்ன செய்யப்போகிறாய் என்பதையும் எழுதி வரவும்.

9) தெருவோரக் குழந்தைகள் குற்றவாளிக் குழந்தைகளாக மாறியிருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அவர்களைச் சந்தித்தால் அவர்கள் குற்றவாளிகளாக மாறியமைக்குரிய காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள்க.

10) நீ பள்ளியில் படிக்கின்றாய். உன்னைப் போன்ற அந்தக் குழந்தைகள் தெருவோரத்தில் அனாதையாய், பல வேளை குற்றவாளியாய் வாழ்கின்றனர். இந்தக் குழந்தைகள் குற்றவாளியாய் மாறியதற்கு அவர்கள் காரணமா அல்லது வேறு எது காரணம் என்பதை பெற்றோரிடம், நண்பர்களிடம் விவாதித்து வகுப்பில் பகிர்ந்து கொள்க.

11) உங்கள் வீட்டின் ஒரு மரக்கிளையில் இலையோடு கூடிய ஒரு பசுமையான குச்சியையும் மரத்தின் இன்னொரு பகுதியில் பட்டுப்போன குச்சியையும் பறிக்கவும்

அ. இந்த இரண்டு குச்சிகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிந்து வேறுபாடுகளைத் தரவும்.

ஆ. இலையோடு கூடிய குச்சியைப் படிக்கிற மாணவனுக்கும் பட்டமரக் குச்சியைத் தெருவோரக் குழந்தைகளுக்கும் ஒப்பிடுக.


| பசுமையான குச்சி | | பட்டுப்போன குச்சி | |
|---|---|---|---|
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |
| 4. | | 4. | |

பாடம் 9

# ஊனமுற்றக் குழந்தைகள்

## I. இது கதை

### சிட்டுக் கண்கள் சிரித்தன



கண்டனூர் ஓர் அழகிய சிறிய ஊர். சாதி வேறுபாடு இல்லாமல் ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு இல்லாமல் எல்லோருக்கும் தெய்வமாக இருப்பது அங்குள்ள செல்லாயி அம்மன். அக்கோயி-ன் நடுவே ஒரு பெரிய ஆலமரம். ஆலமரத்தின் அடியில் அழகான கற்சிலையாக அம்மனை வைத்து வணங்கி வந்தனர்.

அந்த ஊரிலேயே பெரிய மனிதர் என எல்லோ ராலும் மதிக்கப்படுபவர் நெல்-யான் அம்பலம்.

வழக்கம் போல அன்று காலையும் நெல்-யான் அம்பலம் குளித்து விட்டுக் கோயிலுக்கு வந்து அம்மனைச் சுற்றி வந்தார். பூசாரியின் மகன் முருகன் அபிஷேகத்துக்குத் தண்ணீர் இறைத்துக் கொடுத்துவிட்டு பூமாலை கட்டிக் கொண்டிருந்தான்.

அவன் அம்பலத்தின் செல்ல மகளுடன் பள்ளியில் படித்து வந்தான். நடுவில் வந்த காய்ச்சலால் அவன் கால் ஊனமாகி விட்டது.

குடும்பம் இருந்த வறுமை நிலையில் முருகன் மேலே பள்ளியில் படிக்க இயலவில்லை. அதனால் தினமும் கோவில் வேலை செய்து தன் அப்பாவிற்குத் துணையாக இருந்தான்.

கோயில் பூசாரி அம்மனுக்கு அபிஷேகம் செய்து கொண்டிருந்தபோது நெல்-யான் அம்பலம் அம்மனின் கால் உடைந்திருப்பதைப் பார்த்துப் பதறி போய்விட்டார். உடனே பூசாரியை விசாரித்துவிட்டு, இதனால் ஊருக்கு எந்தக் கெடுதலும் வராம-ருக்க ஊர் பஞ்சாயத்தைக் கூட்டுவோம் என்று கூறி விட்டுச் சென்றார்.

அடுத்த நாள் கோயி-ல் பஞ்சாயத்து கூடியது. ஊர்ப் பெரியவர் எழுந்து, ''உடைந்த சிலையை வணங்கினால் தெய்வ குற்றம் வந்து ஊரே அழிந்து விடும். எனவே புதுச் சிலையைச் செய்வோம்'' என முடிவு கூறினார்.

அம்முடிவுப்படியே புதிய சிலை செய்ய ஏற்பாடுகள் நடந்தன. பஞ்சாயத்துப் பெரியவர்கள் தன் அப்பாவிடம் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட அம்பலத்தின் மகள் செல்லம்மாள் அழுதபடியே தன் தந்தையிடம் பேசத் தொடங்கினாள்.

"அப்பா! நம்ம கோயில்ல இருந்த சாமிக்கு எப்படி தினமும் அபிஷேகம் பண்ணி, கோடியெல்லாம் உடுத்தி கும்பிட்டோம்." அதுக்கு காலு உடைஞ்சிருக்குன்னு அதைக் கொண்டு போய் கண்மாய்க் கரையில வைக்கப் போறீங்களே. அதேபோல் நாளைக்கு எனக்கும் கால் உடைஞ்சிருச்சினா என்னையும் நொண்டி பிள்ளைன்னு சொல்-க் கொண்டு போய்க் கண்மாய்க் கரையில விட்டுடுவீங்களா? கால் ஊனமானதால்தானே நம் பூசாரி மகன் பள்ளிக்கு வராம படிப்பையே நிறுத்திட்டான். ஊனமாயிட்டா எல்லாத்தையுமே ஒதுக்கி வைச்சிடுவீங்களா?" என்று அழுது கொண்டே கேட்டாள் செல்லம்மாள். "அப்படியெல்லாம் இல்லேம்மா, அது கல்லுச் சிலைங்கறதனாலே கொண்டு போய் வைக்க நினைச்சோம்மா" என்றார் அம்பலம். ***ஊனமான கல்லையே ஒதுக்கி வைக்கிறீங்க. அதனாலதானே ஊனமான முருகனையும் ஒதுக்கி வைச்சுட்டீங்க!*** பழைய கல் வேண்டாம்னா புதுக்கல்லும் வேண்டாம்பா, எல்லாம் கல்தானே! என்றாள் அந்தச் சிறுமி செல்லம்மாள்.

அதன்படியே பழைய கற்சிலையும் புதிய கற்சிலையும் அந்த கோயி-ன் மரத்தடியிலேயே வைக்கப்பட்டன. பூசாரி மகன் முருகன் பழையபடி பையைத் தூக்கிக் கொண்டு அம்பலத்தின் மகள் செல்லமாளுடன் பள்ளிக்குச் செல்லத் தொடங்கினான்.

*- 'நாகப்பா நாச்சியப்பன்', நிலவைப் பிடித்தவர்கள்*

***இந்தக் கதையை மாணவர்களை நிதானமாகப் படிக்கச் சொல்லவும்.***

அ. இந்தக்கதையில் உனக்கு மிகவும் பிடித்த கதாப்பாத்திரம் யார்?

---------------------------------------------------------------

---------------------------------------------------------------



ஆ. உனக்கு இந்தப் பாத்திரம் மிகவும் பிடித்ததற்கான காரணம் என்ன?

1. ---------------------------------
2. ---------------------------------

இ. அம்பலத்தின் மகன் நிலையில் நீ இருந்தால் நீ எப்படி நடந்திருப்பாய் என்பதனை இரு வரிகளில் எழுதுக?

ஈ. முருகன் ஊனமானதால் எதை இழந்தான்?

-----------------------------------------------------------------

-----------------------------------------------------------------

உ. இந்தக் கதை மூலம் நீயறிந்த உண்மைகள் யாவை?

அ. ________________________________________

ஆ. ________________________________________

இ. ________________________________________

## 2. இது உண்மை

**ஊனம் தடையல்ல**

எல்.கே.ஜி. முதல் 10ம் வகுப்பு வரையில் அனைத்து வகுப்புகளிலும் அனைத்துத் தேர்வுகளிலும் முத-டம் பெற்ற மாணவன் பெயர் கௌதம், வயது 16. தற்போது படிப்பது 11ஆம் வகுப்பு. இவன் பார்வையற்றோர் மற்றும் செவித்திறன் குறைந்தோர் பள்ளியில் படித்து வருகிறான்.

இரண்டு வயதிலேயே மருத்துவரிடம் ஆலோசனை பெற்று, அதன்பின் முறையான சிகிச்சை மற்றும் பேச்சுப் பயிற்சி அவனுக்கு அளிக்கப்பட்டது. செவித்திறன் குறைவுடையோருக்கான பள்ளியில் சேர்க்கப்பட்டான்.

ஏழு ஆண்டுகளாக அங்கு தமிழ் வழிக் கல்வியில் பயின்று வருகிறான் கௌதம். கடந்த ஆண்டு 10ம் வகுப்புப் பொதுத் தேர்வில் செவித்திறன் குறைவுடையவர்களில் **சென்னை மாவட்டத்திலேயே முதலாவதாய்த் தேறியிருக்கிறான்.** அரசு ஆணைப்படி அவனுக்கு ஆங்கில மொழிப்பாடத்துக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதால், மீதியுள்ள நான்கு பாடங்களில் மொத்தம் 400 க்கு 365 மதிப்பெண் பெற்றுள்ளான். (தமிழ்ப் பாடத்தில் 93 மதிப்பெண்களும், கணிதப் பாடத்தில் 99 மதிப்பெண்களும், அறிவிய-ல் 77 மதிப்பெண்களும், சமூக அறிவிய-ல் 96 மதிப்பெண்களும் பெற்றிருக்கிறான்).

### ஊனமுற்ற குழந்தைகளும் குழந்தைகளே

ஊனமுள்ள குழந்தைகள் சமுதாயத்தில் சுயசார்புள்ள குழந்தைகளாக வாழ்வதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக இக்குழந்தைகளுக்கான கல்வியில் அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

*- ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை, பிரிவு 23.*



5ஆம் வகுப்பு முடித்த போது, பள்ளியிலேயே முதல் மாணவனாகத் தேறியமைக்காக, அறக்கட்டளைப் பரிசு ரூ.3000 பெற்றிருக்கிறான். அண்மையில் செவித்திறன் குறைவுடைய மாணவர்களுள் சிறந்த மாணவர் என்ற விருதும் இவனுக்குக் கிடைத்துள்ளது.

சிரித்த முகத்துடன் அமைதியாய் நம்மைப் பார்க்கும் கௌதம், நாம் பேசுவதை உதடுகள் அசைவதை வைத்துப் புரிந்து கொண்டு பதிலளிக்கிறான். படிப்புத் தவிர என்ன பிடிக்கும் என்று கேட்டால், கம்ப்யூட்டர், கிரிக்கெட் என்கிறான்.

'கேட்கும் சக்தி மட்டும்தான் இல்லையே தவிர கௌதம் ரொம்ப புத்திசா-. கம்ப்யூட்டரை நன்கு கையாள்வான். இப்போ ஆங்கிலமும் படிக்கணும்னு ஆசைப்படறான். அதனால 10ஆம் வகுப்பு ஆங்கிலப் பாடத்தை, வர்ற ஏப்ரல்ல எழுதப் போறான்.

இப்போ ஆங்கில நாளிதழையும் பக்கத்தில் வச்சுக்கிட்டு தமிழில் வர்ற செய்தி எப்படி ஆங்கிலத்தில் வருதுன்னு எழுத்துக் கூட்டிப் படிக்கிறான்.

தற்போது பிளஸ்ஒன்றில் படிக்கிறான். சிறந்த கம்ப்யூட்டர் என்ஜினியர் ஆக வேண்டும் என்பது கவுதமின் கனவு. அவனிடம் தாழ்வு மனப்பான்மை கிடையாது. பள்ளியில் கீழ்ப்படிதலுள்ள நல்ல மாணவன் என்று பெயரெடுத்திருக்கிறான். குறைபாடுள்ள குழந்தைகளுக்குச் சிறந்ததொரு முன்மாதிரி கௌதம்.

*- 'தினமணி', 18.1.2003*

இவ்வுண்மை நிகழ்வையும் நிதானமாகப் படித்து கீழ்க்கண்ட வினாக்களைச் சிந்திக்கவும்.

**- கௌதமின் சாதனைக்கு எது தடையாக இல்லை.**

**- கௌதமின் முயற்சி உனக்குத் தந்த பாடம் என்ன?**

## வகுப்புப் பயிற்சி

1. ஊனத்திற்கும், திறமைக்கும் தொடர்பில்லை என்பதை அறிந்து கொண்டாயா?
   ***ஆம் / இல்லை***

2. கௌதமின் வாழ்க்கை மூலம் நீ என்ன கற்றுக் கொண்ட பாடங்கள்?

   அ. ------------------------------------------------------------

   ஆ. ------------------------------------------------------------

3. ஊனமுற்ற சிறுவர்களைச் சமமாக நடத்த வேண்டும் என்பதற்கான இரண்டு காரணங்கள் மட்டும் தருக.

அ. ..............................................................................................................................................

ஆ. ..............................................................................................................................................

4. ஊனமுற்ற குழந்தைகளுக்கு எந்தெந்த உரிமைகள் எல்லாம் மறுக்கப் படுகின்றன?

-------------------------------------------------------------------------------------------

-------------------------------------------------------------------------------------------

5. ஊனமுற்றக் குழந்தைகள் சமத்துவமாக நடத்தப்பட உன் பரிந்துரை என்ன?

-------------------------------------------------------------------------------------------

-------------------------------------------------------------------------------------------

## வீட்டுப்பயிற்சி

6. ஊனமுற்ற சிறுவர்கள், உங்கள் பள்ளிக்கு அருகிலோ வீட்டிற்கு அருகிலோ இருந்தால் அவர்களைச் சென்று சந்தித்துக் கீழ்க்கண்ட தகவல்களைச் சேகரிக்கவும்.

அ. ஊனமுற்ற குழந்தை வீட்டில் மற்ற குழந்தைகளோடு சமமாக நடத்தப்படுகின்றனரா?

ஆ. மற்ற குழந்தைகளோடு பேசவும், விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனரா?

இ. ஊனமுற்ற குழந்தையின் தனித் திறமையைக் கண்டறிந்து அதனைப் போக்க முயற்சி எடுக்கப்படுகிறதா?

ஈ. ஊனமுற்ற குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்றனரா? இல்லையா?

உ. அவர்களைக் கோவிலுக்கு அழைத்துச் செல்கின்றனரா?

ஊ. திருமணம் மற்றும் திருவிழாவிற்கு அழைத்துச் செல்கின்றனரா?

7. எந்தக் குழந்தையைச் சந்தித்தாயோ அந்தக் குழந்தையிடமிருந்து பெற்ற அனுபவத்தைத் தொகுத்து வகுப்பில் பகிர்ந்து கொள்க.

8. ஊனமுற்ற குழந்தைகளுக்கான அரசின் சலுகைகள் பற்றிய விவரங்களைச் சேகரித்து வகுப்பில் பகிர்ந்து கொள்க.

9. கோவில் வாயில்களிலும் சில பொது இடங்களிலும் ஊனமுற்றவர்கள் கையேந்தி நிற்பதைப் பார்த்திருக்கலாம். இவர்கள் கையேந்தி நின்றபோது உன் உள்ளத்தில் ஏற்படுகின்ற உணர்வுகள் என்ன?

அ. ..............................................................................................................

ஆ. ..............................................................................................................

இ. ..............................................................................................................

10. ஊனமுற்றதால் பிறரிடம் கையேந்தி வாழவேண்டிய இச்சூழலுக்கு உட்படுத்தப்பட்ட இவர்கள் இழந்த உரிமைகள் யாவை?

அ. ..............................................................................................................

ஆ. ..............................................................................................................

இ. ..............................................................................................................

11. படத்தில் நீ காணும் ஊனமுற்ற குழந்தைக்கு நீ எப்படியெல்லாம் உதவ முடியும் என்று யோசித்து எழுதி வரவும்.

## உடல் ஊனமுற்றோருக்கு 3% இட ஒதுக்கீடு

தமிழக அரசின் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசின் உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் உடல் ஊனமுற்றோருக்கு 3 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மருத்துவ படிப்புக்காக ராஜ்குமார் என்ற உடல் ஊனமுற்ற மாணவர் விண்ணப்பித்திருந்தார். உடல் ஊனமுற்றோருக்கான பிரிவில் இவர் 5வது இடத்தில் இருந்தார். இதனால் இவருக்கு எம்.பி.பி.எஸ். படிப்புக்கு இடம் கிடைக்கவில்லை. இதனையடுத்து இவரது தந்தை திரு.ஜோசப் என்பவர் தொடர்ந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது.

மத்திய சட்டப்படி உடல் ஊனமுற்றோருக்கான இடஒதுக்கீட்டை மாநில அரசு பின்பற்றவில்லை. அரசு மருத்துவக் கல்லூரிகளிலுள்ள 1,255 இடங்களில் 3 இடங்களைத்தான் உடல் ஊனமுற்றோருக்கு ஒதுக்கியுள்ளது. சட்டப்படி பார்த்தால் உடல் ஊனமுற்றோருக்கு மொத்தம் 39 இடங்களை ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால், சிறப்புப் பிரிவின் கீழ் வெறும் 3 இடங்களைத் தான் மாநில அரசு ஒதுக்கியுள்ளது. உடல் ஊனமுற்றோருக்கான சமவாய்ப்பு மற்றும் உரிமைகள் பாதுகாப்புச் சட்டப்பிரிவு 39ஐ மாநில அரசு பின்பற்ற வேண்டும். இந்தச் சட்டப்பிரிவின்படி, அரசுக்கல்வி நிறுவனங்கள் எல்லாம் உடல் ஊனமுற்றோருக்கு 3 விழுக்காடு இடஒதுக்கீட்டை செய்ய வேண்டும்.


***- 'மனித உரிமைக் கங்காணி', ஜனவரி 2003***

## பாடம் 10

# கடத்தப்படும் குழந்தைகள்



### 1. விற்கப்படும் குழந்தைகள்!



அ). பெத்த குழந்தையை இங்கே பகிரங்கமாகவே விக்கிறாங்க. ரெண்டு மாசத்துக்கு முன்னாடி இங்கே ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்த பெண் ஒருத்தி, போற வர்றவங்க கிட்டேயெல்லாம் விலை பேசிக்கிட்டிருந்தார். கடைசில, பக்கத்திலுள்ள மீனவக் கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணிக்கு ஆயிரம் ரூபாய்க்கு வித்துட்டுப் போனார். பேரமெல்லாம் எங்க கண்முன்னால்தான் நடந்தது.

*– நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் நாம் சந்தித்த ஊழியர் இப்படிச் சொன்னார்.*

*- 'ஜூனியர் விகடன்', 25.12.02*

ஆ). கடும் பட்டினி காரணமாகக் குமார் என்பவர் தன் நான்கு வயது மகனைப் பத்து கிலோ அரிசிக்காக விற்றார். இந்த ஆண்டு மழையின்மையால் விவசாயம் தோற்றுப் போனது. அரசு உதவி செய்யும் என்று நம்பினார். அரசும் உதவவில்லை. எனவே பெற்ற மகனையும் விற்க வேண்டிய நிலை.

*- 'இந்துஸ்தான் டைம்ஸ்', 22 மார்ச் 1999*

இ). கணபதி தன் ஆறு வயது மகனை ரூபாய் 5000க்கு ஒரு வட்டிக் கடைக்காரருக்கு விற்றார். இவர் கடந்த 4 ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டிருந்தார். உணவுக்கும் சிகிச்சைக்கும் பணம் தேவைப்பட்டதால் மகனை விற்றாராம். இவர் மனைவியும் வேலை செய்ய இயலவில்லை. ஏற்கெனவே வாங்கிய பணம் போதாமையால் மீண்டும் வட்டிக்கடைக்காரரிடம் 2500 ரூபாய் வாங்கினார். இந்தப் பணமும் தீர்ந்து போகவே மீண்டும் ரூபாய் 1000 வாங்கினார். மீண்டும் பணம் தேவைப்படவே, அடுத்த மகனையும் ரூபாய் 1500க்கு விற்றார். இந்தச் செய-னால், தான் வருத்தப்படவில்லை என்கிறார் கணபதி.

*- 'இந்துஸ்தான் டைம்ஸ்', 18 பெப்ரவரி 2001*

## 2. பிச்சை எடுப்பதற்காகக் கடத்தப்படும் குழந்தைகள்



நான் பள்ளிக்கூடத்தி-ருந்து வீட்டுக்கு வரும் போது சுரேசும் லட்சுமியும் எங்கிட்ட வந்து நீ சென்னைக்கு வர்றியா? உனக்குத் துணி, கம்மல் எல்லாம் வாங்கித் தர்றேன்னு ஆசைக்காட்டி னாங்க. நானும் ஆசைப்பட்டு அவங்கக்கூட சென்னைக்குப் போனேன். அங்க போன பிறகுதான் என்னை ஏமாத்திட்டாங்கன்னு தெரியுது. பகல் பூராவும் என்னைத் தெருவுலப் பிச்சை எடுக்கச் சொன்னாங்க. நானும் காலையி-ருந்து சாயங்காலம் வரைக்கும் வீட்டுக்குப் பக்கத்துத் தெருவிலேயே பிச்சை எடுப்பேன். அந்தக் காசையெல்லாம் எங்கிட்டேயிருந்து பிடுங்கிக்குவாங்க.


காசு கொஞ்சமா இருந்தா, ஏன் நிறையப் பிச்சை எடுக்கலைன்னு கொள்ளிக் கட்டையால என் உடம்புல சுடுவாங்க. நான் அழுதுகிட்டே இருப்பேன். சிலநேரம் வெயில்ல வெட்ட வெளியில முட்டி போடச் சொல்லுவாங்க..''

உடம்பு முழுக்க இருக்கும் தீக்காயத் தழும்புகளைக் காட்டிக் கண் கலங்குகிறாள் சூர்யகலா.

- *'குமுதம் ரிப்போர்ட்டர்'*

## 3. ஒட்டகம் ஒட்டும் குழந்தைகள்

பச்சிளங் குழந்தைகளை ஒட்டகத்தின் முதுகிலே கட்டி அவர்களை ஓட்டுநர் களாக்கி (ஜாக்கி) நடத்தப்படும் ஒட்டக ஓட்டப் பந்தயம் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?



வறுமையில் வாடும் ஏழைக் குழந்தைகளுக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி அவர்களை ஏமாற்றிக் கூட்டி வந்து ஒட்டகம் ஓட்டப் பயன் படுத்துகின்றனர். ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளைப் பட்டினிப் போட்டு (மூன்று வேளை சாப்பிட்டால் ஒட்டகத்திற்கு எடை கூடி விடுமாம். ஒட்டகம் சுமந்து கொண்டு ஓடும் போது குழந்தைகள் அதிக கனமாக இருந்தால் வெற்றி பெறாதாம்) அவர்கள் ஒட்டகத்தின் முதுகிலே வைத்துப் பசை தடவிய நாடாவினால்

கட்டப்படுகின்றனர். இவர்கள் ஒட்டகங்கள் ஓடும்போது சில சமயம் நாடா அறுந்து தவறி சுடு மண-ல் கூட விழுவதுண்டு. இவர்களை மிதித்துக் கொண்டு ஒட்டகங்கள் பந்தயங்களில் ஓடும். இதில் பல குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர். பட்டினியுடன் கட்டப்படும் குழந்தை இயல்பாகவே வீரிட்டுக் கத்தும். இந்தப் பரிதாபமான அலறல் ஒட்டகங்களை வேகமாக ஓட வைக்குமாம். அதே சமயத்தில் ஒட்டகங்களுக்கு நல்ல சாப்பாடும் கொடுக்கப்படும். பந்தயத்தின் முடிவில் வெற்றி பெற்ற ஒட்டகத்திற்குப் பல லட்சம் மதிப்புள்ள உலகக் கோப்பை வழங்கப்படும். ஆனால் பந்தயத்தின் முடிவில் குழந்தைகளுக்குக் காயங்களே பரிசாகத் தரப்படும். ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பந்தயம் தொடர்கிறது. மிரள மிரள விழித்துக் கொண்டு வேதனையுடன் ஒட்டகங்களில் வீரிட்டு அழும் இக்குழந்தைகளின் கண்ணீருக்கு எப்போது முடிவு வரும்?

*- 'மனித உரிமைக் கங்காணி', சனவரி 2001*

## 4. வணிகப் பொருளாகும் குழந்தைகள்

ஆந்திரமாநிலம் ஐதராபாத்தில் போலீசார் ஒரு குழந்தைக் காப்பகத்தைச் சோதனையிட்டபோது 56 குழந்தைகள் காப்பகத்தில் அடைக்கப்பட்டிருப்பதைக் கண்டனர். இவர்களில் 52 குழந்தைகள் பெண் குழந்தைகள். இக்குழந்தைகள் ஏழைப் பழங்குடி மக்களிடமிருந்து வெளிநாட்டுக் குடும்பங்களுக்குத் தத்து கொடுப்பதற்காக விலைக்கு வாங்கப்பட்ட குழந்தைகள். ஒவ்வொரு குழந்தையும் 2000 முதல் 3000 டாலர் வரை விற்கப்படுகிறதாம்.

*- 'இந்தியாவில் குழந்தைகள் கடத்தப்படல்' - பக்கம் 16*

## 5. திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதில்லை



ஐதராபாத்தில் இளம் சிறுமிகள் வேறு தேசத்தைச் சார்ந்தவர்களுக்கு ரூ.5ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை விற்கப்படுகிறார் களாம். தற்போது 25 வயதாகும் சித்ரா எழுபத்தைந்து வயது கணவரோடு 10 ஆண்டுகள் வாழ்ந்து இரண்டு குழந்தைகள் பெற்றவர். இவளது பெற்றோர் இவளை ரூ.5ஆயிரத்திற்கு விற்றிருந்தனர். 1991ல் 9வயது அமீனா இதே நகரில் 60வயது முதியவருக்குப் பத்தாயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டார்.

*- 'இந்தியாவில் குழந்தைகள் கடத்தப்படல்' - பக்கம் 16*

**குழந்தைகளே!**

மகிழ்ச்சியான குழந்தைகளையும் நிறைவான குழந்தைகளையும் படித்துப் பார்த்து ரசித்த நீங்கள் இப்போது குழந்தைப் பண்புகள் மறுக்கப்பட்ட



குழந்தைத் தொழிலாளர்களையும்
தெருவோரக் குழந்தைகளையும்
பாகுபடுத்தப்படும் பெண் குழந்தைகளையும்
கல்வி மறுக்கப்படும் குழந்தைகளையும்
நலவுரிமை மறுக்கப்பட்ட குழந்தைகளையும்
ஊனமாக்கப்பட்ட குழந்தைகளையும்

படித்துப் பார்த்துக் கலங்கியிருப்பீர்கள்

***மேலே தரப்பட்டுள்ள நிகழ்வுகளை நிதானமாக வாசித்துப் பாருங்கள்.***

இத்தகைய நிகழ்வுகள் உங்கள் உள்ளத்தில் என்னென்ன உணர்வுகளை உருவாக்கியிருக்கும் என்பதனை உணர முடிகிறது.


ஏற்கெனவே கருவிலேயே அழிக்கப்படும் குழந்தைகளைப் பார்த்தீர்கள்.

சிசுவாக வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்ட சூழ்நிலையைப் பார்த்தீர்கள்.

இப்பாடத்தில் 10 மாதம் சுமந்து பெற்ற குழந்தைகளை அவர்தம் பெற்றோரே விற்பதையும்,

லாபம் கருதி குழந்தைகளைக் கடத்துகின்ற அவலத்தையும் கண்டீர்கள்!

## விற்றலும் கடத்தலும்



குழந்தைகள் எந்த நோக்கத்திற்காகவும் எந்த விதத்திலும் வாங்க விற்கப்படுவதை, கடத்தப்படுவதை இடத்திற்கு இடம் பெயர்க்கப்படுவதைத் தடுப்பதற்குத் தேவையான தேசிய அளவிலான இரு நாடுகளுக்கிடையேயான, பல நாடுகளுக்கு இடையேயான எல்லா நடவடிக்கைகளையும் உறுப்பு நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

***- விதி 35, குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை***

## வகுப்புப்பயிற்சி

1). அ. இந்நிலையில் உங்கள் ஊரில் குழந்தைகள் ☑அடிக்கவும்

| | உண்டு | இல்லை |
|---|---|---|
| ☛ கைவிடப்படும் குழந்தைகள் | | |
| ☛ விற்கப்படும் குழந்தைகள் | | |
| ☛ கடத்தப்படும் குழந்தைகள் | | |

ஆ. 'உண்டு' எனில் நீ கேள்விப்பட்ட நிகழ்ச்சிகளை வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.

2). பெற்றோர் அரவணைப்பில் வாழ வேண்டிய இக்குழந்தைகளை அவர்கள் பெற்றோரே கைவிடுகின்றனர் என்றால் அதற்குரிய காரணம் என்னவாக இருக்க முடியும் என்று எண்ணுகிறீர்கள்?

| | |
|---|---|
| அ). | இ). |
| ஆ). | ஈ). |

3). கடத்தப்படும் குழந்தைகள் என்னென்ன தொழில்களையெல்லாம் செய்யக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்?

| | |
|---|---|
| அ). | இ). |
| ஆ). | ஈ). |

**ஏன் கடத்தப்படுகின்றனர்? எதற்கு விற்கப்படுகின்றனர்?**

கொத்தடிமைக்கு
வீட்டு வேலைக்கு
விவசாயத் தொழிலுக்கு
கட்டடம் கட்டும் தொழிலுக்கு
பிச்சையெடுக்க வைப்பதற்கு
போதை பொருள் கடத்தலுக்கு

4). **பெற்றோரால் கைவிடப்படும் குழந்தைகள் என்னென்ன உரிமைகளை இழக்கின்றனர்?**

| | |
|---|---|
| அ). | இ). |
| ஆ). | ஈ). |

5). **விற்கப்படும் குழந்தைகள் என்னென்ன உரிமைகளை இழக்கின்றனர்?**

| | |
|---|---|
| அ). | இ). |
| ஆ). | ஈ). |

6). **கடத்தப்படும் குழந்தைகள் இழக்கும் மனித உரிமைகள் யாவை?**

| | |
|---|---|
| அ). | இ). |
| ஆ). | ஈ). |

## வீட்டுப்பயிற்சி

7). உங்கள் ஊரில் காணாமல் போன குழந்தையின் வீட்டுக்குச் சென்று விபரம் கேட்டறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள்க?

### காரணம் என்ன?

*வறுமை,*
*வேலைவாய்ப்பின்மை*
*பெண் குழந்தைகளின் குறைந்த சமூக அந்தஸ்து*
*கல்வி அறிவின்மை*
*விழிப்புணர்வின்மை*
*முறையான சட்டங்கள் இன்மை*
*சட்டங்கள் இருப்பினும் சரியான முறையில் அமுல்படுத்தப்படாமை*
*அரசியல் நிலையற்ற தன்மை போன்றவை.*

*உலகமயமாத-ன் சந்தைப் பொருளாதாரம் குழந்தைகளைச் சந்தையில் விற்கப்படும் பொருளாக்கிவிட்டது. சமூகத் தொடர்பு சாதனங்கள் பெண்களைக் கவர்ச்சிப் பொருளாகக் காட்டுவது பெண்களும், குழந்தைகளும் கடத்தப்படுவதற்கும், விற்கப் படுவதற்கும் காரணம். பெண்கள் கடத்தப்படுவது இன்று லாபம் தரும் வியாபார மாகவும் மாறிவிட்டது.*

8). குழந்தையைப் பிரிந்த பெற்றோரின் மனநிலையைக் கேட்டறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள்க.

9). கடத்தப்பட்ட, விற்கப்பட்ட ஒரு குழந்தையின் மனநிலை எப்படியிருக்கும் என்பதை கற்பனை செய்து அதை

- நாடகமாகவோ
- கவிதையாகவோ
- உரையாடலாகவோ
- கட்டுரை வடிவிலோ எழுதி வகுப்பிற்கு கொண்டு வந்து வாசித்துக் காட்டவும்.

ஈ). குழந்தைகள் பொருட்கள் அல்லர். அவர்கள் உயிருள்ளவர்கள், உணர்வுள்ளவர்கள். இவர்களை வணிகப் பொருளாக்கி விற்பது குழந்தைகளின் மாண்பை கொச்சைப்படுத்துவதாகும்.

- ***இக்கருத்தையொட்டி மாணவர்களே சுவரொட்டிகளைத் தயார் செய்க.***



**தி**ருப்பூர் பனியன் கம்பெனிகளில் 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரை குழந்தைத் தொழிலாளர்களாக வேலை புரிகின்றனர். திருப்பூர் சேரிப் பகுதியில் நான்கு வீட்டிற்கு ஒரு குழந்தைத் தொழிலாளரும் திருப்பூர் ஒன்றியத்தில் ஐந்து வீட்டிற்கு ஒரு குழந்தைத் தொழிலாளரும் அவினாசி கோட்டத்தில் ஆறு வீட்டிற்கு ஒரு குழந்தைத் தொழிலாளரும் இருக்கிறார்கள்.

*- மனித உரிமைக் கங்காணி, செப். 1998*



# பிரிவு - 3

# அரும்புகள்

## மலர

பாடம் 11



# குழந்தையின் கல்வியுரிமை



**குழந்தைகள் தினம்**

சேலம் மாநகராட்சிப் பள்ளி ஒன்றில் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். இந்த விழாவின் சிறப்பம்சம் என்னவென்றால் பள்ளிகளில் மனித உரிமைக் கல்வி கற்கும் மாணவ மாணவியரே, குழந்தைகளின் ***கல்வி உரிமை*** பற்றி உரையாற்றினர். மாநகராட்சிப் பள்ளி ஒன்றின் தலைமையாசிரியர் தலைமை தாங்கினார்.

**தலைவர் உரை**

அருமை மாணவ மாணவியரே, உங்கள் எல்லோருக்கும் குழந்தைகள் தின வாழ்த்துக்கள்!

இவ்விழாவில் நம் மாநகராட்சியிலுள்ள அனைத்து மாநகராட்சிப் பள்ளிகளும், கலந்து கொண்டிருக்கின்றன என்பது கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாண்டு குழந்தைகள் தினத்தைக் குழந்தைகளின் கல்வியுரிமை தினமாகக் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு மாநகராட்சிப் பள்ளியின் சார்பாகவும் ஒரு மாணவர் குழந்தைகளின் கல்வியுரிமை பற்றிப் பேசவிருக்கிறார்.

கல்வி பெற்ற மனிதன் தான் முழுமையான மனிதன் என்கிறோம்.

கல்வி தான் அறியாமையைப் போக்கும் மருந்து என்கிறோம்.

கல்வி தான் செல்வத்துள் செல்வம் என்கிறோம்.

இத்தகைய சிறப்புடைய கல்வியைச் சமூகத்தில் எல்லோரும் பெற்றிருக்கிறார்களா?

எல்லோரும் கல்வி பெறுவது நம்முடைய அடிப்படை உரிமை இல்லையா? இவ்விவாதத்தை குழந்தைகளே விவாதிப்பது பொருத்தமாக இருக்கும் என்பதால் மாணவ மாணவியரை இப்பொருள் பற்றிப் பேச அழைக்கிறேன்.



**1). மாணவி கீதா**

கல்வியின் பெருமை பற்றி எல்லோருக்கும் தெரியும். இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, கல்வி வளர்ச்சியில் மிகப் பெரிய அளவில் வெற்றி கண்டிருக்கிறது என்பது உண்மை.

பள்ளிகள் எண்ணிக்கையால் அதிகரித்துள்ளன. உயர்கல்வி நிறுவனங்களும், பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் அதிகரித்துள்ளன. தொழிற்கல்வி நிறுவனங்கள் வளர்ந்துள்ளன. இந்திய அரசியல் சாசனம், **இலவச தரமான கட்டாயக் கல்வியை 14 வயதிற்குட்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் அளிக்கச் சொல்கிறது. அண்மையில் பாராளுமன்றத்தில் 93வது சட்டதிருத்த மசோதாவும், ஆரம்பக்கல்வியைக் கட்டாயமாக்கியுள்ளது. இவையெல்லாம் உண்மைதான்.**

ஆனால் நாம் நடைமுறையில் காண்பது என்ன? அரசியல் சாசனம் கல்வியை உரிமையாக்கிய பின்பும் பள்ளியின் வாயிலைச் சென்றடையாத குழந்தைகள் இன்னும் ஏராளம் இருக்கின்றனர். பள்ளிக்கு வந்தாலும் பள்ளிப்படிப்பைத் தொடரமுடியாத குழந்தைகள் ஏராளம்; பள்ளி இல்லாத ஊர்களும் ஏராளம்.

இந்நிலையில்

***கல்வி வியாபாரம் ஆக்கப்படுவதையும் பார்க்கிறோம்.***

***ஏழைக்கு வசதியற்ற பள்ளிகள், பணக்காரர்களுக்கு எல்லா வசதிகளுமுடைய பள்ளிகள்.***

***இன்னும் கல்வி ஏன் அனைவர்க்கும் உரித்தானதாக இல்லை.***

***தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், கிராமத்து மக்களுக்கும் எளிதில் கல்வி பெறும் வாய்ப்புகள் பெருகவில்லையே?***

***இந்தக் கல்விச் சூழல் மக்களின் அடிப்படை கல்விக்கான உரிமையை மறுக்க வில்லையா?***

கல்வி பெறும் உரிமை அடிப்படை மனித உரிமை என்பதால் இச்சமூகத்திலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.

### 2). மாணவன் அழகன்

அருமை நண்பர்களே, மாணவி கீதா அவர்கள் கல்வி பெறுகின்ற உரிமை மறுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார். கல்வி மறுக்கப்படுகின்ற நிலைமை பள்ளிக்கூடங்கள் இல்லாமையால் மட்டும் இல்லை. **இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் இருக்க வேண்டிய அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டாலும் கல்வியுரிமை மீறல்தான்.** அண்மையில் நான் ஒரு பத்திரிக்கையில் படித்த நிகழ்வை உங்களிடம் படித்துக் காட்டுகிறேன்.



"அந்தப் பள்ளி 50 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. கூரை ஓடுகள் காற்றில் பறக்கின்றன. ஓடுகள் மாற்றப்படவில்லை. கம்புகளும் இற்றுப்போய் விட்டதால் போர்டில் எழுதிப் போடுவதையே ஆசிரியர்கள் மறந்து விட்டார்களாம்.

எல்லாவற்றையும் விடக் கொடுமை என்னவென்றால் ஓட்டில் பாம்புத்தோல் தொங்குகிறதாம். மழைக்காலம் தொடங்கிடுச்சுன்னா மையப் பகுதியில்தான் ஒழுகாது என்பதனால் மொத்தமாக ஆசிரியைகள் அங்க போய் இருந்து விடுவார்கள். பலமாக மழை பெய்தால் உடனே லீவு விட்டுவிடுவார்களாம்.

இப்பள்ளியில் எழுபது பிள்ளைகளுக்கு 2 ஆசிரியைகள். இந்தப் பள்ளி மட்டும் இல்லாவிட்டால் இப்பகுதியில் வாழும் த-த் மக்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க மாட்டார்களாம்.

*'குமுதம் ரிப்போர்ட்டர்' - 12.12.2002.*

**சிந்தனைக்கு**

*சுதந்திர இந்தியாவில் இப்படியும் பள்ளிகள் இருக்கின்றன என்று கேள்விப்படுகின்ற போது நாம் கவலைப்பட வேண்டாமா? பள்ளிகளில் அடிப்படை வசதிகள் மறுக்கப்படுகின்ற போது குழந்தைகளுக்குத் தரமான கல்வி எப்படி கிடைக்கும்?*


## 3. மாணவன் அறிவன்

நம் நாட்டில் நிறைய ஊர்களில் பள்ளிக்கூடங்கள் இல்லை என்பதும் உண்மை. பள்ளிக்கூடங்களில் போதிய வசதி இல்லை என்பதும் உண்மை. இங்கு நம் கேள்வியெல்லாம் இருக்கிற கல்விக்கூடங்களில் கற்பிக்கப்படும் **கல்வி தரமானதாக** இருக்கிறதா?

''ஐந்தாம் வகுப்பு வரை படித்து முடித்த எத்தனை குழந்தைகளுக்குத் தாய் மொழியில் பிழையின்றி எழுதப்படிக்கத் தெரியும்.?

சாதாரண கூட்டல், கழித்தல் கணக்குக்கூட பல மாணவர்களுக்குத் தெரியவில்லை.

தரமான கல்விக்கு அடிப்படைத் தேவைகளாகிய சோதனைக்கூடங்களும், உபகரணங்களும் எத்தனைப் பள்ளிகளில் இருக்கின்றன?



பல பள்ளிகளில் மாணாக்கர் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்கள் இல்லை, நம் நாட்டில் இன்னும் ஓராசிரியர் பள்ளிகள் உள்ளன; ஈராசிரியர் பள்ளிகளும் உள்ளன. அப்படியே தேவையான ஆசிரியர்கள் இருந்தாலும் எத்தனை ஆசிரியர்கள் அர்ப்பண உணர்வுள்ள ஆசிரியர்களாக உள்ளனர்? இந்தப் பள்ளிகளில் மாணவர்களை வளர்க்கும் தரமான கல்வியை எப்படி எதிர்பார்க்க முடியும்.

தரமான கல்வியும் குழந்தை உரிமையல்லவா?

வசதியுள்ளோர்க்குத் அனைத்து வசதிகளுள்ள பள்ளிகளும் வசதியற்றோர்க்கு தரமற்ற பள்ளிகளும் இருப்பது ஏழைகள் மீது காட்டப்படும் பாகுபாடு அல்லவா?

இந்தப் பாகுபாடும் அடிப்படை மனித உரிமை மீறல் அல்லவா?

## 4. மாணவி செல்வி பேசுகிறாள்

ஏற்கெனவே பேசிய என் நண்பர்களின் வாதத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். இவை எல்லாம் கல்வியுரிமை மீறலே என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன். நான் இன்னொரு வகைக் கல்வி மீறலை உங்கள் முன் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நமக்கெல்லாம் தேர்வு இருப்பது தெரியுமல்லவா? தேர்வின் மூலம் நம் திறமை சோதிக்கப்படுகிறது. நான் தேர்வு தவறு என்று சொல்லவில்லை. ஆனால் தேர்வினால் மட்டும் தான் நம் திறமை சோதிக்க முடியுமா?

இந்தத் தேர்வு ஏற்படுத்தும் பயத்தால் எத்தனை குழந்தைகள் பள்ளியில் இடைநிறுத்தம் ஆகின்றனர் தெரியுமா? சில குழந்தைகள் தற்கொலை செய்து கொண்டதாகக்கூட செய்தி வந்துள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா?

**(எ.கா.)** நம் பத்திரிக்கையில் வந்த இந்தச் செய்திகளைப் பாருங்கள்



*மார்க் குறைவாக இருந்ததால் அப்பா ரேங்க் கார்ட்ல கையெழுத்துப் போட மறுத்துட்டார். ஏழாவது படிக்கிற யமுனா இதனால டீச்சர்கிட்ட அடிவாங்குறது உறுதி என்பதனால் என்ன செய்தாள் தெரியுமா? குளத்தில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாளாம்.*

*- (குமுதம் ரிப்போர்ட்டர், 23.3.2001)*

இன்னொரு உண்மை நிகழ்ச்சியும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். 100% தேர்ச்சி பெற வேண்டும் என்பதால் பள்ளி நிர்வாகமும் பெற்றோர்களும், மாணவர்களைச் சித்ரவதை செய்ததால் நெய்வே-யில் கடந்த 1 வருடத்தில் மட்டும் **13 மாணவர்கள் தற்கொலை செய்துட்டாங்களாம்.**

இன்னொரு மாணவன் தேர்வு தொடங்கும் முன்பே தேர்வுக்குப் பயந்து வீட்டை விட்டே ஓடிவிட்டானாம். அந்த மாணவனிடம் கேட்ட போது காலாண்டுத் தேர்வு வந்து விட்டது. பாடச்சுமை அதிகமாக இருப்பதால் என்னால படிக்க முடியல. சரியாகப் படிக்காமல் எழுதினா மார்க் குறைஞ்சிடும். மார்க் குறைஞ்சா ஆசிரியரும், பெற்றோர்களும் அடிப்பாங்க, திட்டுவாங்க. அதுனாலதான் நான் வீட்டைவிட்டு ஓடிவிட்டேன் என்றானாம்.

*(- 'குமுதம் ரிப்போர்ட்டர்', 16.2.2003)*

இந்தத் தேர்வு முறை

- மாணவர்களை ஏன் பயம் காட்டுகிறது?

- இந்த தேர்வு முறையால் மாணவர்கள் ஏன் சாகிறார்கள்?

- இந்த தேர்வு முறை மாணவர்களைச் சாகடிக்குமானால் பயம் காட்டுமானால் இது உரிமை மீறல் இல்லையா?

**அப்போது கூட்டத்தில் இருந்த சித்ரா எனும் மாணவி தான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புவதாய் தலைவரிடம் அனுமதி கேட்கிறார். தலைவரும் அனுமதிக்கவே சித்ரா பேசுகிறார்.**

தேர்வு மட்டுமே கல்வியுரிமையைப் பாதிக்கவில்லை. ஆசிரியர் அடிப்பதால் பயந்து தற்கொலை செய்து கொண்ட குழந்தைகள் கூட உண்டு.



இதற்கு ஆதாரமாக சில பத்திரிக்கை செய்திகளைச் சொல்கிறேன் கேளுங்க.

*கலைவாணி என்ற பெண் ரெக்காட் நோட்டை ஆசிரியரிடம் ஒரு நாள் பிந்தி சமர்பித்தாள். தாமதித்தன் காரணமாக அந்த மாணவியின் தலையைப் பிடித்து இழுத்து அடித்து ஆசிரியர் கொடுமைப்படுத்தியதால் பின் கழுத்தில் அடிபட்டு வகுப்பிலேயே மயங்கி விழுந்துட்டாளாம் அந்த மாணவி.*

*- 'குமுதம் ரிப்போர்ட்டர்', 16.2.2003*

*ஒரு மாணவி பாடத்தில குறைவாக மார்க் வாங்கிட்டாளாம். அதனால் அவுங்க டீச்சர் மாணவியைத் திட்டி புறங்கையில அடிச்சாங்க. வெயில்ல சிமெண்ட் தரையில முட்டி போட வைச்சாங்களாம். வெயில் தாங்க முடியாம மயக்கம் போட்டு விழுந்துட்டாளாம்.*

*- 'நக்கீரன்', 3.12.2002*

சில பள்ளிகளில் அடிக்கிறதோட நிறுத்தாமக் கடுமையாகத் திட்டுறாங்க. குழந்தைகளோட பிரச்சனைகளை நேரடியாகக் கேட்டு வழிகாட்டுறதுக்குப் பதிலா கேவலமாகத் திட்டுறதால அவமானப்பட்டுத் தற்கொலை செய்து செத்து போன சம்பவங்களும் உண்டு. இப்படி அடிக்கிறதும் திட்டுறதும் வன்முறை இல்லையா? குழந்தைகளுக்குப் பள்ளிகள் மீது வெறுப்பை ஏற்படுத்தலையா? இந்த வெறுப்பு படிப்பில் ஆர்வத்தைக் குறைக்குமல்லவா? ஆகவே இச்செயல்களும் கல்வி உரிமைகளை மீறுவதுதான்.

சில பள்ளிகளில் கிராமத்தி-ருந்து வர்ற பிள்ளைகளை அல்லது தாழ்த்தப்பட்ட


வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளை இவங்க எல்லாம் படிக்க லாயக்கு இல்லை. இவங்க எல்லாம் எதுக்குத்தான் இங்க வர்றாங்களோ? என திட்டுவதால் படிப்பு பற்றி ஆர்வம் இளமையிலேயே குலைந்து போகிறது. இதுவும் கல்வியுரிமை மீறலாகாதா?

## தலைவர் உரை

இதுவரை கல்வியுரிமை எப்படியெல்லாம் மறுக்கப்படுகிறது என்பதை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறினீர்கள். கல்வியுரிமை என்பது பள்ளிக்கூடத்திற்கு போக முடியாம-ருப்பது மட்டுமல்ல. பள்ளியின் நிலை, பள்ளியில் அடிப்பது, மாணவர்களைத் திட்டுவது, மனப்பாடம் செய்ய கட்டாயப்படுத்துவது, சரியான வழிகாட்டுதல் இல்லாமை, சாதியைச் சொல்-த் திட்டுவது போன்ற நடவடிக்கைகளும் கல்வியுரிமை மறுப்பிலடங்கும் என்பதைப் புரிந்து கொண்டேன்.

நீங்களெல்லாம் பேசின பிறகு இன்னொரு வகைக் கல்விச் சூழலும் குழந்தைகளின் வளர்ச்சியைத் தடுக்கிறது என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன் -அதுதான்.

## குழந்தைகளின் பாடச்சுமை!




அளவுக்கும் மீறிய பாடங்களைச் சின்னஞ்சிறிய குழந்தைகளின் மீது சுமத்தி அவர்களைப் ***பொதி சுமப்பவராக*** மாற்றுவதும் ஒருவகை வன்முறை தான்.

இன்னொரு வகை வன்முறை உண்டு. அது என்னவென்றால் குழந்தைகள் மீது புரியாத இன்னொரு ***மொழியைத் திணித்து*** புரியாமல் மனப்பாடம் செய்ய வைத்துத் துன்புறுத்துவதும் வன்முறையே.

பாடம் தேர்வு பாடச் சுமை இவைகளால் குழந்தைகளின் ***விளையாட்டு உரிமையும் ஓய்வுரிமையும்*** மறுப்பது கல்வி உரிமை மீறலே. கல்வியுரிமை பற்றிப் பேசிய மாணவ மாணவியர்க்கும் அமைதி காத்து உரைகளைக் கேட்ட மாணவர் அனைவர்க்கும் நன்றி. நம்முடைய இவ்வுரிமைகள் மீறப்படாம-ருக்க இன்று நாம் உறுதிமொழி எடுத்துக் கொள்வோம் என்று முடிக்கிறேன்.

நம் பாடப் புத்தகங்கள் குழந்தைகளின் சிந்தனை வளர்ச்சிக்குதவும் கருவிகளாக அமையாமல் வெறும் தகவலுக்கு மட்டுமே முதன்மை தருகின்றன. குழந்தைகளின் வாழ்க்கை அனுபவங்களைச் சித்தரிக்காத பாடங்கள் குழந்தைகளின் சுமையைத் தான் அதிகரிக்கின்றன.

***- யஷ்பால் குழு அறிக்கை***



குறைந்த மதிப்பெண் பெறும் குழந்தை திறமையற்ற குழந்தைகளல்லர்.

எப்போதும் படித்துக்கொண்டே இருக்கும் குழந்தைகள் மட்டுமே அறிவு பெற்ற குழந்தைகளல்லர்.

உடல் ரீதியாக அடிக்கப்பெறும் குழந்தைகளை விட உணர்வு ரீதியாகத் தாக்கப்பெறுவது அதிகப் பாதிப்பைத் தரும்.

குழந்தைக்குக் கொடுக்கப் பெறும் அதிக அறிவுரைகள் எதிர்ப்புணர்வையே வளர்க்கும்.

பிற குழந்தைகளோடு ஒப்பிட்டுப் பேசுதல் பொறாமையையும் பகைமை யையும் வளர்க்கும்.

உறவினர் மற்றும் பிறர் முன்னும் குழந்தைகளின் குறைகளைப் பேசுதல், குழந்தைகளிடம் தாழ்வு மனப்பான்மையை வளர்க்கும்.

குழந்தைகளை விளையாட அனுமதியுங்கள். விளையாட்டும் ஒரு கல்வியே.

குடும்ப நிகழ்வுகளில் பங்கேற்கும் குழந்தை, பொறுப்புள்ள மனிதனாக வளர வாய்ப்பு அதிகம்.

- *'The Week', Sep1, 1998*

## வகுப்புப் பயிற்சி

**1. நீ பள்ளிக்கு வருவதில் சந்தோசப்படுகிறாயா? ஏன்? காரணங்களைத் தருக**

1.............................................................................................................................

2.............................................................................................................................

**2. உங்கள் ஊரில் பள்ளிக்கூடம் இருக்கிறதா? உண்டு/இல்லை ☑அடிக்கவும்.**

| | உண்டு | இல்லை |
|---|---|---|
| அ). தனித்தனி வகுப்பறைகள் உள்ளனவா? | ☐ | ☐ |
| ஆ). எல்லா வகுப்பிற்கும் ஆசிரியர்கள் இருக்கின்றனரா? | ☐ | ☐ |
| இ). கழிப்பறை இருக்கிறதா? | ☐ | ☐ |
| ஈ). விளையாட்டு மைதானம் இருக்கிறதா? | ☐ | ☐ |
| உ). கரும்பலகை இருக்கிறதா? | ☐ | ☐ |
| ஊ). முதலுதவி அளிக்கப்படுகிறதா? | ☐ | ☐ |
| எ). சத்துணவு வழங்கப்படுகிறதா? | ☐ | ☐ |
| ஏ). ஓய்வறை உள்ளதா? | ☐ | ☐ |

**இல்லையெனில்**

அ. உன் ஊருக்கும் பள்ளிக்கும் எவ்வளவு தூரம்?

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

ஆ. பள்ளிக்கு நீ நடந்து செல்கிறாயா அல்லது பேருந்தில் செல்கிறாயா?

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

இ. வீட்டிற்குச் சென்ற பிறகு பாடம் படிப்பதற்கு நேரம் கிடைக்கிறதா?

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

3. உங்கள் பள்ளியில் ஆசிரியர்கள் உங்களை அடிக்கிறார்களா? ☑அடிக்கவும்.

**ஆம்** ☐ **இல்லை** ☐

அ). ஒரு குழந்தை வகுப்பில் அடிக்கப்படுவதால் அந்தக் குழந்தைக்கு ஏற்படும் பாதிப்புகள் யாவை?

1.......................................................................................................................

2.......................................................................................................................

ஆ). நீ வகுப்பில் எப்போதாவது அடிக்கப்பட்டிருந்தால் அப்போது உன்னுடைய உணர்வு எப்படி இருந்தது என்பதை ஒரு தாளில் எழுதி வகுப்பில் வாசித்துக் காட்டவும்.

4. உன் பள்ளியில் உன்னை விளையாட அனுமதிக்கின்றனரா? ஆம் எனில் எப்போது?

.......................................................................................................................

.......................................................................................................................

5. உங்கள் பள்ளிக்கூடத்தில் நடத்தப்படும் தேர்வுகள் உன்னை பயமுறுத்துகிறதா? ஆம் எனில் எப்படி?

.......................................................................................................................

.......................................................................................................................

## வீட்டுப்பயிற்சி

6. உன் வீட்டுக்கு அருகில் தாய்மொழியில் கல்வி கற்பவர்கள் அதிகம் புத்தகச் சுமை சுமக்கிறார்களா? அல்லது ஆங்கில மொழியில் பயில்பவர்கள் அதிகச் சுமை சுமக்கிறார்களா? என்பதைக் கவனித்து வருக.

7. உனது ஊரில் அல்லது நீ வாழும் தெருவில் கீழ்க்கண்ட வினாக்களுக்கான பதிலைச் சேகரித்து வகுப்பில் பகிர்ந்து கொள்க.

அ). பள்ளிக்குச் செல்பவர்கள் எண்ணிக்கை

ஆ). இடையில் நிறுத்திக் கொண்டவர்கள் எண்ணிக்கை

இ). ஐந்தாம் வகுப்புவரை படித்தவர்கள் எண்ணிக்கை

ஈ). எட்டாம் வகுப்புவரை படித்தவர்கள் எண்ணிக்கை

உ). பத்தாம் வகுப்புவரை படித்தவர்கள் எண்ணிக்கை

ஊ). பன்னிரண்டாம் வகுப்புவரை படித்தவர்கள் எண்ணிக்கை

எ). ஏன் படிப்பை நிறுத்திக் கொண்டார்கள் என்பதற்கான காரணங்கள்

1)------------------------------------------------------------

2)------------------------------------------------------------

3)------------------------------------------------------------

4)------------------------------------------------------------

5)------------------------------------------------------------

ஏ). இவர்கள் படிப்பை நிறுத்திக் கொண்டது சரியா? ஏன்? காரணம் கூறுக?

ஐ). இவர்கள் படிப்பை நிறுத்தியதால் வாழ்வில் என்ன உரிமைகளையெல்லாம் இழந்தார்கள். இன்னும் என்னென்ன உரிமைகளை இழக்கப்போகிறார்கள் என்பதைப் பட்டிய-டுக.

| இழந்த உரிமைகள் | இழக்கப் போகின்ற உரிமைகள் |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |

ஓ). படிப்பை இழந்த குழந்தைகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதனை ஒரு சிலரைக் கண்டு அறிய முயலவும். அறிந்து வகுப்பில் பகிரவும்.

8. கிராமத்துக் கல்விச் சூழலையும், நகரத்தில் கல்விச் சூழலையும் ஒப்பிடுக? இச்சூழலை அறிவதற்கு உனக்கு வாய்ப்பில்லை எனில் இச்சூழல் பற்றி அறிந்தவரிடம் கேட்டறிந்து விவரங்களை வகுப்பில் பகிர்ந்து கொள்க.

**கேடில் விழுச்செல்வம் கல்வி**

**கல்விச் செல்வத்தை**
**குடிமக்கள் அனைவரது**
**பொதுச் சொத்தாக**
**மாற்றாத வரை**
**சுதந்திரம் ஒரு**
**மிட்டாய்ச் சுதந்திரமே.**




பாடம் 12



# குழந்தை நல உரிமை





**இடம்: வகுப்பறை**

ஆசிரியர் கீழ்க்கண்ட கேள்விகளை மாணவர்களிடம் கேட்டு மாணவர்கள் தரும் பதில்களைக் கரும்பலகையில் எழுதுகிறார்.

1. உங்கள் ஊரில் மருத்துவமனை இருக்கிறதா? ஆம் / இல்லை

ஆம் எனில் அது தனியார் மருத்துவமனையா? அரசு மருத்துவமனையா?

--------------------------------------------------------------------

2. தனியார் மருத்துவமனைக்குச் செல்வோர் யார்?

--------------------------------------------------------------------

அரசு மருத்துவமனைக்குச் செல்வோர் யார்?

--------------------------------------------------------------------

3. உங்கள் ஊரில் இருந்து மருத்துவமனை எவ்வளவு தொலைவில் உள்ளது?

--------------------------------------------------

4. அரசு மருத்துவமனையில் இலவசமாக மருத்துவம் பார்க்கப்படுகிறபோது ஏழைகள் ஏன் தனியார் மருத்துவமனைக்குச் செல்கின்றனர் என்பதற்கான இரண்டு காரணங்களைக் கேட்டு எழுதுக?

அ. ------------------------------------

ஆ. ------------------------------------

5. மருத்துவ வசதி உடனே கிடைக்காததால் உங்கள் ஊரில் குழந்தைகள் யாராவது இறந்திருக்கின்றனரா? **ஆம்/இல்லை**

---------------------------------------------------------------------------

6. உங்கள் ஊரில் ஊட்டச்சத்துணவு, கருவுற்ற தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் தரப்படுகிறதா? **ஆம்/இல்லை**

---------------------------------------------------------------------------

7. தாய்ப்பால்தான் குழந்தைகளுக்கு மிகச்சிறந்த ஊட்டச்சத்து என்பது உங்களுக்குத் தெரியுமா? **ஆம்/இல்லை**

---------------------------------------------------------------------------

அ). அத்தாய்ப்பால் பெறுவதும் ஒரு குழந்தையின் உரிமை என்பது உங்களுக்குத் தெரியுமா? **ஆம்/இல்லை**

---------------------------------------------------------------------------

ஆ). சரியான மருத்துவ வசதி பெறுவதும் குழந்தையின் உரிமை என்பது உங்களுக்குத் தெரியுமா? **ஆம்/இல்லை**

---------------------------------------------------------------------------

8. உங்கள் ஊரில் ஒரு குழந்தையைப் பாம்பு கடித்துவிட்டாலோ அல்லது நோய் ஏற்பட்டாலோ மருத்துவரை முத-ல் அணுகுவீர்களா? அல்லது வேறு நம்பிக்கைகளின் அடிப்படையில் வைத்தியம் பார்க்கிறார்களா?
(உ.ம். மந்திர தந்திரம்)

---------------------------------------------------------------------------

9. அ. உங்கள் ஊரில் குழந்தைகளுக்குக் கண்பார்வை பாதுகாக்கப்பட வைட்டமின் கொடுக்கப்படுகிறதா? **ஆம்/இல்லை**

---------------------------------------------------------------------------

ஆ. வயிற்றுப்போக்கைத் தடுக்க மாத்திரை கொடுக்கப்படுகிறதா? **ஆம்/இல்லை**

---------------------------------------------------------------------------

10. அ). உனக்கு உன் எடை தெரியுமா? **ஆம்/இல்லை**

---------------------------------------------------------------------------

ஆ). உன் தம்பி தங்கையர்க்கு எப்போது எடை எடுத்தார்கள்?

---------------------------------------------------------------------------

## உண்மை நிகழ்வு - 1



அது ஒரு சிறிய கிராமம். மாலை நேரம், இருள் மெல்ல கவிழ்ந்து வரும் நேரம். இரண்டே வயதான அக்குழந்தை குடிசையில் குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கிறது. அதோடு தொடர்ந்து வயிற்றுப் போக்கினால் சுருண்டு விட்டது. தம்பியைக் கவனித்துக் கொண்டிருந்த மணிமேகலைக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வயலுக்கு கூ- வேலை செய்யச் சென்ற தாய் இன்னும் திரும்பவில்லை. அப்பாவும் கூ- வேலைக்காக வெளியூர் சென்றுள்ளார். தாய் திரும்பி வருகிறாள். குழந்தையைக் கண்டு கவலைப் படுகிறாள். உடனே மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். மருத்துவமனையோ 54 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இன்னும் ஒருநாள் கூடவே உழைத்தால்தான் குழந்தையை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல முடியும். ஒரு பக்கம் குழந்தையின் அபாயகர நிலை. மறுபக்கம் கையில் காசின்மை, மருத்துவமனையோ தூரம். என்ன செய்வது?

*- 'Health for the Millenium' Oct 2002*

**சிந்திக்க**

- இப்பகுதியில் வரும் குழந்தையினுடைய வயிற்றுப் போக்கை நிறுத்த முடியாமைக்குரிய காரணங்கள் யாவை?

  அ. ............................................................ ஆ. ............................................................

- இந்தக் குழந்தையின் தாய் கவலைப்படுவதற்கான காரணம் என்ன?

  அ. ............................................................ ஆ. ............................................................

## உண்மை நிகழ்வு - 2

எங்களின் ஒரே மகள் சித்ரா. ஒரு மாசமா முதுகுக்குள்ளே ஒரு கட்டி அவளைப் படாத பாடு படுத்தியது. மருத்துவமனை கொண்டு சென்றோம். ஊசி, மருந்து வச்சு கரைச்சிடலாம் என்று டாக்டர் ஊசி போட்டார். மருந்து தந்தார் கட்டி கரையவில்லை. வேறு வழியில்லை. அறுவைசிகிச்சை செய்வோம் என்றார் டாக்டர். 2500 ரூபாய் கேட்டார். கொடுத்தோம். ஆபரேஷனுக்கு மகளை உள்ளே கொண்டு சென்ற டாக்டர் மகளைப் பிணமாகத்தான் திருப்பித் தந்தார். அழுது கொண்டிருந்த எங்களுக்கு ரூபாய் 5000 தந்தார். அப்பணத்தை அவர் முகத்திலேயே எறிந்து விட்டோம்.

***- குமுதம் ரிப்போர்ட்டர், 1.12.2002***

இந்தியாவில் 75 மில்-யன் குழந்தைகள் சத்துணவுக் குறைவால் அவதியுறுகின்றனர். குழந்தைப் பராமரிப்புக்காக அரசு ஒதுக்கியிருக்கும் நிதி 20 மில்-யன் குழந்தைகளை மட்டுமே சென்றடைகிறது.

*- அவுட்லுக், மார்ச் 18, 2002*

**சிந்தனை**


- சித்ராவின் சாவிற்குக் காரணம் என்ன?

  ---------------------------------------------------------------------

- சித்ராவிற்கு என்ன கிடைக்கவில்லை?

  ---------------------------------------------------------------------

## வகுப்புப் பயிற்சி



1. ஒரு குழந்தை நலமுடன் வாழ்வதற்கான நான்கு முக்கியமான தேவைகளை எழுதவும்.

அ).....................................................................................................

ஆ).....................................................................................................

இ).....................................................................................................

ஈ).....................................................................................................

2. மக்கள் அனைவருக்கும் நலவாழ்வு கிடைக்க, முக்கியமான பத்து பரிந்துரைகளை எழுதுக. பதில்கள் சுருக்கமாகவும், கூர்மையாகவும், அழுத்தமாகவும் இருக்க வேண்டும்.

அ).....................................................................................................

ஆ).....................................................................................................

இ).....................................................................................................

ஈ).....................................................................................................

இந்தியாவில் 11,000 குழந்தைகள் ஆண்டொன்றுக்கு (பாதுகாக்கக்கூடிய, (Preventable)நோய்களி-ருந்து பாதுகாக்கப்பட இயலாமல் இறக்கின்றனர். 1.5 மில்-யன் குழந்தைகள் வயிற்றுப்போக்கினால் மட்டும் இறக்கின்றனர். இதற்கான காரணங்கள் அதிக மக்கள் தொகை, சுகாதார வசதியின்மை, கிராமங்களிலும் ஆதிவாசி மக்கள் வாழும் இடங்களிலும் போதிய மருத்துவ வசதியின்மை, ஊட்டச்சத்து, உடல்நலம் பற்றிப் போதிய விழிப்புணர்வின்மை

*- 'Children and Society at Tubnce', University of New Orleans.*

உ)..................................................................................................................................

ஊ)..................................................................................................................................

எ)..................................................................................................................................

ஏ)..................................................................................................................................

ஐ)..................................................................................................................................

ஒ)..................................................................................................................................

3. ஊட்டச்சத்து குறைவு எவ்வாறெல்லாம் உடல் வளர்ச்சியையும், மன வளர்ச்சியையும், அறிவு வளர்ச்சியையும் பாதிக்கிறது என்பதை ஆசிரியரைக் கேட்டறிக?

மேலே **படித்த இரு நிகழ்வுகளிலும் காணும் வித்தியாசங்கள் யாவை?**

அ) முதல் நிகழ்வில் மீறப்படும் குழந்தை உரிமைகள் எவை?

-----------------------------------------------------------------------

ஆ) இரண்டாவது நிகழ்வில் மீறப்படும் குழந்தை உரிமைகள் எவை?

-----------------------------------------------------------------------

## *வீட்டுப்பயிற்சி*

4. உன் வகுப்பு மாணவர் இருவரோடு ஒரு மருத்துவமனைக்கு அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்திற்கோ செல்க.

அ). மருத்துவமனையைச் சுற்றிப் பார்க்கவும் அங்கு என்ன நடக்கிறது என்பதைக் கவனமாகக் கவனியுங்கள்.

**தமிழகத்தில் 30 சதவீத குழந்தைகள் குறைந்த எடையுடன் பிறக்கின்றன. மூன்றில் இரண்டு பங்கு குழந்தைகள் சத்துணவு இன்மையால் வாடுகின்றனர். தமிழகத்தில் பிறக்கும் 1000 குழந்தைகளில் 57 குழந்தைகள் ஒரு வயது முடியும் முன்பே இறந்துவிடுகின்றன.**

**உசிலம்பட்டிப் பகுதியில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 879 குழந்தைகளும், செல்லம்பட்டி பகுதியில் 850 குழந்தைகளும், நாகையில் 924 பெண்கள் மட்டுமே உள்ளனர் என தெரிய வந்துள்ளது.**

*(தினமணி 8.5.2000)*

WHO - உலக நல நிறுவனத்தின் கணக்குப்படி 1995ல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 38% குழந்தைகள் (168 மில்-யன்) குறைந்த எடை உள்ளவர்கள். வளரும் நாடுகளில் 206 மில்-யன் குழந்தைகள் வளர்ச்சிக் குன்றியவர்கள் மற்றும் 9% (49 மில்-யன்) சரியான உடல் எடையளவு உள்ள குழந்தைகளைக் காட்டிலும் ஓரளவு குறைந்த எடை உள்ள குழந்தைகளுக்கு 2.5 மடங்கும் மிக மோசமான எடை குறையுள்ள குழந்தைகளுக்கு 5 மடங்கும் அதிகமாக இறக்கும் வாய்ப்புள்ளது.

ஆதாரம் : *'Women's Health in South Asia'*

ஆ). கீழ்க்கண்ட வசதிகள் உங்கள் ஊர் மருத்துவமனையில் இருக்கின்றனவா? உண்டா? இல்லையா? ☑அடிக்கவும்

| | உண்டு | இல்லை |
|---|---|---|
| நோயாளிகளை ஏற்றிச்செல்லும் வாகனம் | ☐ | ☐ |
| சோதனைக் கூடம் | ☐ | ☐ |
| அறுவைச் சிகிச்சைக் கூடம் | ☐ | ☐ |
| போதிய மருத்துவர்கள் | ☐ | ☐ |
| போதிய செவி-யர்கள் | ☐ | ☐ |
| தூய்மையான பராமரிப்பு | ☐ | ☐ |
| மகப்பேறு பிரிவு | ☐ | ☐ |

இ) மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளோடு மருத்துவர்களும் செவி-யர்களும் நடந்துகொள்ளும் முறை உனக்கு மகிழ்ச்சியைத் தந்ததா?

**ஆம் / இல்லை**

ஈ) நீ சென்ற மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவு இருக்கிறதா?

**ஆம் / இல்லை**

இந்தியாவில் பிறக்கும் குழந்தைகளில் 1/3-யினர் குறைந்த எடையுடன் பிறக்கின்றனர்.

கிராமங்களில் பிரசவ இறப்பு குறிக்கப்படாம-ருப்பினும் அதன் விகிதம் 1000க்கு 4.4 ஆக உள்ளது.

*- National Family Health servey*

5. அ). நீ வாழும் கிராமம், தெரு, சேரிகளுக்குச் சென்று கீழ்க்கண்ட செய்திகளைச் சேகரிக்க

- **குடிநீர் வசதி இருக்கிறதா?**
- **உங்கள் ஊரில் தொற்றுநோய் பரவாமல் இருக்க மருந்து அடிக்கப்படுகிறதா?**
- **கழிவறைகள் உள்ளனவா?**
- **சாக்கடைகளைச் சுத்தம் செய்கின்றனரா?**

ஆ). அனுபவத்தை அறிக்கையாகத் தயாரிக்கவும். அறிக்கையில் உன்னுடைய ஆலோசனைகளையும் தருக.


இ). உன் அனுபவ அறிக்கையை வகுப்பில் வாசிக்கவும்.

ஈ). அறிக்கையின் இறுதியில் ஆசிரியர் தன் கருத்தைக் கூறுவார்.

**மருந்து, மருத்துவர், மருத்துவமனை இவை மட்டுமா ஆரோக்கியம்? இல்லை**

- *பாதுகாக்கப்பட்ட குடிநீர்*
- *அனைவருக்கும் சத்தான உணவு*
- *வேலை வாய்ப்பு*
- *போதிய வருவாய்*
- *ஓய்வு*
- *சுற்றுப்புறச் சுகாதாரம்*
- *பெண்களுக்குச் சம உரிமை*
- *அடிப்படை மருத்துவ வசதிகள்*

**இவையனைத்தையும் உள்ளடக்கியதுதான் ஆரோக்கியம். உங்கள் ஊரில் அனைவருக்கும் இவை கிடைக்கிறதா? கிடைப்பதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?**



## பாடம் 13



# குழந்தைப் பாதுகாப்பு உரிமை



குழந்தைகளே! இதுவரை நீங்கள் படித்த பாடங்களைக் கொஞ்சம் உங்கள் மனக்கண்முன் கொண்டு வாருங்கள். ஒரு குழந்தைக்கு இத்தனை வடிவங்களா என்ற ஆச்சரியம் உங்களுள் பலருக்கு எழுந்திருக்கலாம். ஐயோ! என்னைப் போன்ற குழந்தைகள் இப்படி எல்லாம் நடத்தப்படுகிறார்களே என்ற கவலை உங்கள் உள்ளத்தைத் தாக்கியிருக்கலாம்! ஏன் இம்மாதிரி உரிமை மீறல்களால் நீ கூட பாதிக்கப்பட்டிருக்கலாம். இக்குழந்தைகளை இந்த நிலைக்கு உள்ளாக்கியவர்மீது கோபமும் எழுந்திருக்கலாம்.

முதல் பாடத்தைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அதில் உங்களையே உங்களுக்கு அறிமுகப்படுத்துகிற போது உலகம் உங்கள் வரவை எப்படியெல்லாம் எதிர்பார்த்தது, உங்களையே நாளை என்றது - எனப் பார்த்தோம்.

இயல்பாகவே மகிழ்ச்சியோடு துள்ளி விளையாட வேண்டிய குழந்தைகளை

ஒளிவுமறைவின்மை, படைப்பாற்றல், சமத்துவம் போன்ற குணங்களை உள்ளடக்கிய குழந்தைகளை

குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்களும் உரிமை சாசனங்களும் உருவான பின்னும்

நாம் எப்படியெல்லாம் நடத்துகிறோம்?

குழந்தைகளைத்

⇨ தொழிலாளிகளாய்
⇨ தெருவோரக் குழந்தைகளாய்
⇨ கொத்தடிமைக் குழந்தைகளாய்
⇨ கல்வி மறுக்கப்பட்டவர்களாய்
⇨ நல உரிமை மறுக்கப்பட்டவர்களாய்

நடத்தப்படுவதையும் பார்க்கிறோம்.

***குழந்தைகளே!***

உங்கள் குழந்தைப் பண்பை இழக்கும் வகையில் நீங்கள் நடத்தப்படுவதை நீங்கள் அனுமதிக்கலாமா?

உங்களுக்கு உங்கள் கருத்தை வெளிப்படுத்த

ஒன்று கூடி அமைப்பாக மாற உரிமை உண்டென்பது உங்களுக்குத் தெரியுமா?

***குழந்தைகளே!***

- ➥ உங்களைப் பாகுபடுத்துகின்றனர்.
- ➥ உங்களைச் சுரண்டுகின்றனர்.
- ➥ நீங்கள் கருவாகி உருவாகும் வாழ்வுரிமையை மறுக்கின்றனர்.
- ➥ அரசுத் தொட்டில்களிலும் தெருக்களிலும் தூக்கி எறிகின்றனர்.
- ➥ கொத்தடிமைகளாக விற்கின்றனர்.
- ➥ உங்களைத் தொழிலாளியாக்கிக் குழந்தைப் பண்பை மறுக்கின்றனர்.
- ➥ பாடச்சுமையால், பள்ளி வன்முறையால், விளையாட்டு மற்றும் ஓய்வு மறுப்பால் உங்களை இயந்திரமாக்குகின்றனர்.

வாழ்வுரிமை, சமத்துவ உரிமை, சுதந்திரத்திற்கான உரிமை மறுக்கப்பட்ட நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

***குழந்தைகளே!***

மனித உரிமைக் கல்வி மாணவர்களாகிய நீங்கள் கீழ்க்கண்ட உரிமைகளை அரசுக்கு கோரிக்கையாக வையுங்கள்.



"வேண்டும்! வேண்டும்!

உரிமை வேண்டும்!

உயிர்வாழ,

வாழ்வை மேம்படுத்த

சமத்துவத்துமாய் வாழ

பெற்றோருடன் சேர்ந்து வாழ உரிமை வேண்டும்

**கருத்தைத் தெரிவிக்க**

***பிற குழந்தைகளுடன் சமாதானமாகக் கூட***

குடும்பத்தாருடன் உறவாட

பா-யல் சுரண்ட--ருந்து பாதுகாப்புப் பெற உரிமை வேண்டும்.

தனித்துவத்தைச் சுய கவுரவத்தைப்பேண,

சுரண்ட--ருந்து பாதுகாப்புப் பெற,



நாங்கள் கடத்தப்படாமலும்
விற்கப்படாமலும் இருக்கவும்
ஓய்வு நேரத்தைக் கழிக்கவும் உரிமை வேண்டும்

சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கவும்
கல்வி பயிலவும்
உடல் ஊனமுற்ற குழந்தைகளைச் சமமாக நடத்தவும்
உடல், உள்ள நலம் பேணவும் எங்களுக்கு உரிமை வேண்டும்.

அகதிக் குழந்தைகளின் உரிமைக் காக்கவும்
குழந்தைகள் ராணுவத்தில் பயன்படுத்தப்படாமல் இருக்கவும் உரிமை வேண்டும்

## வகுப்புப் பயிற்சி

*1. மேற்கண்ட கோரிக்கைகளைச் சுவரொட்டிகளாகத் தயாரித்துப் பள்ளி அறிக்கைப் பலகையில் சுவர்களில் அனைவரும் பார்க்கும்படி வைக்கவும்.*

*2. மேற்கண்ட உரிமைகளில் மிக முக்கியமான ஐந்தைத் தேர்வு செய்து ஏன் முக்கியம் என்பதை காரணத்துடன் விளக்குக?*

அ. முக்கிய உரிமை ஒன்று ...

**காரணங்கள்** ..................................................................................................

..................................................................................................

..................................................................................................

ஆ. முக்கிய உரிமை இரண்டு ...

**காரணங்கள்** ..................................................................................................

..................................................................................................

..................................................................................................

இ. முக்கிய உரிமை மூன்று ...

**காரணங்கள்** ..................................................................................................

..................................................................................................

..................................................................................................

ஈ. முக்கிய உரிமை நான்கு ...

**காரணங்கள்** ..............................................................................

..............................................................................

..............................................................................

உ. முக்கிய உரிமை ஐந்து ...

**காரணங்கள்** ..............................................................................

..............................................................................

..............................................................................

3. மேற்கண்ட உரிமைகளில் நீயறிந்த வகையில் குழந்தைகளுக்கு மீறப்படும் உரிமைகளைப் பட்டிய-டுக?

| | |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

## வீட்டுப்பயிற்சி

4). அ). குழந்தைப் பருவம் நிறைவு பெற குழந்தை உரிமைகள் தேவை என்ற கருத்தைச் சித்தரிக்கும் ஓவியம் ஒன்றை வரைந்து அதன் பொருளை வகுப்பில் விளக்கவும்.

ஆ). ஓவியங்களைப் பள்ளியின் தகவல் பலகையில் ஒட்டி வைக்கவும்.

இ). ஆசிரியர் எல்லா வகுப்பு மாணவர்களையும் பாராட்டி ஓவியங்களைப் பற்றிய தனது ஒட்டுமொத்தமான சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளவும்.

5. அ). நீங்கள் படித்த பாடங்களில் நீங்கள் மிகவும் விரும்பிய மூன்று பாடங்கள் யாவை? அதற்கான மூன்று காரணங்களைத் தருக. காரணங்களை எழுதி வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.

ஆ). எந்தப் பாடம் உன் உணர்வை வெகுவாகப் பாதித்தது? (ஒரு பாடம் மட்டும்) ஏன்? காரணங்களை எழுதி வகுப்பில் பகிர்ந்து கொள்க.

இ). எதிர்காலத்தில் எவ்வழியிலெல்லாம் குழந்தை உரிமைகளைப் பாதுகாக்க முயல்வாய்? 10 வரிகளில் எழுதி வகுப்பில் பகிர்ந்து கொள்க.



## பாடம் 14

# சாதனைக் குழந்தைகள்


### சாதனைக் குழந்தை 1 : மருந்தாகும் உணவு

பன்னிரெண்டு வயதான இராமலட்சுமி, சிவகாசியைச் சேர்ந்த ஏழைத் தொழிலாளியின் ஏழு குழந்தைகளில் ஒருவர் இவர். மூன்றாவது வரை படித்துவிட்டுத் தீப்பெட்டித் தயாரிக்கும் வேலை செய்யும் ஒரு குழந்தைத் தொழிலாளி. படிக்க வேண்டும் என்ற ஆசை நெஞ்சு நிறைய இருந்தாலும் படிக்க வசதியில்லா வறுமை நிலை. சிவகாசியில் குழந்தைத் தொழிலாளர்களுக்கான சிறப்புப் பள்ளியில் சேர்க்கப்பட்டாள். காலையில் பள்ளி சென்று மாலையில் திரும்பும் இராமலெட்சுமி இரவில் தீப்பெட்டி தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டு வந்தாள். இவ்வேளையில்தான் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் 'மருந்தாகும் உணவு' என்ற பொதுத் தலைப்பிலான கட்டுரை வரவேற்கப்பட்டது. இதைப் பார்த்தவுடன் குழந்தைகளுக்கான பானம் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு ஏற்படவே, பணக்காரக் குழந்தைகளுக்கான பானங்களில் என்னென்ன மூலப் பொருட்கள் உள்ளன என்பது குறித்து ஆசிரியையிடம் கேட்டறிந்தார். பல்வேறு தானியங்களைக் கொண்டு மாவுக் கலவையைத் தயாரித்தாள். அந்த மாவுக் கலவைக்கு 'ஏழைகளின் பானம்' என்று பெயரிட்டாள். இம்மாவுக் கலவை குறித்த கட்டுரை மாவட்ட, மாநில பின்னர் தேசிய அளவில் சிறந்த கட்டுரைகளுள் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து குழந்தைத் தொழிலாளராக இருந்த இவருக்குச் சில தினங்களுக்கு முன் மைசூரில் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் துவக்கி வைத்த அறிவியல் மாநாட்டில் இளம் விஞ்ஞானி விருது வழங்கப்பட்டது.




*- 'குமுதம்' - 10.02.2003.*

**சாதனைக் குழந்தை 2: கடுகில் உலகம்**



வெள்ளைக் கடுகில் கூர்மையான பென்சிலால் தனக்குப் பிடித்த உருவங்களை ஒரு நிமிடத்திற்குள் வரைந்து விடுகிறார்.

ஒரு கடுகில் ஆங்கில எழுத்து அத்தனையும் எழுதியிருக்கிறார். ஒன்றில் திருக்குறள், மற்றொன்றில் தாஜ்மகால், இன்னொன்றில் உலகப்படத்தை வரைந்துள்ளார். இவை தவிர மிளகாய் விதைகளில், முட்டையில், மாத்திரைகளில் பல பொருள்களை வரைந்துள்ளார். சேலம் மாவட்டம் தம்மம்பட்டியில் 7ஆம் வகுப்புப் படிக்கின்ற போதே ஏதாவது சாதிக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட வெங்கடேசனின் படிப்பு பத்தாம் வகுப்போடு நின்று போனது. பல்வேறு பரிசுகளை, பல நிறுவனங்களி-ருந்தும் பெற்றிருக்கின்றார். இவரின் ஆசை, கம்ப்யூட்டர் படிக்க வேண்டும் என்பது தான்.

*- நந்தன், ஏப்ரல் 1998*

**சாதனைக் குழந்தை 3: கால்பந்தில் வெற்றி குவிக்கும் ஊனமுற்ற மாணவி**

ஊனம் ஒரு குறையல்ல என்ற வார்த்தையை உண்மையாக்கிக் கொண்டு இருக்கிறார் திண்டுக்கல் புனித வளனார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி சரண்யா. 15 வயதாகும் இவர் 10வது வகுப்புத் தேர்வு எழுதி உள்ளார். திண்டுக்கல் அருகே உள்ள அக்கரைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியரின் மகளான சரண்யா பிறவியிலேயே **வலது கையின் முழங்கைக்குக் கீழ்ப் பகுதிகள் இல்லை.**



பள்ளியில் சேர்ந்த அந்தச் சிறுமிக்குக் கால்பந்தின் மீது காதல் அதிகம். கால்பந்து வீராங்கனையாக வேண்டும் என்ற நினைவுகளோடு கால்பந்து அணியில் சேர விரும்பி பயிற்சியாளரை அணுகினார். முத-ல் அவரது நிலையைப் பார்த்து மறுத்த பயிற்சியாளர் சரண்யாவின் விடா முயற்சியின் பலனாகப் பள்ளியின் கால்பந்து அணியில் சேர்த்துக் கொண்டார்.

இரண்டு கைகளும் உள்ள வீராங்கனைகள்கூட திணறும் வகையில் சரண்யாவின் அபார ஆட்டம் அனைவரையும் ஆச்சயப்பட வைத்தது. கால்பந்து அணியின் முன்கள ஆட்டக்காரராகச் சரண்யா

விளையாடும் போட்டிகளில் எல்லாம் எப்படியாவது கோல் போட்டுவிடுவாராம். அணியின் வெற்றிக்கு எப்போதும் சரண்யாவின் விளையாட்டுதான் காரணமாம்.

சரண்யா இதுவரை மாவட்ட அளவில் மட்டுமின்றி மாநில அளவிலும் கடந்த ஆண்டு நெல்லையில் நடந்த மாநில அளவிலான கால்பந்துப் போட்டியிலும் கலந்து கொண்டு சாதனை புரிந்துள்ளார்.

நடைபெறவிருக்கும் 16 வயதுக்கு உட்பட்ட மகளிர் கால்பந்துப் போட்டியில் தமிழக அணி சார்பில் கலந்துகொள்ள இவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். மகளிருக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் சரண்யா கூறுகையில் 'ஊனம் என்று யாரும் வீட்டி லேயே முடங்கிக் கிடக்கக்கூடாது. மனதளவில் யாருக்கும் கெடுதல் நினைப்பவர்கள் அனைவரும் ஊனமானவர்கள்தாம். கால்பந்து போட்டியின்போது எதிரணியினர் கீழே தள்ளி விட்டால் இரண்டு கைகள் இருந்தால் கையை ஊன்றி உடம்பில் காயம்படாமல் தப்பிக்கலாம். ஆனால் என்னால் அது முடியாது. இருந்தாலும் அந்தக் காயங்கள் எல்லாம் ஒரு பொருட்டல்ல' என்று கூறுகிறார் சரண்யா.

*- 'மாலை முரசு' 20.5.2003*

## வகுப்புப்பயிற்சி

1. இக்குழந்தைகளின் சாதனைக்குரிய காரணங்கள் யாவை?

   அ). ..........................................................................................................

   ஆ) ..........................................................................................................

2. மேற்கண்ட குழந்தைகளின் சாதனைக்கு அவர்களின் எந்தெந்தத் தன்மைகள் தடையாக இல்லை என்பதனைக் கண்டறிந்து வரிசைப்படுத்தவும்.

   ----------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------

3. இச்சாதனைகளி-ருந்து நீ கற்றுக் கொண்ட பாடங்கள் யாவை?

   ----------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------

   ----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

4. நீயும் சாதனைக் குழந்தையாக மாற வேண்டுமானால் உனக்கு என்னென்ன தேவைப்படுகிறது?

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

5. நீ எந்தெந்த துறைகளில் சாதனை படைக்க விரும்புகிறாய் என்பதை ✓ செய்க

அ). விஞ்ஞானி ☐

ஆ). ஓவியர் ☐

இ). நல்லாசிரியர் ☐

ஈ). தலைவர் ☐

உ). சமூக சேவகர் ☐

ஊ). மருத்துவர் ☐

எ). கைவினைஞர் ☐

ஏ). இயற்கை விவசாயம் ☐

ஐ). விளையாட்டு வீரர் ☐

ஒ). திரைப்பட நடிகர் ☐

ஓ). கணினி வல்லுநர் ☐

ஔ).வழக்குரைஞர் ☐

6. மேற்கண்ட துறைகளில் சாதனை படைக்க உன் பெற்றோர் ஊக்குவிக்கிறார்களா? ஆம் எனில் எப்படி?

--------------------------------------------------------------------

--------------------------------------------------------------------

--------------------------------------------------------------------

7. சாதனைகள் படைக்க உனக்குள்ள தடைகள் யாவை?

**எ.கா.** பெற்றோர் எதிர்ப்பு ("படிப்பில் மட்டும் கவனம் செலுத்து" என கூறல்)

1. அ)................................................... இ)...................................................

2. ஆ)................................................... ஈ)...................................................

## வீட்டுப்பயிற்சி

8. நீயறிந்த சாதனைக் குழந்தைகளின் வரலாற்றைச் சேகரித்து வகுப்பில் பகிர்ந்து கொள்க.

9. அ) உன் வகுப்பில் படிக்கும் நண்பர்களிடம் மறைந்திருக்கும் தனித் திறமைகளை நீ அறிந்திருக்கிறாயா?

ஆ). அறிந்திருந்தால் அவற்றை வரிசைப்படுத்தி வகுப்பில் பகிர்ந்து கொள்க.

10. குழந்தைகளிடம் இயல்பாக மறைந்திருக்கின்ற திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்புகள் மறுக்கப்படுவதால் அவர்கள் இழக்கும் உரிமைகள் யாவை?

--------------------------------------------------------------------

--------------------------------------------------------------------

11. உன் வகுப்பில் ஆசிரியர் உன் திறமைகளைக் கண்டறிந்து வளர்க்க ஊக்குவித்துள்ளாரா? ஆம் எனில் எப்படி?

--------------------------------------------------------------------

--------------------------------------------------------------------

--------------------------------------------------------------------

பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங் கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்து விடு பாப்பா! - அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா!

*- பாரதியார்*

# ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை

☞ குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை 1989-ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள் ஐ.நா- சபையின் பொதுக்குழுவால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

☞ இந்த உடன்படிக்கையில் 1992ஆம் ஆண்டு இந்தியா கையெழுத்திட்டது. 2002வரை அனைத்து உலக நாடு களும் இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டன. (அமெரிக்காவும், சோமா--யாவும் தவிர)

☞ இந்த உடன்படிக்கைகளின் வழிகாட்டு நெறி ''குழந்தைகளுக்கே முத-டம்'' என்பதாகும்.

☞ இந்த நெறிப்படி எல்லாக் காலத்திலும் குழந்தைகளின் அவசியமான தேவை களைப் பூர்த்தி செய்வதற்கு அனைத்து வகை வளங்களிலும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

☞ சமுதாயத்தில் குழந்தைகள் நியாயமான பங்கைப் பெறுவதற்கு எல்லா நாடு களும் உத்திரவாதம் செய்ய வேண்டும்.



### சில வழிகாட்டு நெறிகள் (அடிப்படையான)


- சமத்துவமும் பாகுபாடின்மையும்
- குழந்தைகளின் நலனுக்கு முன்னுரிமை
- குழந்தைகளின் எல்லா உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய கடமை
- பெற்றோர்களின் பொறுப்புகளையும் உரிமைகளையும் மதிக்க வேண்டியது அரசின் கடமை

### நான்கு வகையான அடிப்படை உரிமைகள்

- உயிர் வாழ்வதற்கான உரிமை
- முன்னேற்றத்திற்கான உரிமை
- பாதுகாப்பிற்கான உரிமை
- பங்கேற்பதற்கான உரிமை



### உயிர் வாழ்வதற்கான உரிமை என்பது......



- உயிருக்கான உரிமை
- உயர்ந்தபட்ச தரமான உடல்நலம், சத்தான உணவு, வாழ போதுமான வசதிகள்
- பெயர் வைத்துக்கொள்ள உரிமை
- ஒரு நாட்டைச் சேர்ந்தவராக வாழ உரிமை



### பாதுகாப்பிற்கான உரிமை என்பது ......

- அனைத்து வித சுரண்டல்களிருந்தும்
- தீங்குகளிருந்தும்
- மனிதாபிமானமற்ற முறைகளிருந்தும்
- தரக்குறைவாக நடத்துவதிருந்தும்
- குறிப்பாக அவசர நிலை காலங்களிலும் ராணுவப் பிரச்சனை காலங்களிலும்

### முன்னேற்றத்திற்கான உரிமை என்பது.........



- ❖ விளையாடுவதற்கான உரிமை
- ❖ கல்விக்கான உரிமை
- ❖ குழந்தைப்பருவ வளர்ச்சிக்கான
- ❖ குழந்தைப் பராமரிப்பதற்கான
- ❖ சமூகப் பாதுகாப்பிற்கான
- ❖ ஓய்வு மற்றும் கலாச்சார நடவடிக்கைகளுக்கான உரிமை



### பங்கேற்பிற்கான உரிமை என்பது ......

- குழந்தையின் கருத்துக்களை மதிப்பது
- கருத்துக்களை வெளிப்படுத்த சுதந்திரம்
- தகவல் பெற உரிமை
- சிந்திப்பதற்கான உரிமை
- சிந்தனைப்படி நடக்க, விரும்பிய மதத்தைத் தேர்ந்தெடுக்க உரிமை.

**விதி 1 - குழந்தை - வரையறை**

இவ்வுடன்படிக்கையின்படி 18 வயதுக்குக் குறைந்த அனைவரும் குழந்தைகளே

**விதி 2- பாகுபாடின்மை**

இனம் நிறம், பால், மொழி, சமயம், அரசியல், தேசியம், தேசிய இனம், இயலாமை, பிறப்பு இவைகளின் அடிப்படையில் குழந்தைகள் மீது பாகுபாடு காட்டப்பெறல் கூடாது.

**விதி 3 - குழந்தையை மையப்படுத்துதல்**

குழந்தைகளுக்கான செயற்பாடுகளில் குழந்தைகளுக்கான முதன்மைத் தேவைகளை மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும்.

**விதி - 5 பெற்றோர், குடும்பம், சமூகத்தின் உரிமைகளும் கடமைகளும்**

குழந்தைகளின் உரிமைகளைக் குழந்தைகள் சரியாகப் பயன்படுத்தும் வகையிலும், அவர்களின் ஆற்றல்களை சரியாக வெளிப்படுத்தும் வகையிலும் வளர்வதற்கான வழிவகைகள் செய்து தருவதிலும் பெற்றோர்களுக்கு இருக்கும் பொறுப்புகளை, உரிமைகளை உறுப்பு நாடுகள் மதிக்கவேண்டும்.

**விதி6- வாழ்வும் முன்னேற்றமும்**

(1). ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படையிலேயே உள்ளார்ந்த உயிர் வாழும் உரிமையுண்டு.

(2). குழந்தைகள் உயிர் வாழவும் வளர்ச்சியை உத்தரவாதப்படுத்தவும் அரசு உறுதி செய்ய வேண்டும்.

**விதி 7 - பெயரும் குடியுரிமையும்**

குழந்தை பிறந்தவுடன் பதிவு செய்யப்பட வேண்டும். குழந்தைகள் தமக்கென்று ஒரு பெயரையும், ஒரு தேசத்தையும் கொள்ளுவதற்கு உரிமையுண்டு.

**விதி 8 - அடையாளத்தைப் பாதுகாத்தல்**

குழந்தைகளின் தனித்த அடையாளம், தேசியம், பெயர் இவற்றை உறுப்பு நாடுகள் மதித்து பாதுகாக்க வேண்டும்.

**விதி 9 - பெற்றோரிடமிருந்து பிரிக்கப்படாமல் இருத்தல்**

குழந்தைகளின் விருப்பத்திற்கு மாறாக அவர்களின் பெற்றோர்களிடமிருந்து குழந்தைகளைப் பிரித்து வைப்பதற்கான உரிமையில்லை.

**விதி 10 - குடும்பத்தோடு சேர்ந்து வாழ்தல்**

ஒரு குழந்தை, தன் பெற்றோரோடு வாழ விரும்பி அவர்கள் வாழும் நாட்டிற்கு செல்வதற்கோ அல்லது வேறு ஒரு நாட்டிருந்து வெளியேறுவதற்கோ ஒரு குழந்தையிடமிருந்து பெறும் விண்ணப்பத்தை அரசு மனிதாபிமானத்தோடு அணுக வேண்டும்.

**விதி 11 - சடத்திற்குப் புறம்பாக நாட்டிருந்து அனுப்புதல்**

சட்டத்திற்குப் புறம்பாகக் குழந்தைகளை அந்நிய நாட்டிற்கு அனுப்புதலை அனுமதிக்க முடியாது.

**விதி 12 - கருத்துக்களை வெளிப்படுத்துதல்**

ஒரு குழந்தைக்குத் தனக்கான சொந்த கருத்துக்களை உருவாக்கிக்கொள்ளும் உரிமை உண்டு. அக்கருத்துக்களைத் தைரியமாகத் தாராளமாக எடுத்துரைக்க முடியும் என்ற உத்திரவாதத்தை உறுப்பு நாடுகள் உறுதியளிக்க வேண்டும்

**விதி 13 - கருத்துக்களைத் தெரிவிக்கவும் செய்திகளைப் பெறுவதற்குமான சுதந்திரம்**

குழந்தைகளுக்குக் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்த உரிமையுண்டு. வாய்மொழியாகவோ, அச்சு வடிவமாகவோ கலை இலக்கிய வடிவிலோ கருத்துக்களை அறியவும் பெற்றுக்கொள்ளவும் உரிமையுண்டு.

**விதி 14 - மனசாட்சிக்கும் சமயத்திற்குமான சுதந்திரம்**

குழந்தைகளுக்குச் சிந்திக்கின்ற உரிமையும் மனசாட்சி உரிமையும், சமய உரிமையும் உண்டு.

**விதி 15 - சங்கமாகும் உரிமை**

குழந்தைகள் குழுவாகக் கூடுவதற்கும், பிறரோடு தொடர்பு கொள்வதற்கும் உரிமையுண்டு.

**விதி 16 - அந்தரங்கம், மரியாதை, புகழ்**

குழந்தைகளின் அந்தரங்கம், குடும்பம், வீடு மற்றும் கடிதம் போன்ற போக்குவரத்தின் மீது எந்த தலையீடுமின்றி மதிக்கப்பட வேண்டும்.

**விதி 17 தகவல் மற்றும் தொடர்பு சாதனங்களுக்கான வாய்ப்பு**

குழந்தைகளின் முழுவளர்ச்சி கருதி தேசிய அளவிலும் அகில உலக அளவிலும் சமூகத் தொடர்பு சாதனங்கள் மூலம் கிடைக்கின்ற செய்திகளைக் குழந்தைகள் பெறுகின்ற வாய்ப்பு உருவாக்கப்படவேண்டும்.

- குழந்தைகள் தொடர்பான நூல்கள் உருவாக்கப்படவேண்டும்
- சிறுபான்மைச் சமூகம் சார்ந்த குழந்தைகளின் மொழிசார்ந்த தேவைகளைக் காக்கும் வகையில் சமூகத் தொடர்பு சாதனங்களின் செயல்பாடு அமைதல் வேண்டும்.

**விதி 18 - பெற்றோரின் கடமைகள்**

தாய் தந்தை இருவருக்கும் குழந்தையை வளர்த்தெடுக்கவும் அவர்தம் முழுமையான வளர்ச்சிக்கு வழி காணவும் கடமையுண்டு.

**விதி 19 - தவறான முறையில் பயன்படுத்தப்படுதலும் புறக்கணிக்கப்படுதலும்**

உடல், மன ரீதியான வன்முறைகளிருந்தும், சுரண்டல் மற்றும் பாயல் வன்முறையிருந்தும் புறக்கணித்தல், அவமானப்படுத்துதருந்தும் பாதுகாக்கப்பட உரிமையுண்டு.

**விதி 20 - பெற்றோர் இல்லா சூழ-ல் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு**

ஒரு குழந்தை அதன் குடும்ப சூழருந்து பிரிந்து வாழவேண்டிய சூழல் ஏற்பட்டால் அந்தக் குழந்தைக்குக் கூடுதல் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

**விதி 21 - தத்தெடுத்தல்**

அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகள் மட்டுமே குழந்தைகளைத் தத்தெடுக்கும் உரிமை பெற்றுள்ளன என்பதை அரசு உத்திரவாதப்படுத்த வேண்டும்.

**விதி 22 - அகதிக் குழந்தைகள்**

அகில உலக அல்லது உள்நாட்டுச் சட்டத்திற்கு உட்பட்டு, அகதி அந்தஸ்து கோரும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு பெற உரிமையுண்டு.

**விதி 23 - ஊனமுற்ற குழந்தைகள்**

உடல் மற்றும் உள்ள ரீதியாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகள் முழுமையான வாழ்வு பெறவும், அவர்தம் மாண்பும், சுயசார்பும், சமூக பங்கேற்பும் பாதுகாக்கப் பெற உரிமையுண்டு.

**விதி 24 - குழந்தைகளின் நல உரிமை**

ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமான உடல் நலத்தை அனுபவித்திட உரிமையுண்டு. உடல் நலம் என்பது சத்தான உணவையும் தூய்மையான குடிநீரையும் உள்ளடக்கியது.

- ➥ அரசு, குழந்தை மரணத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
- ➥ ஊட்டச்சத்துக் குறைவையும் நோய்களையும் எதிர்த்திடப் போதுமான சத்தான உணவையும்
- ➥ தூய்மையான குடிநீரையும் வழங்கிட வேண்டும்.
- ➥ தாய்மார்களுக்குக் கர்ப்பக்காலத்திலும் பிரசவத்திற்குப் பின்பும் தேவையான நலபாதுகாப்புக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்

**விதி 26 - சமூகப்பாதுகாப்பு**

ஒவ்வொரு குழந்தையும் சமூகப்பாதுகாப்பைப் பெறுவதற்கு உரிமையுண்டு. இப்பாதுகாப்பை அனைத்துக் குழந்தைகளும் பெறும் அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**விதி 27 - குழந்தைகளின் வாழ்க்கைத்தரம்**

குழந்தையின் உடல், உள்ளம், ஆன்மீகம், ஒழுக்கம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சி கருதி குழந்தைகளின் தரமான வாழ்விற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

**விதி 28 - கல்வி உரிமை**

ஒவ்வொரு குழந்தைக்கும் இலவசத் தரமான கட்டாய ஆரம்ப கல்விக்கு உரிமையுண்டு. ஒவ்வொரு குழந்தைக்கும் தொழிற்கல்வி உயர்நிலைக்கல்வி வாய்ப்புகள் எளிதில் கிட்டக்கூடியதாய் அமைதல் வேண்டும். குழந்தையின் கல்வி என்பது குழந்தையின் தனி மனித ஆளுமை, திறமைகள், உடல் மற்றும் மன ரீதியான திறமைகள் வெளிப்படும் அளவுக்கு அமைதல் வேண்டும்.

**விதி 29 - கல்வியின் நோக்கம்**

குழந்தையின் கல்வி குழந்தையின் ஆளுமையையும், திறமைகளையும் வெளிப்படுத்துமளவிற்கும், மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் வளர்த்தெடுக்கும் வகையிலும் அமைதல் வேண்டும்.

**விதி 30 - சிறுபான்மையினரும் பூர்விக இனக் குழந்தைகளும்**

சமய, மொழி, இனம், (சிறுபான்மை) சமூகம் சார்ந்த குழந்தைகளுக்கு அவர்கள் சார்ந்த கலாச்சாரத்தை அனுபவிக்கவும் ஒரு குறிப்பிட்ட சமயத்தைத் தழுவிக் கடைபிடிக்கவும் அவர்தம் தாய் மொழியைப் பயன்படுத்தவும் உரிமையுண்டு.

**விதி 31 - விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு**

அனைத்துக் குழந்தைகளுக்கும், ஓய்வெடுக்கவும், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கை அனுபவிக்கவும் கலாச்சார வாழ்க்கை மற்றும் கலைகளில் சுதந்திரமாகப் பங்கெடுக்கவும் உரிமையுண்டு.

**விதி 32 - பொருளாதாரச் சுரண்டல்**

பொருளாதாரச் சுரண்ட--ருந்தும், அபாயகரமான வேலைகளில் ஈடுபடுத்தப்படுத--ருந்தும் குழந்தைகளின் உடல், மன, ஆன்ம, ஒழுக்க, மற்றும் சமூக மேம்பாட்டிற்கு ஊறு விளைவிக்கக் கூடிய எந்த ஒரு வேலையைச் செய்வதி-ருந்தும் பாதுகாப்புப் பெற உரிமையுண்டு.

**விதி 33 - போதைப்பொருள் உபயோகம்**

போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதி-ருந்து குழந்தைகள் பாதுகாக்கப் பெறும் பொருட்டு அரசு சட்டப்பூர்வ, சமூக, நிர்வாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**விதி 34 - பா-யல் சுதந்திரம்**

எல்லா வகையான பா-யல் ரீதியான சுரண்டல்களி-ருந்தும் கொடுமைகளி-ருந்தும் குழந்தைகள் பாதுகாக்கப்பட உரிமையுண்டு.

**விதி 35 - விற்றலும் கடத்தலும்**

எந்த நோக்கத்திற்காகவும் எந்த விதத்திலும் குழந்தைகளை வாங்குவதை விற்கப்படுவதை, கடத்தப்படுவதை, இடம்பெயர்க்கப்படுவதை தடுப்பதற்குத் தேவையான தேசிய அளவிலான இரு நாடுகளுக்கிடையேயான பல நாடுகளுக்குகிடையேயான எல்லா நடவடிக்கைகளையும் உறுப்பு நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

**விதி 37 *சித்ரவதை, சுதந்திரமின்மை, கொடூரத் தண்டனை***

எந்தக் குழந்தையையும் சித்ரவதை, மனிதாபிமானமற்ற நடவடிக்கை, கொடூரமான தண்டனைக்கு உட்படுத்தக்கூடாது.